R.4.P6 21

நரவாகன தத்த சரிதம்

(1725)

GF
0-,1C9611
65

S. சோமசுந்தர தேசிகர்

(1935)

1725

நரவாகன தத்த சரிதம்

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

ச. சோமசுந்தர தேசிகர்

1935

உரிமை ஆசிரியர்க்கே]

[விலை அணா 10

முகவுரை

மாபெருங் கவிஞரான குணாட்டியர் பைசாசமொழியில் எழுதிய பிருகத்கதையின் வழிவந்த தமிழ்நூலான பெருங்கதையானது உதயணன் கதையை விரிவாகக் கூறுகின்றது. அவனது மகனான நரவாகனன் சரிதையைச் சுருக்கிக் கூறுகின்றது. பெருங்கதையைச் சுருக்கிச் செய்யப்பட்ட உதயண குமார காவியமும் நரவாகனனுடைய கதையை மிக மிகச் சுருக்கமாகக் கூறுகின்றது. வீரசோழியம் என்ற இலக்கணநூலிலே சில பாக்கள் உதயணனைக் குறித்துக் காணப்படுகின்றன. அவை எந்த நூலுக்குரியவையென்று அறிவதற்கில்லை.

நரவாகனனுடைய சரிதத்தை விரிவாகக் கூறும் நூல் ஒன்றும் தமிழில் இருப்பதாகத் தெரியவில்லை. வடமொழியிலே பிருகத்கதா சுலோக சங்கிரகம், பிருகத் கதா மஞ்சரி, கதா சரித் சாகரம் என்ற நூல்களெல்லாம் நரவாகனனுடைய சரிதத்தை விரிவாகக் கூறுகின்றன. அவற்றைப் பின்பற்றி இந்தச் சரிதம் ஒருவாறு எழுதப்படுகிறது. புத்தமதச் சார்பாகக் காணப்படும் உதயணன் சரிதமும் இதற்கு அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுளது.

நரவாகன தத்த சரிதம்

தோற்றுவாய்

குணாட்டியர் என்ற மாபெருங் கவிஞர் பைசாச மொழியில் பிருகத்கதை என்றபேருடைய நூல் ஒன்று இயற்றியிருக்கின்றார் என்ற செய்தி உலகு அறிந்தது. இந்தக் கதையும் இராமாயணம் மஹாபாரதம் என்னும் இரு பெருங் காவியங்களோடு வைத்து எண்ணப்படும் பெருமை வாய்ந்தது. பெருங்கதை யெனப் பொருள்படும் பிருகத்கதை மிக்க விரிவானதாக இருந்தமையின் காஷ்மீர தேசத்திலே சற்று முன் பின்னாகப் பதினொராம் நூற்றாண்டில் வாழ்ந்த சோம தேவர் என்பவர் பிருகத்கதையின் வழித்தாக கதாசரித் சாகரம் என்ற நூலையும், க்ஷேமேந்திரர் என்பவர் பிருகத்கதா மஞ்சரி என்ற நூலையும் இயற்றினார்கள். இவை வத்தவ நாட்டு அரசனான உதயணன், அவனது மகனும் வித்தியாதர அரசனுமான நரவாகன தத்தன் இவர்களுடைய கதையையும், இடையில் பிற பல கதைகளையும் தொகுத்துக் கூறுவனவாயின. தமிழில் பெருங்கதை என்ற ஒரு நூலும், உதயண குமார காவியம்[1] என்ற ஒரு நூலும் உண்டு.

---

1. உதயண குமார காவியம்:—1. உஞ்சைக் காண்டம், 2. இலாவாண காண்டம், 3. மகத காண்டம், 4. வத்தவ காண்டம், 5. நரவாகன காண்டம், 6. துறவுக்காண்டம் என்ற ஆறு காண்டங்களையும், முறையே 120, 30, 35, 56, 61, 67 செய்யுட்களோடு கூடிய 369 விருத்தங்களையும் உடையது.

பெருங்கதை என்ற நூல் முழுதும் கிடைக்காவிடினும், கிடைத்த வரையில் மகா மகோபாத்யாய ஸ்ரீ ஐயரவர்க ளால் அழகு பெற அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுளது. இவைகளையன்றி உதிதோவ்ய காவியம் என்ற பேருடைய நூலொன்று வடமொழியில் சைனமதச் சார்பாக உளது என்று மகாமகோபாத்யாய ஸ்ரீ ஐயரவர்களே எழுதியுள் ளார்கள். இவைகளெல்லாம் உதயணன் கதையைப் பெருக் கமாகவும் நரவாகன தத்தன் கதையை மிகச் சுருக்கமாகவும் உரைப்பன.

நேபாளத்திலே நேபாள மகாத்மியம் என்று ஒரு நூல் இருக்கிறது. அதனிலும் உதயணன் நரவாகன தத்தன் இவர்களுடைய கதைகள் சொல்லப்படுகின்றன. அவற்றைக் கூறுகின்ற பாகத்துக்குப் பிரகத்கதா சுலோக சங்கிரகம் என்று பெயர். இது புதஸ்வாமின் என்பவரால் இயற்றப்பட் டது. இந்த நூலில் உதயணனுடைய கதை சுருக்கமாகவும் நரவாகன தத்தன் கதை விரிவாகவும் கூறப்பட்டிருகின்றது. இந்தக் கதையை நரவாகனதத்தன் தானே சொல்லியதாக அந்த நூலின் ஆசிரியர் கூறுகின்றார்.

அந்த நூலில் இப்பொழுது காணப்படுவது ஒரு பகுதியேயாகும். இந்தப் பகுதியில் 4539 சுலோகங்கள் உள்ளன. நரவாகன தத்தன் இருபத்தாறு மனைவியரை மணந்து கொண்டான். அவர்களுள் ஆறு மனைவிகளுடைய கதையே நமக்குக் கிடைத்துள்ள பாகத்திற் காணப்படுவன.

இந்தநூல் i கதாமுகம், ii நரவாகன தத்த ஜன்மம், iii மதன மஞ்சுகாலாபம், iv வேகவதிலாபம், v காந்தர்வ தத்தா லாபம், vi அஜிநாவதீ லாபம், vii பிரியதர்சனை லாபம், viii பாகீரதியசோ லாபம் என்னும் எட்டுச் சருக்

-கங்களை யுடையது. கதாமுகம் மூன்று அத்தியாயங்களையும்; நரவாகனதத்த ஜன்மம் 1. பிங்களிகாக்யானம், 2. தோகத சம்பாதனம், 3. குமார ஜன்மம் என்ற மூன்று அத்யாயங்களையும்; மதனமஞ்சுகா லாபம் 1. யௌராஜ்யாபிஷேகம், 2. மிருகயா விகாரம், 3. புளிந்தார்ச்சனை, 4. ரத்யா ஸம்லாபம் 5. மதனமஞ்சுகா லாபம் என்ற ஐந்து அத்தியாயங்களையும்; வேகவதீ லாபம் 1. வேகவதீ லாபம், உத்யான விஜயம், 2. வேகவதீதர்சனம், 3. ஷை, 4. ஷை 5. வேகவதீலாபம் என்ற ஐந்து அத்தியாயங்களையும்; காந்தர்வதத்தாலாபம் 1. சம்பா பிரவேசம், 2. காந்தர்வதத்தை விவாகம், 3. சாணுதாசர்கதை, 4. பின் தொடர்பியுமான பதினொரு அத்தியாயங்களையும்; அஜிநாவதீலாபம் அதனைப் பற்றியே ஐந்து அத்தியாயங்களையும்; பிரியதர்சனுலாபம், 1. தெய்வாக்யானம், 2-5. புருஷகாரகதை, 6. நந்தோபநந்த கதை, 7. பிரியதர்சனு லாபம், 8. கோமுகவிவாகாக்யானம், 9. பிரியதர்சனு ஸ்தான தர்சனம், 10-12. பிரியதர்சனு விவாகம் என்ற பன்னிரண்டு அத்தியாயங்களையும்; பாகீரதியசோலாபம் என்ற கடைப் பகுதி ஒரு அத்தியாயத்தையுமுடையது. இவற்றின் சுருக்கம் வருமாறு.

I. கதாமுகம்

உஞ்சை நகரத்தை யாண்ட மகாசேனன் என்ற பிரத்யோதனன், மிக்க கொடியவனாக இருந்து விண்ணுலகை அடைந்தான்*. பிரத்தியோதனன் மூத்த மகனான கோபாலன் தன்தகப்பனைக் குத்திக் கொன்று விட்டதாக மக்கள்

---

* பெருங்கதையில் இவன் தவ வனம் சார்ந்து தவத்திலிருந்ததாகக் கூறப்பட்டுளது.

அவன்மேலே ஓர் அடாப்பழியைச் சுமத்தினர். அவ்வாறு செய்யப்படவில்லை யென்றும் கடைக் காலத்தில் பிரத்யோதனனது அடாச்செயலைப் பொறுக்கமுடியாத கோபாலன் அவனைச் சிறையிட்டுப் பாதுகாத்து வந்தனனென்றும் ஒரு செய்தியை அமைச்சர்கள் கிளப்பிவிட்டனர். இதனைக் கேட்ட கோபாலன் அடங்காத் துயரமும் ஆச்சரியமும் அடைந்து அரசாட்சியில் வெறுப்புண்டாகி தனது இராச்சியத்தைத் தன் தம்பியான பாலகனுக்குக் கொடுத்து விட்டுத் துறவு பூண்டான்.

பாலகன் அரசாளும் திறமையற்றவனுகையால் முதலில் துக்கமுடையவனுகவும், பின்னர்க் காமுகனுகவும், முடிவில் மிகுந்த பக்தியுடையவனுகவு மிருந்து இராச்சியத்தை இழந்துவிடுவதாகக் கனவு கண்டான். இவன் ஒரு நாள் கீழே விழுந்துவிடவே அதன் காரணமாக இவன் கோபாலனது மகனுன அவந்திவர்த்தனனுக்குப் பட்டம் கட்டிவிட்டு, காசிபமுனிவர் தவஞ்செய்யும் பர்னசாலைக்குச்சென்று துறவு பூண்டான்.

அவந்தி வர்த்தனன் அரசாண்டு கொண்டிருந்தான். அந்தக் காலத்திலே தெருவில் யானையைப் பழக்கக் கொண்டு செல்லும் மங்கை யொருத்தியைக் கண்டு அரசன் மோகிக்க, அவனது பாட்டியும் பிரத்யோதனனது மனைவியுமான அங்காரவதி இச்செய்தியை அறிந்து, அம்மங்கை ஒரு அரமகளென்றும், சாபத்தால் மானுட மங்கையாக இருக்கின்றுளென்றுங் கூறினுள். பின்னரும் அவளை அடைய அவந்தி வர்த்தனன் ஆசைப்படுவதைக் கேட்ட இராணியான அங்காரவதி சுரசமஞ்சரி என்னும் அம்மங்கையை அவளுடைய தகப்பனது உடன்பாடுபெற்று அரசனுக்கு மணஞ்செய்வித்தாள்.

சுரசயஞ்சரி தன் தகப்பன் தன்னை இப்பகன் என்ற வித்தியாதரனுக்கு மணஞ் செய்து கொடுப்பதாகச் சொல்லியிருந்ததாகவும், அந்த வித்யாதரன் நாரதர் சாபத்தால் சண்டாளனாகிவிட்டதாகவும் நரவாகனனிடம் கூறினாள். அந்த நாட்டிலே நீர்விழா நடந்தது. அந்தக்காலத்திலே விழாக் காணவந்த இப்பகன் சுரசமஞ்சரியையும் அவந்தி வர்த்தனனையும் கவர்ந்து சென்றான். அதனைக் கண்ணுற்ற விஞ்சையனொருவன் அந்த இப்பகனை அவனால் துன்புறும் சுரசமஞ்சரி அவந்திவர்த்தனன் இவர்களோடு தனது அம்மானை பாலகனைக் காணவந்த வித்தியாதரச் சக்கரவர்த்தியான நரவாகன தத்தன்முன் கொண்டுவந்து நிறுத்தினான். அங்காரவதியும் தன் மகனான பாலகனுக்கு அவந்திவர்த்தனனும் சுரசமஞ்சரியும் காணமற்போன செய்தியைச் சொல்லிவிட்டாள். விஞ்சையர் இறைவனான நரவாகன தத்தன் சுரசமஞ்சரியை அவந்தி வர்த்தனனிடம் சேர்ப்பித்ததோடு உஞ்சைக்குத் தன் பெற்றோரைக் காண வந்துசேர்ந்தான். அங்கு நரவாகனதத்தனைக் காண மக்கள் திரள்திரளாகக் கூடினர்.

II. நரவாகனன் பிறப்பு

ஆச்சிரமத்திலுள்ள இருடிகள் நரவாகன தத்தனைக் கண்டபோது அவனது சீவிய சரிதத்தைக் கூறும்படி கேட்டுக் கொண்டனர். அவன் தனது வரலாற்றை இருடிகள் தவிரப் பிறர் கேட்காதவண்ணம் கௌரியினுடைய வரம்பெற்று தான் இருபத்தாறு மனைவியரை மணந்துகொண்ட செய்தியையும் விஞ்சையர்க் கிறைவனான செய்தியையும் பின்வருமாறு கூறினான் *.

---

* மூலத்தில் கதை தன்மையிடத்திலேயே செல்லுகிறது.

தனது தகப்பனுன உதயணன் வாசவதத்தை பத்மாவதி ஆகிய இருவரையும் மணந்தனன். அவர்கட்கு நீண்ட நாள் மகப்பேறு வாய்க்கவில்லை. ஒரு நாள் வாசவதத்தை பிங்களிகை என்ற மாதொருத்தி அவளுடைய பல பிள்ளைகளோடும் தெருவழியே போகக்கண்டாள். அவளை அழைத்து விசாரித்தபோது அந்தப் பிங்களிகை விதிக்கு மாருகத் திருமாலின் அருளால் தனக்குப் பல பிள்ளைகள் பிறந்தமையைக் கூறினுள். அந்தக் கதையைக் கேட்ட உதயணன் தானும் நோன்பிருந்து பிள்ளைப்பேறு அடையவிரும்பியதோடு நாட்டு மக்களையும் நோன்பிருக்க வேண்டினுன். தானும் குபேரனைக் குறித்து நோன்பு பூண்டான். பத்மாவதி நோய்வாய்ப்பட்டிருந்ததால் வாசவதத்தை மாத்திரம் அந் நோன்பை மேற்கொண்டாள்.

ஒருநாள் அரசனும் அரசியும் குபேரனிடம் தாங்கள் சென்றதாகவும், அவன் அவர்கட்கு அணியொன்றுஅளித்ததாகவும் கனுக் கண்டனர். ஆதித்தியசருமன் என்னும் நிமித்திகன் அந்தக் கனுவைக்கேட்டு இவர்கட்கு ஓராண்மகன் பிறப்பானென்றும், அப்பிள்ளை உலகைவென்று விஞ்சையர்க்கிறைவனுக வாழ்வானென்றும் கூறினுன். உதயணனது அமைச்சர்களான யூகி முதலாயினுர்க்கும் இவ்வாறே பிள்ளைகள் பிறக்குமென்றும் அவன் கூறினுன். வாசவதத்தையும் கருவுற்றுள்.

வாசவதத்தை கருவுற்றிருந்தபோது அவளுக்கு ஒரு விருப்பம் உண்டாயிற்று. அதனை வெளியிட அவள் தயங்கினுள். இவ்வாறு தன்கருத்தை வெளியிடத் தயங்குவதைக் கண்ட மிருகாவதி தான் சூல் கொண்டிருந்தபொழுது தானும் செவ்வாடை யணிவதோடு நகரிலுள்ளாரும் செவ்

வாடை யணிந்து எங்கும் சிவப்பு நிறைந்திருக்க விரும்பிய தாகவும், அவ்வாறே அரசன் செய்வித்தகாலத்திலே பறவை யொன்று தன்னைக் கவர்ந்து சென்று கானகத்தில்விட, அங்குவந்த முனிவரிருவர்[1] தன்னை வசிட்டரது இருக்கைக்கு அழைத்துச் சென்றதாகவும், ஆண்டு உதயணன் பிறந்ததாக வும் கூறினாள்.

உதயணன் முனிவ ரிருக்கையில் வளர்ந்து வருகையில் அவனை வெளியில் எங்கும் செல்லுதல் கூடாதுஎன்று முனி வர் கட்டளை இட்டிருந்தார். அவருடைய கட்டளைக்குமாறாக அவன் காட்டிற் சென்றான். ஒருநாள் இவன் காட்டிலுள்ள ஊருணியில் விளையாடிக் கொண்டிருக்கையில் சில நாககன் னிகைகளைக் கண்டான். அவர்கள் இவனைத் தங்கள் நகரான போகவதிக்குத் தூக்கிச்சென்றனர். அவன் சிலநாள் அங் குத் தங்கியிருந்து திரும்பி வந்து நடந்த செய்தியை வசிட் டருக்குச் சொல்ல, அவர் மறுபடியும் இவனை நாகலோகம் அனுப்பினர். இவன் அங்குச் சென்று திரும்புகையில் கோடபதி (கோஷவதி) என்ற யாழைப் பெற்று வந்தான்[2]. உதயணன் கல்வி கற்று நிறைவேறினதும், அவனையும் அவ னுடைய தாய் மிருகாவதியையும் கௌசாம்பிக்கு வசிஷ்ட முனிவர் அனுப்பி வைத்தார். இவர்கள் அங்குச் சென்று ஒரு உபவனத்தில் தங்கியிருந்தபொழுது பத்மபஞ்சிகா

1. பிரச்சோதனனாகிய சேடக முனிவர் என்று கூறும் பெருங்கதை. மிருகாவதியின் தகப்பனாகிய முனிவர் என்னும் உதயணகுமார காவியம்.

2. கோடபதியைப் பிரமசுந்தர முனிவர் அளித்ததாகப் பெருங்கதையும், உதயணகுமார காவியமும் கூறும்.

என்ற மந்திரத்தை உதயணன் யாழில் வாசித்தான். காவலர் இச்செய்தியை அரசனுக்கு அறிவிக்கவே, அரசன் இழந்த தனது மனைவியையும் மகனையும் அடையாளங்கண்டு பெற்று மகிழ்ந்தான்[1].

இவ்வாறு மிருகாவதி கூறவே, வாசவதத்தை ஆகாயத்திற் பறந்து சென்று உலகமுழுவதும் சுற்றிப் பார்க்கத் தனக்கு விருப்பமிருப்பதாகக் கூறினாள். அரசனான உதயணன் மதிமந்திரியான யூகியோடு ஆலோசிக்க, இவன் இது சிற்பிகளால் ஆகவேண்டிய காரியம் என்று சொல்லி அவர்களை அழைத்து விசாரித்தான். அவர்கள் பொறியமைக்குந் தொழிலில் யவனர்களே (Greeks) கைபோயவர்களென்று கூறினர். ஓர் அந்தணன் அங்குத் தோன்றிப் பின் வருங் கதையைச் சொல்லலானான்.

காசியிலே பிரமதத்தன் ஆண்டு கொண்டிருக்கையில் மகாசேனனது நாட்டிலிருந்த விசுவபத்திரன் என்ற தச்சனொருவன் நாள்தோறும் காசிசென்று வேலையைச் செய்து விட்டு இரவில் தன் மனைவி மக்களிருக்குமிடமான உஞ்சைக்கு விநோதப்பொறி ஒன்றில் வருவது வழக்கம். இதனை ஒற்றர்களால் அறிந்த மகாசேனன் அந்தத் தச்சனை யழைத்து வரும்படி ஆள் அனுப்பினான். இதனைக் கேள்வியுற்ற அந்த விசுவபத்திரன் விநோதப் பொறியைக் காட்ட அஞ்சி, தன் பெண்டு பிள்ளைகளை உஞ்சையில் விட்டுவிட்டு ஓடிவிட்டான்.

---

1. கோடக முனிவரது புதல்வனான விக்கிரமன் வேண்டுகோட்கிணங்கி அவனது (மாமனது) அரசுரிமையை அடைந்தனன் உதயணன் என்று **உதயணகுமார காவியம்** கூறும்.

அதனாலே தச்சர்கள். இந்த இரகசியத்தைச் சொல்ல மறுப்பார்கள் என்று அந்தணன் கூறினான்.

இச்செய்தியைக்கேட்ட உதையணன் தச்சர்களை ஒறுப்பது என்று தீர்மானிக்கையில், முன்னம் இவனால் பஞ்சமந்திரத்தைக் கேட்டு முத்தியடைந்த பத்திராவதி என்ற பெண் யானை பத்திரன் என்ற பேரோடு தச்சனுருக்கொண்டு உதையணன் முன் தோன்றிற்று. பத்திரன் தான் ஆகாயத்திற் செல்லக்கூடிய பொறி செய்ய வல்லவனென்று கூறினான். உதையணனும் அந்த விதமான பொறியொன்றைப் பத்திரன் செய்யச் சம்மதித்தான். சிறிதுநாளில் தேர்ப்பொறி ஆயத்தமாயிற்று.

அப்பொழுது நுண்மதி யமைச்சர்தம் மனைவியரும் கருவுற்றிருந்தமையின், அவர்களும் அவ்வாறு உலகைச் சுற்றிப்பார்க்க விருப்புடையராக இருப்பதாக அமைச்சர் மூலமாக உதையணன் அறிந்தான். அவன் பத்திரனென்னும் தச்சனது அனுமதிபெற்று, தன் மனைவியர், அமைச்சர், அவர்களது மனைவியர் இவர்களோடுங்கூட ஆகாயத்திற் பறந்துசென்று உலகைச் சுற்றிப்பார்த்து அவந்தியையடைந்தான். உதயணன் அவந்தி வந்து சேர்ந்ததும் இந்த இயந்திரவூர்தியைச் செய்துதந்த பத்திரனை அழைத்துச் சன்மானம் செய்ய முயலுகையில், பத்திரன் தான் ஒரு விஞ்சையனென்றும் சாபத்தால் பிரச்சோதனனிடம் பத்திராவதி என்ற பெண் யானையாக இருந்ததாகவும், உதயணனும் வாசவதத்தையும் தன்மேலேறி ஊரைவிட்டகன்று காட்டில் வந்தபொழுது தான் களைத்து இறக்கையில் உதயணன் தன்னிடம் அன்பு பாராட்டிப் பஞ்சமந்திரத்தைக் காதிலோத அதனால் தான் பூர்வ ஜன்மம் அடைந்ததாகவும் கூறித் தான் தன்

செய்நன்றி மறவாமையைப் பலவழிகளிலும் காட்ட முற்பட்டிருப்பதாகவுஞ் சொல்லி விடைபெற்றுச் சென்றான்.[1]

வாசவதத்தை சின்னாட்கழித்து நல்ல நாளிலே ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றாள். யூகி முதலாய நான்கு அமைச்சரின் மனைவிமார்களும் ஒவ்வோர் ஆண் பிள்ளையைப் பெற்றனர். உதயணன் குபேரனை நோக்கி வரங்கிடந்து பிள்ளை பெற்றதால் அந்தப் பிள்ளைக்கு நரவாகன தத்தன்[2] என்று பெயரிட்டான். அமைச்சர்மக்களுக்கு முறையே அரிசிகன், மாருபூதிகன், தவந்தகன், கோமுகன் எனப் பெயரிட்டனர். இவர்கள் ஐவரும் சேர்ந்து கல்வி பயின்றதோடு ஓரே தாய் வயிற்றுப் பிள்ளைகளைப்போல வளர்ந்து வந்தனர்.

III. மதனமஞ்சுகா லாபம்

உதயணன் முதுமைப் பருவ மடையவே தனது நாட்டினரை அழைத்து நரவாகனதத்தனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்யப்போவதாகக் கூறினான். அந்தக் காலத்திலே கலிங்கசேனை என்ற ஒரு தாசி ஒரு சிறு பெண்ணோடு அங்கு வந்திருந்தாள். அரசன் அந்தப் பெண்ணின் வடிவழகைக்

---

1. உதயணன் காட்டில் நீர் வேட்கையினால் தவித்தபோது அதனைத் தீர்த்துவைத்த இயக்கர் தலைவனான நஞ்சுகனை நினைக்க, அவன் வந்து தோன்றி உதயணனது விருப்பத்தை யறிந்து அவ்வாறு 'வேந்தன் கதிர்மணித் தேரினேறிப் புள்ளெனப் பறக்க மந்திரமீதெனக் கொடுத்துப் போந்தான்' என்று கூறும் உதயணகுமார காவியம்.

2. குபேரனுக்கு வாகனமாக அமைந்திருப்பது மானிடன். நரனை வாகனமாக உடையவனாகையால் நரவாகனன் என்று குபேரன் பேர் பெற்றான். இந்தப் பெயர் இவனுக்கு இடலாயிற்று.

கண்டு வாங்கித் தனது மடிமீதிருத்தினுன். இச் செய்கையைக் கண்ட நிமித்திகனை ஆதித்தியசருமன் வாய்திறந்து அலறிவிட்டுப் பேசாமலிருந்து விட்டான். நரவாகனதத்தன் அந்தச் சிறுமியிடம் காதல்கொண்டவனுனன். உதையணன் கலிங்கசேனைக்குச் சன்மானஞ்செய் தனுப்பிவிட்டான்.

நரவாகனனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் நடந்தது. அமைச்சருடைய மக்கள் நால்வருக்கும் நரவாகனனிடம் தனித்தனி அலுவல் கொடுக்கப்பட்டது. உடனே நகர் வலமும் நடந்தது. அந்நகர்வலம் நடந்தது முதல் கோமுகன் மாத்திரம் சிற்சில சமயங்களில் பித்துப் பிடித்தவன்போல் நடப்பதும், சிற்சிலவேளைகளிற் காணுமற்போவதுமாக இருந்தான். கேட்பவர்களுக்குக் கோமுகன் தான் உபநிஷத்துக்களைப் படிப்பதாகக் கூறிவந்தான். சிலநாள் சென்றபின் உதையணன் நாகவனத்திற்கு யாத்திரைசெய்ய உத்தேசித்தான். நகரமாந்தர் அனைவரும் உடன் சென்றனர். வழியில் ஒருதேரில் பல சிறுமிகள் சென்றனர். அவர்களுள் ஒருத்தி அரசகுமாரர்களைப் பார்த்து வழிபட்டாள். நரவாகனன் நாட்டு வழக்கங்களை யறியாதவனுகையால் பிற பெண்களால் அவமதிக்கப்பட்டான். எனினும் கோமுகன் அவனை அவனறியாதவண்ணம் அவளுக்குவந்தனைசெய்யும்படிசெய்தான். அரசகுமாரர்கள் நாகவன மடைந்து பலவித இன்பங்களை யனுபவித்தனர். பின்னர் ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்றனர்.

புளிந்தகர்களை முன் செலுத்தி அரசிளங்குமரர் வேட்டையாடத் தொடங்குகையில், புளிந்தகர் தலைவனை சிங்கசத்துருவைக் கண்டனர். அரசகுமாரர்கள் வேட்டையாடுகையில் ஒருவகை மானைக்கண்டு அம்புவிட, விட்ட அம்புகளெல்

லாம் அந்தமானே வலஞ்செய்துகொண்டு திரும்பின. இதனைக் கண்டு அதிசயமுற்ற அரசகுமாரர்களிடம் புளிந்தகர் தலைவனை சிம்மசத்துரு, உலகத்திலே வித்தியாதரச் சக்கரவர்த்தி ஒருவன் தோன்றுங் காலத்து இந்த அதிசயம் தோன்றுவது வழக்கமென்று கூறினன். அரசகுமாரர்கள் பலவாருகப் பொழுதுபோக்குகையில் கோமுகன் பலதொழிலினும் வல்லவனாகையால் மக்கள் விலங்கு முதலாய பல உருக்களைத் தாமரைத்தண்டில் செய்து ஆற்றில் மிதக்கவிட்டுத் தன் தோழர்களை உவப்புறச் செய்தான்[1].

இங்ஙனம் இவர்கள் காலத்தைக்கழிக்கையில் மாருபூதிகன் ஆற்றுமணலில் சில அடிச்சுவடுகளைக் கண்டான். அச்செய்தியைத் தன்தோழர்களுக்குத் தெரிவித்தான். அந்தச் சுவடுகள் எங்கிருந்துவந்தன என்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில் கோமுகன் தேர்ந்தெடுத்த ஒற்றன்போல, அந்தச் சுவடுகள் விஞ்சையர்மக்களுள் ஒருவன் விஞ்சைமாதொருத்தியைக் கவர்ந்து செல்லும் அடிகளென்றும், அவர்கள் பக்கத்தே தோன்றும்தோப்பில் இருக்கவேண்டும் என்றும் கூறினன். உடனே அங்குச் சென்று தேடியபோது அவர்கள் காணப்படாவிடினும் ஒரு விஞ்சைமகனுக்கு உரித்தான ஆடையாபரணங்களும் அம்புறுத்தூணியும் காணப்பட்டன. பின்னுந் தேடிப்பார்க்கையில் வித்தியாதரனொருவன் மரமொன்றிற் பிணிக்கப்பட்டு உயிரிழந்திருக்க அர்சிளங்குமரர் கண்டனர். யாது செய்வது என்று திகைக்கையில் விஞ்சையனது அம்புறுத் தூணியில் உயிரைக் காப்

1. உதயணனும் வாழைத்தண்டில் பல உருக்கள் செய்வதில் வல்லவன் என்று பெருங்கதை கூறும்.

பாற்றும் மூலிகை இருப்பது வழக்கமாகையால் அந்த அம்புருத் தூணியைத் தேடுமாறு நரவாகனன் யுக்திசொன்னான். தோழர்கள் அம்புருத்தூணியைத் துருவிப்பார்த்து மூலிகையை எடுத்து அவனது உயிரைமீட்பித்து அவனையும் கட்டவிழ்த்து விட்டனர்.

அந்த விஞ்சையன் தன்பெயர் அமிர்தகதி என்றும் தான் கௌசிக முனிவருக்கும் பிந்துமதி என்ற அப்சரசுக்கும் பிறந்தவனென்றும் கூறியதோடு, தன்பெற்றோரால் கற்பிக்கப்பட்ட விஞ்சைகளால் தான்வித்தியாதரப் பதவி அடைந்ததாகவும் கூறினான். தான் வித்தியாதரனானாலும் வித்தியாதரசக்கரவர்த்தி யாவதற்கில்லை யென்பதை யறிந்த அவனது தகப்பன் இனி வரப்போகும் வித்தியாதரச் சக்கரவர்த்திக்குப் பணிவிடைக்காரனாக இருக்க உத்திரவிட்டதாகவும் கூறினான். அவன் சக்கரவர்த்தியை எவ்வாறு தெரிந்து கொள்வேனென்றபோது சக்கரவர்த்தியாக வரப்போகின்றவன் அமிர்தகதி கட்டுண்ட காலத்து அவனது தளையை நீக்கிவிடுவான் என்று தன்தகப்பன் சொன்னதாகவும் கூறினான். அந்த வித்தியாதரச் சக்கரவர்த்தி நரவாகனனெனக் கூறினான். அமிர்தகதி நரவாகனதத்தன் விரும்பும்போது வந்து வேண்டும் உதவிபுரிவதாகவும் கூறி அவனிடம் விடைபெற்றுச் சென்றான்.

அரசிளங்குமரர் வேட்டையினின்றும் திரும்பிவருகையில் நரவாகனதத்தன் பொழுது போக்காக மானிடர் செய்தொழில்களைக் குறித்துப் பேச ஆரம்பித்தான். அப்போது கோமுகன் மானிடர் பிரவிருத்திக்கு ஆதாரமாக இருப்பது இச்சை அல்லது விருப்பம்என்றான். இப்பொழுது தாங்கள் கண்ட அமிர்தகதியின் காட்சிக்கு இந்த விருப்பமே காரண

மென்பதையும் எடுத்துக்காட்டினன். விருப்பம்தான் மற றைய செய்கைகட்கு ஆதாரமக இருக்கின்றது என்றும் சொன்னன்

மேலும் அவன் கூறியதாவது:—'இச்சையினும் மேலானது காம இச்சை. இது காமநூலிற் கண்டபடி நான்கு திறப்படும். தலைவனும் தலைவியும் ஒத்த அன்புடையராதல் முதல்வகை. தலைவி காமுறத் தலைவன் விருப்பமின்றி இருத்தல் இரண்டாந் தரத்தது. தலைவன் காமுறத் தலைவி யிச்சையின்றி யிருத்தல் மூன்ருவது. தலைவனும் தலைவியும் காமம் என்பது இன்னதென்றறியாதது நான்காந்தரத்தது. இதனில் நான் முதல்வகையைச் சார்ந்தவன். நரவாகனதத்தன் இரண்டாம் வகையினன். மற்றைய இருவரும் நான்காந் தரத்தவ'ரென்ருன். தோழர்கள் நரவாகன தத்தனது அன்பிற் குரியாளைக் கூறும்படி கேட்க அவன் அதனைப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினன்.

'யுவராஜ அபிஷேகம் நடந்தபொழுது பத்மாவதி அம்மை ஆதித்தியசருமன் கூறிய விடையொன்றைக்கேட்டு அவன் பேச்சுச்சமர்த்தன் என்று கூறினள். அவ்வம்மையார் யாதுகாரணம்பற்றி அவ்வாறு கூறினள் என்று அவ்வமயம் கேட்க எனக்குத் தோன்றவில்லை. அரண்மனையை விட்டு வெளியே வந்தபோது அரசனது குதிரைகள் பூட்டிய தேர் ஒன்றிலிருந்த பாகனொருவன் அந்தத் தேரிற் பூட்டிய குதிரைகள் மிக்க வேகமாகச் செல்லக்கூடியன' என்றும் என்னை ஏறிப் பரீட்சைபார்க்கும்படியும் வேண்டினன். நான் அவ்வாறு செல்ல மறுத்தேன். ஆனல் அந்தச் சமயத்திலே வேறு ஒருவன் அவ்விடம் வந்து நகரிலுள்ள கேட்டிக்காரர்களையும் அசடுகளையும் பேர்வழிப்பட்டி குறிக்கும்படி அரச

ணை வந்திருக்கிறதென்றும், நல்ல குதிரைகள் பூட்டிய தேரில் ஏறிச்செல்ல மறுப்பவர் அசடுப்பட்டியில் சேர்வர் என்றும் கூறினன். இதனைக் கேட்டவுடனே மறுபேச்சுப் பேசாமல் தேரில் ஏறினேன். தேர் வேகமாகவே சென்றது. பாகன் தான் சமர்த்தர்கள் இருக்கும் வீதி வழியாகச் செல்லப் போவதாகக் கூறினன். தேர் முதலில் ஆவண வீதிவழியே சென்றது. பின்னர் ஒரு நாணயமான சேரியிற் சென்றது. அங்கு இளைஞரும் மடவாரும் பேசிய உரையாடலினின்றும் இது பரத்தையர் சேரி என்று அறிந்தேன். பாகனை வேறு வழியில் தேரைத் திருப்பச் சொல்லியும் அவன் கேட்காமல் விரைவாகச்சென்று ஓர் அழகிய மாளிகையின் முன்புறத்தே நிறுத்தினன். அங்குப் பலமடவார் தோன்றி என்னைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் நானும் தோழர்களும் என்னென்ன செய்கின்றோ மென்று பல பல கேள்விகளைக் கேட்டனர். அவை எல்லாவற்றிற்கும் நாங்கள் கல்வியிலேயே காலம் போக்குகிறோம் என்று விடை பகர்ந்தேன். அவர்கள் எனது வெள்ளறிவைக்கண்டு நகைத்தனர். நான் கூறிய வார்த்தைகளைக் கேட்டு மெச்சிய அந்த மாளிகையின் தலைவி எனக்கு உபசாரம் செய்யும்படி பத்மதேவிகை யென்பவளை நியமித்தாள். மேலும் என்னை அந்த மாளிகைக்கு அடிக்கடி வந்து செல்லும்படியும் வேண்டிக்கொண்டாள்.

'பத்மதேவிகை எனக்குப் பல உபசாரங்கள் செய்தாள். நான் விடைபெற்றுக் கொள்ளும்போது தன்னிடம் ஒரு இரகசியம் உண்டென்றும் அதனை மற்றொருமுறை கூறுவதாகவும் பின்னரும் வரும்படியாகவும் கூறினள். அன்றுமுதல் நான் அந்த மாளிகைக்குச் செல்வது வழக்கமாயிற்று. ஆனல் அங்குக் காணுங் காட்சிகளையும், பேசும் வார்த்தைகளையும்

பிறரிடம் வெளியிடக் கூடாதென்று என்னை மாளிகைத் தலைவி கேட்டுக்கொண்டிருந்தாள். அதற்கு இணங்கியே நான் அன்றுமுதல் ஒன்றும் வெளியிடுவதில்லை.

'ஒரு நாள் நான் அவ்விடம் சென்றபோது பத்ம தேவிகை மிக்க துயருடன் காணப்பட்டாள். அதன் காரணத்தை விசாரித்தபோது அங்குள்ளார் எவரும் சொல்ல மறுத்துவிட்டனர். பின்னும் நான் வற்புறுத்தியபொழுது தலைவி தோட்டத்தில் இருப்பதாகவும் அவளையே நேரிற்கண்டு தெரிந்துகொள்ளும்படியாகவும் அங்கிருந்தோர் சொன்னார்கள். நான் அவளைக் கண்டபோது அவள் கோபித்துச் சீறி விழுந்தாள். பிறகு சினந்தணிந்து மத்திரிகாலதிகை என்பவளைக்கண்டு தெரிந்துகொள்ளும்படி கூறினாள்.

'மத்திரிகாலதிகை என்பவள் கணிகையர் எண்வகையினராகப் பரதனால் பிரிக்கப்பட்டார்கள் என்றும், அதனில் மாளிகைத் தலைவியான கலிங்கசேனை முதல் வகுப்பினளாவாள் என்றும் கூறினாள். மேலும் கூறியதாவது:— அவளுக்கு மதனமஞ்சுகை என்று பேருடைய பெண்ணொருத்தி உண்டு. ஒரு நாள் கலிங்கசேனையும் மதனமஞ்சுகையும் அரசவைக்குச் சென்றிருந்தபொழுது மதனமஞ்சுகை நரவாகனதத்தனைக் கண்டாள். அதுமுதல் அவள் அவனிடத்தில் அன்புடையவளாகித்தானும் அரண்மனைக்குச்செல்ல விரும்பினாள். கலிங்கசேனை தன்னுடைய நிலையில் அரண்மனைக்குச் செல்வது இயலாத காரியம் ஆகும் என்று தன்மகளுக்குப் புத்திகூறினாள். மதனமஞ்சுகையோ விடாப்பிடியாக அதையே நினைத்துக்கொண்டு தன்னைத் தூக்கிலுமிட்டுக் கொண்டு உயிர்விடத் துணிந்தாள். அதனைக் கண்ணுற்ற கலிங்கசேனை அவளை விடுவித்து அவளுடைய மனத்தை

அறிந்துகொண்டனள். இச்செய்தியை அரசனது தேவியான பத்மாவதிக்கு அறிவித்தாள். பத்மாவதி இந்தக் காரியத்தில் தன்னாலியன்ற உதவி செய்வதாக வாக்களித்தனள். அவள் தான் உன்னை இந்த மாளிகைக்கு வரும்படியான சூழ்ச்சி-கள் செய்தவள். ஆதலினால், உனது கெட்டிக்காரத்தனத்-தினாலே அரசிளங்குமரனையும் இங்குக் கொண்டுவருதல் தகும். ஆயினும் அரசிளங்குமரன் மதனமஞ்சுகையை விரும்புவானோ என்பது ஐயப்பாடுடையதாக இருக்கின்றது என்று மத்திரிகாலதிகை கூறினாள்.

'நரவாகனதத்தனை அழைத்துவருவதாக நான் ஒப்புக் கொண்டேன். அதனாற்றான் நரவாகனனை மதனமஞ்சுகைக்கு வந்தனம் செய்யும்படி செய்தேன். ஆனால் அவன் தான் வந்தனைபுரிந்தவள் மதனமஞ்சுகை என்று அறியான்' என்று கூறினான்.

இத்துணையும் கேட்டுவந்த நரவாகனதத்தன் மனோதிடங் கொண்டு தான் மதனமஞ்சுகையை அன்று (யுவராஜபட்டாபிஷேகத்தன்று) கண்டதுமுதல் அவளிடம் அன்புடையவனாக இருப்பதாகவும், மறுநாள் நடக்கப்போகும் பரத நாட்டியத்திற்குத் தான் வருவதாகவும் கூறினான்.

மறுநாள் அரங்கில் சுயாமுனதத்தை என்ற கணிகையும் மதனமஞ்சுகையும் வந்து நடனமாட ஆரம்பித்தனர். ஆனால் கோமுகன் மதனமஞ்சுகை தோற்கும்படியாகவும், சுயாமுனதத்தை சன்மானம் பெறும்படியாகவும் சூழ்ச்சி செய்தான். மதனமஞ்சுகையின் தோல்வியை நரவாகனன் அறியாதவாறு அவன்புத்தியையும் வேறுவழியிற் செலுத்தினான். ஆடல் முடிந்த பின்னர், கோமுகனை மதனமஞ்சுகையிடம் சென்று தனது விருப்பத்தைத் தெரிவிக்குமாறு நரவாகனன் வேண்டி

ஞன். கோமுகன் தான் முன்னர் ஆடலைக்குறித்துச் செய்த சூழ்ச்சிகளை நினைந்து அரசிளங்குமரன் விரும்பிய வண்ணம் செய்ய மறுதளித்தான். அரசிளங்குமரன் வற்புறுத்திச்சொல்லவே அவன் தன்னுடன் மாருபூதிகனையும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அவ்வாறே இருவரும் கலிங்கசேனை வீடு நோக்கிச் சென்றனர். இவர்கள் இருவரும் கணிகையர் வீடடைந்தபொழுது நல்வரவேற்கப்படவில்லை. அதனைக் கோமுகன் நன்கறிந்தான். ஆயினும், தான் அவ்வாறு செய்ததற்குப் பலகாரணங்கள் உளவென்று எடுத்துக்காட்டியதோடு நரவாகனன் மதனமஞ்சுகையை விரும்புகிறான் என்றுங் கூறினான். கலிங்கசேனை உண்மையில் மகிழ்ச்சிகொண்டனளாயினும், இது அரசகாரியமென அஞ்சி அமைச்சன் உருமண்ணுவாவினிடம் இச்செய்தியைத் தெரிவித்தாள். அவன் அதனை உதையணனுக்குக்கூற, உதையணனும் ஒருவாறு சம்மதித்தான். மதனமஞ்சுகை தன் அன்புக்கு உரியவளாவாள் என்று நரவாகனன் அறிந்து மகிழ்ச்சியடைந்தான்.

நரவாகனன் இவ்வாறு தான் விரும்பிய பொருள் கிடைக்குமென்று அறிந்தானேனும், அவளோடு எவ்வாறு பழகுவது என்பதை அறியான். எவ்வாறு மடவாரோடு பழக வேண்டுமென்று அப்பொழுதுதான் அவன் தெரிந்து கொண்டான். மதனமஞ்சுகையும் நரவாகனனும் நாகவனத்தில் யாத்திரை முடியுமட்டும் ஒன்றாகத் தங்கியிருந்தனர்[1].

1. மதனமஞ்சுகை நிலாமுற்றத்திலே பந்தாடுகையில் தோழரோடு யானைமேற் சென்ற நரவாகனன் அவளைக் கண்டு காமுற்றான்; பின்னர் ஒரு பூம்பொழிலிடத்தே அவளைத்தந்து நலநுகர்ந்தான் என்று கூறும் உதயணகுமார காவியம்.

கௌசாம்பிக்குத் திரும்ப ஏற்பாடாயிற்று. ஒரு நாட் பயணஞ் சென்றதும் மதனமஞ்சுகை வருத்தமுடையவளாகக் காணப்பட்டாள். கோமுகன் அவளை அவளுடைய விசாரத்தைக் குறித்து விசாரித்தபோது, நரவாகனன் காசியரசன் புதல்வியை மணக்கப் போவதாகவும், தானும் அவ்வாறு அவனை மணந்துகொண்டு வாழ்வது இயலாத காரியம் என அறிவதால் நஞ்சருந்தி உயிர்விடத் துணிந்திருப்பதாகவும் கூறினாள். இதனை யறிந்த நரவாகனனும் அவள் உயிர்விட்டால் தானும் கூட இறப்பதாகக் கூறினான். அப்பொழுது கோமுகன் காணப்படவில்லை. அவனைத் தேடிக் கண்டுபிடித்தபோது,உயிர் உடலைவிட்டு நீங்காது பலநாள்உயிர் வாழும் உபாயத்தைத் தான் தேடிக்கொண்டிருப்பதாகவும், அதனால் அவ்விடம் தான் வர இயலாதென்றும் அவன் சொல்லியனுப்பினான். தோழரும் மற்று முள்ளோரும் கோமுகனிடம் சினங்கொண்டனராயினும் அவர்கள் செய்துகொள்ளக்கூடியது ஒன்றுமில்லை. முடிவாக இவர்கள் மூவரும் தபந்தகனைக்கொண்டு இச் செய்திகளை யெல்லாம் அரசனுக்கு அறிவிப்பதென்று ஏற்பாடு செய்தனர். ஆனால் தபந்தகன் உதையணனிடம் இச்செய்தியைக் கூறத்துணியவில்லை. இதற்குள் எல்லோரும் திரும்பக் கௌசாம்பியை அடைந்தனர்.

IV. வேகவதீ லாபம்

கௌசாம்பிநக ரடைந்ததும் வழக்கம்போல மதனமஞ்சுகையும் நரவாகனனும் சந்தித்து வந்தனர். ஒருநாள் திடீரென மதனமஞ்சுகை காணப்படவில்லை. இந்தச் செய்தியைக் கேட்டதும் நரவாகனன் துன்பத்தில் ஆழ்ந்தான். அரசன் கவலையுடையவனானான். உருமண்ணுவாவை

யழைத்து நடந்த செய்தியைச் சொன்னபோது அந்த அமைச்சன் இது மடவாரது சாகசச் செயலென்று கூறிப் பிறிதொரு கதையையும் சொன்னான். பின்னும், அவன் மதன-மஞ்சுகை ஓரிடமும் சென்றிருக்கமாட்டாளென்றும் நன்-ருக எல்லாவிடங்களிலும் தேடிப்பார்க்கும்படியும் கூறினன்.

வேவுகாரர்களும் தோழர்களும் எங்கும் அவளைத் தேடித் திரியும்போது, அவள் ஒரு அசோகமரத்தடியின்கீழ் களைத்துக் கிடக்க மாருபூதிகன் கண்டான். அவளைக் களை தெளியச் செய்து நடந்த செய்தியைச் சொல்லும்படி கேட்ட போது அவள் பின்வருமாறு கூறினாள். தான் இளமையாக இருக்கும் பொழுது இயக்கனொருவன் தன்னை விரும்பியதாக வும், அந்த இயக்கன் இவளது எண்ணத்தை நிறைவேற்ற முடி யுமானால் தான் அவனுடைய இச்சைப்படி நடப்பதாகவும் அவள்கூறினளாம். அந்த இயக்கன் இப்பொழுது தோன்றித் தான் முன் சொன்ன சொல்லை நிறைவேற்றும்படி கேட்ட தாகச்சொன்னாள். இவள் மறுதளிக்கவே அவன் இவளைத் தூக்கிச்சென்று குபேரன் முன்னிலையில் விட்டதாகவும், குபேரன் மதனமஞ்சுகை முதலில் நரகவாகன தத்தனை மனஞ்செய்து கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டதாக வும் சொன்னாள். ஆதலினலே தன்னை நரவாகனன் உரிய சடங்குகளோடு வதுவை செய்துகொள்ள வேண்டுமென வேண்டிக்கொண்டாள்.

கணிகையரை அரசர் உரிய சடங்குகளோடு மணப் பது முறையல்லவாகலான், உதையணன் முதலாவதாக மதனமஞ்சுகை குலஸ்திரீ என்று கருதப்படல் வேண்டு மெனக் கட்டளை பிறப்பித்தான். பின்னர் அரசர்க்குரிய மரியாதைகளோடு நரவாகனன் மதனமஞ்சுகையை மணந்

தான். மதனமஞ்சுகை கணிகையாக விருந்து குலஸ்திரீயான தோடு அரசகுமாரரை மணந்ததற்கு மிக்க மகிழ்ச்சிகொள்ள வேண்டியதிருக்க அவள் மனக்கலக்கமுடையவளாகவே காணப்பட்டாள்.

அவள் நரவாகனனை மதுவருந்தும்படி செய்தாள். நாளடைவில் அவனைக் குடிமயக்கத்திலாழச்செய்து வந்தாள். இதற்கு வேண்டிய மதுவெல்லாம் கோமுகனால் கொண்டு வரப்பட்டதெனினும் அவன் எதன் பொருட்டு இவ்வாறு செய்கின்றானென்ற செய்தி அறிவது இயலாததாயிற்று.

மதனமஞ்சுகை உறங்குகையில் தன்னைத் தன் கணவனான நரவாகன தத்தன் பார்த்தல் தகுதியன்று என்றும், அதற்கு அவன் உடன்படல்வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டாள். நரவாகனனும் அதற்கு உடன்பட்டான். நரவாகனனுக்கு இரவில் உண்டாகும் நாவரட்சியைத் தீர்ப்பதற்குத் தண்ணீர் பணியாளனைக் கொண்டுவரும்படி சொல்லுவது வழக்கம். ஒருநாள் அதிக வரட்சையாக இருந்ததால் தனது மனைவியை எழுப்ப நினைந்து அவளைப் பார்த்தான். அவள் மதனமஞ்சுகையன்று. வேறொருத்தியாக இருக்கக்கண்டான். உடனே அவளை எழுப்பி உண்மையைச் சொல்லும்படி கேட்டபோது அவள் தன் கணவன் தன்னைக் காப்பாற்றுவதாக வாக்களித்தால் உள்ளதைச் சொல்லுவதாகக் கூறினாள். நரவாகனனும் அதற்கு உடன்பட்டான்.

அவள் தன் வரலாற்றைப் பின்வருமாறு கூறினாள்:—

'என் பெயர் வேகவதி. எனது தமயன் பெயர் மானசவேகன். நாங்களிருவரும் வேகவதி என்ற விஞ்சையனின் மக்கள். எனது தாயின் பெயர் பிருதுவி. வேகவதி கிழத்தனமடைந்தபோது தனது அரசாட்சியைத் தன்குமாரனிடம் ஒப்பித்துவிட்டுக் காட்டுக்குத் தவஞ்செய்யச் சென்றார். காட்-

டுக்குச் செல்லுகையில் அவர் என் தமையனிடம் என்னைப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார். என் தமையன் எனக்கு விஞ்சைகளைக் கற்றுக்கொடுக்க மறுதளித்துவிட்டான். என்றால் பறக்கமுடியாமையையும் எனக்கு மந்திரங்கள் தெரியாமையையும் அறிந்த எனது உடன் தோழிகள் பரிகசிக்கலானார்கள். அதனைப் பொருத நான் என் தகப்பனைத் தேடிச்சென்று கண்டு தமையனது வஞ்சனையைச் சொன்னேன். அவரும் முதலில் கவனிக்கவில்லை. பிறகு நான் ஒரு மயிலைஅவர்முன் சிறைவிரித்து ஆடும்படி செய்தேன். அதனால் மகிழ்ச்சியடைந்த அவர் எனக்கு மந்திரவித்தைகளைக் கற்றுக் கொடுத்தார். அதுவன்றி என்னை மணந்துகொள்ளும் கணவனுக்குத் தனது இராச்சியத்தில் பத்திலொருபகுதி தருவதாகவும் வாக்களித்தார். இஃது இவ்வாறாக,

'மானசவேகன் மதனமஞ்சுகையைத் தூக்கிச் சென்றது உண்மை. ஆனால் ஒரு சாபத்தினால் அவன் மதனமஞ்சுகைக்குத் தீங்கு ஒன்றும் செய்ய இயலவில்லை. அவளைச் சிறை வைத்து என்னைப் பாதுகாக்கும்படி வேண்டினான். அவளுக்கு நற்புத்தி புகட்டி, தன்னை மணந்துகொள்ளச்செய்யும்படியும் என்னை வேண்டினான். மதனமஞ்சுகையோ எப்பொழுதும் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தாள். அவள் உன்னுடைய எழில்களையும் பெருமைகளையுமே பேசி வந்தாள். நான் அவள்மேல் பச்சாதாபங்கொண்டு அவளுடைய நிலையை உனக்குச் சொல்லுவதாக அவளிடம் ஒப்புக்கொண்டேன். எனினும் எனக்கும் அவள் சொல்லிய வார்த்தைகளினால் உன்னைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. உன்னைக் கண்டபின் உன்னிடம் உண்டான அன்பின் மிகுதியால் தான் மதனமஞ்சுகைக்குச் சொன்ன சொல்லைக் காப்பாற்ற இயலவில்லை. இனி மதனமஞ்சுகை இருக்கும் இடத்துக்கு உன்னை அழைத்துப் போகின்றேன்' என்றாள்.

பொழுது புலர்ந்தது. வேகவதி தனது இயற்கை உருவோடு தோன்றினாள். உதயணன் இவற்றை எல்லாம் அறிந்த பின் வேகவதியை நரவாகனனுக்கு மணம்புரிவித்தான். வேகவதியின் தோழிமார்களில் நான்கு விஞ்சிமாதர் நரகவாகனனது தோழருடைய மனைவியராயினர்.

சில நாள்கள் கழிந்தன. வேகவதியை மானதவேகன் காணாமையினால் அவளைத் தேடிச் சென்றான். வேகவதி நரவாகனனோடு வாழ்வதைக் கண்டான். ஒருநாள் நரவாகனன் உறங்கிக்கொண்டிருக்கும்போது வேகவதியின் தமையனாகிய மானதவேகன் இவனை ஆகாயமார்க்கமாகத் தூக்கிச்சென்றான். நரவாகனன் வழியில் விழித்துக் கொண்டான். அப்பொழுது மானதவேகன் நரவாகனனை நோக்கி அவன் மதனமஞ்சுகையைப் பார்த்துவிட்டு உயிர்துறக்க விரும்புகிறானா அன்றிக் கடலில்விழ விரும்புகிறானா என்று கேட்டான். இவர்கள் வாதாடிக்கொண்டு செல்லுகையில் வேகவதி கண்விழித்து நடந்தவற்றை யறிந்து ஆகாயத்திற் பறந்து சென்று தன் அண்ணனோடு போர் புரிந்தாள். மானதவேகன் நரவாகனனை விட்டுவிட வேண்டியதாயிற்று[1]. நரவாகனன் அந்தரத்தினின்

1. வேகவதியின் கதை நாலாயிரப் பிரபந்தத்தில் திருமங்கை மன்னன் திருவாக்காகப் பெரிய திருமடலில் பின்வருமாறு காணப்படும்.

> பின்னும் கருநெடுங்கண் செவ்வாய்ப் பிணைநோக்கின்
> மின்னனைய நுண்மருங்குல் வேகவதீ யென்றுரைக்கும்
> கன்னி தன் இன்னுயிராம் காதலனைக் காணாது
> தன்னுடைய முன்தோன்றல் கொண்டேகத் தான்சென்று-
> அன்னவனை நோக்காது அழித்துரப்பி வானமருள் [அங்கு
> கல்நவில்தோள் காளையைக் கைப்பிடித்து மீண்டும்போய்
> பொன்னவிலும் ஆகம் புணர்ந்திலளே. 52-55.

றும் பூமியில் விழுந்தான். நல்லவேளையாக அவன் ஒரு கிணற்றில் விழுந்தான். அரச குமாரனுகையால் தைரியத்தோடு அதனில் நின்று பழைய நண்பனுன அமிர்தகதியை நினைந்தான். அவனும் அங்குத்தோன்றி அவனைக் கிணற்றினின்றும் தூக்கிக் காப்பாற்றிவிட்டு மேலும் தான் யாது உதவிபுரியவேண்டும் என்று கேட்டுநின்முன். நரவாகனன் அவன்செய்த நன்றிக்கு வந்தனைபுரிந்து வேகவதியையும் காப்பாற்ற வேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டான். அமிர்தகதி அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு நரவாகனனிடம் விடைபெற்றுச் சென்முன்.

V. காந்தர்வதத்தா லாபம்

நரவாகனன் இரவெல்லாம் அந்தக் கானகத்தில் சுற்றித் திரிந்து மறுநாட்காலையிற் காட்டைவிட்டு வெளி வந்தான். இவன் அமிர்தகதியைத் தான் இருக்கும் ஊர் எதுவென விசாரிக்க மறந்துவிட்டான். அதனுலே தான் இன்ன இடத்தில் இருக்கிருனென்று அறிந்துகொள்ள இயலவில்லை. சுற்றித் திரிந்தபோது அவன் ஒரு சிங்கார வனத்தைக் கண்டு அதனுள் நுழைந்தான். எதிரில் கண்ட தோட்டக்காரனை அது எந்த ஊர் என்று கேட்டபோது, அவன் தன்னை ஏளனஞ் செய்ய வேண்டாமென்று சொல்லி அகன்முன். தோட்டத்தினுள்ளே சென்றபோது ஒரு மாளிகை தோன்றிற்று. அதனுள் நுழைந்தான். அங்கே ஒருவன் யாழ் ஒன்றை வைத்துப் பரீட்சை செய்வதைக் கண்டான். அவனையும் இது எந்த ஊர் எனக் கேட்டபோது அவன் தன்னைப் பரிகசிப்பதாக நினைத்தான்.

நரவாகனன் தான் இன்னுனென்று வெளியிடுவது பிழையென்றெண்ணி, தான் வத்தவநாட்டைச் சேர்ந்த

பார்ப்பனச் சிறுவனென்றும், இரவில் துயிலுகையில் ஓர் இயக்கி தன்னைத் தூக்கிவந்து அருகிலுள்ள வனத்தில்எறிந்து விட்டுச் சென்றுளென்றும் கூறினான். இதனைக்கேட்ட அந்த மாளிகையினதிபதி அவன்மேல் இரக்கப்பட்டு அந்த ஊரின் பெயர் சம்பாபதி என்றும், தான் ஒரு வணிகன் என்றும், தன்பெயர் தத்தகன் என்றும் கூறினான். தனக்கு இசையில் அதிகவிருப்பம் உண்டென்பதோடு வீணையில் அதிகப் பிரியமுடையவனாகையால் தன்னைவீணாதத்தகன் என்றும் கூறுவர் என்றனன். அவனை (நரவாகனனை) அந்த ஊரில் இருக்கும் வரையில் தத்தகன் தன்னுடைய இல்லத்தில் விருந்தினனாக இருத்தல்வேண்டும் என்று உபசாரம் செய்தான். சிறிது நேரங் கழித்து இருவரும் பல்லக்கிலேறித் தத்தகன் மாளிகைக்குச் சென்றனர். தத்தகன் பெரிய தனவானாகையால் எங்கும் செல்வம் நிரம்பி இருந்தது. அதனைக் கண்ட நரவாகனனுக்கு ஏழைப் பார்ப்பனப் பிரமசாரியாகத் தான் நடிப்பது மிக்க துன்பமாக இருந்தது.

இருவரும் உண்டு களைப்பாறியபின் உரையாடிக் கொண்டிருக்கையில் நரவாகனன் தத்தகனைப் பார்த்து அந்தச் சம்பா நகரத்திலுள்ளார் அனைவரும் யாழ் வைத்திருக்கக் காரணமென்னவென்று கேட்டான். தத்தகன் பின்வருமாறு கூறலானான்:—

'இந்த நகரில் சானுதாசன் எனப் பெயரிய வணிகனொருவன் இருக்கின்றான். அவனுக்குக் காந்தர்வதத்தை எனப் பெயரிய பெண்ணொருத்தி உண்டு. அவள் இசையில் மிக்க வல்லவள். அவளுக்குப் பிறரறியாததான ஒரு பாட்டு பாடத்தெரியும். அந்தப் பாட்டை எவனொருவன் முடிக்கின்றானோ அவனுக்கு அவளை மணந்து கொடுப்பதாகச்

சாருதாசன் பறையறைவித்திருக்கின்றான். அதன்பொருட்டு ஆறுமாதங்களுக் கொருமுறை பரீட்சை நடப்பது வழக்கம். அவள் மிகுந்த கட்டழகியாகையால் அவளை யடைய ஒவ்வொருவரும் விரும்பி இசையைக் கற்றுத் திரிகின்றனர். அந்தப் பரீட்சை நாளை வரப்போகின்றது. ஆதலால் பார்ப்பனப் பிரமசாரியாகிய நீயும் இசை யறிந்திருந்தால் போட்டி போடலாம்' என்றான்.

இதனைக்கேட்ட நரவாகனனான பிரமசாரி தானும் யாழ் வாசிக்கக் கற்றுக்கொள்ள விரும்புவதாகத் தத்தகனிடம் கூறவே, அவனுக்கு ஒரு உபாத்தியாயரைத் தத்தகன் அழைத்து வந்தான். அவன் மிக்க குரூபியாகவும் ஒன்று மறியாதவனாகவு மிருந்ததால் அவனைப் பரிகசித்து உதறி விட்டு நரவாகனன் யாழில் தானே பயில ஆரம்பித்தான். நகரமாந்தர் அனைவரும் அதிசய மடைந்தனர்.

பொழுது புலர்ந்தது. எல்லோரும் சாருதாசன் இல்லம் குறுகினர். பார்ப்பனப் பிரமசாரியும் அங்குச் சென்றனன். நகரமாந்தர் நிறைந்திருந்தனர். இவனுடைய வடிவழகைக் கண்ட பலர் இவனைப் புகழ்ந்தனர். சிலர் பொறாமையினால் இகழ்ந்தனர். உலகம் பலவிதம் என்பது அங்கு விளக்கமாயிற்று. சிறிது நேரத்திற் கெல்லாம் காந்தர்வதத்தை யாழோடு தோன்றினாள். பந்தயம் தொடங்கிற்று. காந்தர்வதத்தை பாடத் துவக்கினாள். அந்தப்பாட்டு விசுவாவுஸு என்னும் பெயருடைய ஒரு காந்தருவன் பாடிய நாராயண ஸ்துதி என்று நரவாகனன் அறிந்தான். இந்தத் தோத்திரம் இளமையில் உதயணனால் நரவாகனனுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது. அப்போதே காந்தர்வதத்தை தன்னுடையவள் என்று அரசிளங்குமரன் கருதினான். யாழொன்று கொண்டு

வரும்படி அவன் கூறினான். முதலில் யாழ் ஒன்று கொண்டு வந்து கொடுத்தனர். அதனை வாங்கிப்பார்த்து அது குற்றமுடையது என்றும், யாழிற்குரிய இலக்கணம் பலவற்றையும் நரவாகனன் பகர்ந்தான். பின்னுமொரு யாழ் சாருதாசன் கொண்டு வந்தான். அதனில் சிகை யொன்று இருப்பதாக எடுத்துக் காட்டி அதையும் ஒதுக்கினான். மற்றொரு குற்றமற்ற யாழைப்பெற்று அந்த நாராயணஸ்துதியை நரவாகனன் பாட ஆரம்பித்தான். அவையிலுள்ளோர் அனைவரும் உருகினர். காந்தர்வதத்தையும் தலைகுனிந்தாள். நரவாகனன் போட்டியில் வென்றான் என்று சாருதாசன் கூறினான். அவன் காந்தர்வதத்தையை மணந்துகொள்ளும் படி நரவாகனனை வேண்டிக்கொண்டான். அரசிளங்குமரன் தான் பார்ப்பனப் பிரமசாரி யென்றும், வைசியப் பெண்ணை மணப்பது தகாது என்றுங் கூறினான். சாருதாசன் அங்ஙன மாயின் அந்தக் காந்தர்வதத்தையும் பார்ப்பனருக்கும் மேம் பட்டவள், தெய்வப் பிறவி யுடையவளென்று கூறி, அவளை நரவாகனனுக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

VI. சாருதாசன் கதை

சாருதாசனும் நரவாகனனும் உண்டபின்னர் வார்த்தை யாடிக்கொண்டிருக்கையில் சாருதாசன் தன் வரலாற்றைப் பின்வருமாறு கூறினான்:—'இந்தச்சம்பா நகரிலே வணிகர் தலைவனாக என்பிதா இருந்தார். அவர் பெயர் மித்திர வர்மன். தாய் மித்திராவதி எனப்படுவாள். நான் இளமையில் சீலமும் ஒழுக்கமும் உடையவனாக இருந்தேன். என்னுடைய நண்பர் பலருள் துருவகன் என்பவன் என்னோடுகூடி என்னைக் குடிக்கவும் பரத்தையர் சேரியிற் புகவும் பழக்கினான். அவ்

விடத்தில் கங்காதத்தை என்ற பரத்தையோடு பழகிவந்தேன். ஒரு நாள் என் பிதா இறந்துவிட்டதாயும் அவனுடைய இடத்திற்கு அரசன் என்னை நியமித்திருப்பதாயும் செய்தி வந்தது. நான் கங்காதத்தையைத் துறந்து வீடு சேர்ந்து எனக்குரிய வேலைகளைக் கவனித்துவந்தேன். இவ்வாறு ஒழுங்காக நடந்துவருகையில், ஒருநாள் துருவகன் என்னிடம் வந்து கங்காதத்தை மிக்க துன்பப்படுவதாகவும், ஒருநாள் கண்ணுலாவது கண்டால் தன்துயர் தீருமென்று அவள் கூறுவதாகவும், அவ்வாறு செய்யவேண்டியது என் கடமையாகுமென்றும் மன்றாடினான். நான் அவனுடைய வேண்டுகோட்கு இணங்கி அவளது இல்லிற்குச் சென்றேன். பழைய மாதிரியில் தொடங்கிக் கையிலுள்ள பொருளையெல்லாம் இழந்தேன். தாய்க்கிழவி என் கையிற் காசில்லை என்று கண்டவுடன் வீட்டைவிட்டு விரட்டி விட்டாள். வீட்டிற்குத் திரும்பிவந்து பார்த்தேன். என்னுடைய வீடு விற்கப்பட்டுப் பிறனுடைய வசத்திலிருக்கக் கண்டேன். என்னுடைய தாயும் மனைவியும் ஏழைகள் குடியிருக்கும் தெருவில் இருப்பதாகக் கேட்டு அவர்களைக் காணச் சென்றேன். என் மகன் உணவின்மையால் உருத்தெரியாவண்ணம் மெலிந்துபோய் தெருவில் விளையாடக் கண்டேன். இவ்வளவு ஏழ்மைத் தன்மையிலிருப்பவர்களோடு நானும் சேர்ந்து வாழ்ந்துகொண்டு அவர்களைத் துன்புறுத்துவது தகுதியல்லவென்றெண்ணி ஒரு இரவு தங்கி மறுதினம் தாமரலிப்பட்டியில் செல்வ வந்தனுக வாழ்ந்திருந்த என் மாதுலனைக்கண்டு மறுமுறை வாணிபம் செய்வதெனத் தீர்மானித்தேன்.

'இரவு நீங்கிப் பொழுது புலர்ந்தது. தாமரலிப்பட்டி நோக்கிப் பிரயாணமானேன். அன்றிரவு வழியில் ஓர் ஊரில்

தங்கி இரவு உணவுக்காக ஒரு வீட்டிற்குச் சென்றேன். அந்த வீட்டுக்காரன் என்னிடம் முன்னம் வேலையாளாக இருந்தவன். அவன் என் நிலைமையைக்கண்டு பரிதாபப்பட்டு, மறுநாட்காலையில் தாமரிலிப்பட்டிக்குச் செல்லும் தன்னுடைய வணிகச் சாத்தோடு (Caravan) நானும் செல்லலா மென்று கூறி உபசரித்தான்.

'மறுநாள் அந்த வணிகச்சாத்தோடு நானும் செல்லும் போது காட்டுவழியில் கள்ளர் எங்களை வழிமறித்து அடித்துத் துன்புறுத்தினார்கள். நான் அவர்களைத் தப்பியோடிப் பலவித கஷ்டங்களை யனுபவித்து முடிவில் தாமரிலிப்பட்டி யடைந்து எனது அம்மானைக்கண்டேன்.

'அவர் என்னை அன்புடன் வரவேற்று வேண்டுந் திரவியங்களை எடுத்துக்கொண்டு மறுபடி சம்பாநகர் சென்று சுகமாக வாழும்படி கூறினார். நான் அவருடைய அன்னத்தைச் சாப்பிட்டுவிட்டு வீண்காலங் கழிக்க மனங்கொள்ளவில்லை. ஆனால் அவ்வூரினின்றும் கடற்பயணம் புறப்பட்ட ஒரு வணிகனுக்கு இரத்தினப் பரீக்ஷகனாக அமர்ந்து கப்பலேறினேன். கப்பல் சென்று கொண்டிருக்கையில் நடுக்கடலில் உடைந்துவிட்டது. நான் தெய்வாதீனமாய் ஒரு தீவிற் சேர்க்கப்பட்டேன்.

'அந்தத் தீவிலே என்னைப்போலக் கப்பற் சேதத்தினால் தாக்குண்டு அலையினால் ஒதுக்கப்பட்ட பெண்ணொருத்தி களைத்துக்கிடக்கக் கண்டேன். அவளைக் களைதெளிவித்து அவளுடைய சரித்திரத்தைச் சொல்லச்சொன்னேன். அவள் தன் பெயர் சமுத்திரதின்னா என்றும், அவளுடைய தகப்பன் பெயர் சாகரன் என்றும், தாய் பெயர் யாவானி என்றும், அவர்கள் இராசக்கிருகத்தைச் சார்ந்த வணிகர்

என்றும் கூறினள். சாகரனது பெண்ணான தன்னைச் சம்பா நகரில் பெரிய வணிகனான மித்திரவருமன் தனது மகனுக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டிருந்ததாயும், அந்த மித்திரவர்மன் இறக்கவே, அவனுடைய மகனான சானு தாசன் காமாதுரனாகித் தன்பொருளை யெல்லாம் பரத்தை-யர்க் கழித்துவிட்டு பொருள் தேடும் நோக்கத்தோடு ஒரு வணிகச்சாத்தோடு போகையில் கள்வரால் கொலையுண்டா னென்று கேட்ட தன் பெற்றோர்கள் துயரடைந்து இனி இராசக்கிருகத்தில் இருப்பது தகுதியன்று என்று கண்டு அவர்கள் தன்னோடும்கூட தனது தாய் பிறந்த தேசமான யவனதேசத்தை நோக்கிப் புறப்பட்டனர். கடலில் மரக்-கலம் உடையவே அவர்கள் இறந்தனர். அவள் மாத்திரம் அலைகளால் இந்தக் கரையில் ஒதுக்கப்பட்டதாக எனக்குக் கூறினள். நானே அந்தச் சானுதாசன் என்று கூறினேன். அவள் என் சொல்லை நம்பாமல் பின்னும் பல கேள்விகளைக் கேட்டாள். அவற்றிற்கு விடையிறுத்த பின்னர் அவளுக்கு நம்பிக்கை பிறந்தது. அன்றிரவு பெரிய புயற்காற்று அடித்தது. அதனாலே பல பண்டங்களும் மீன்களும் பழங்களும் அலையினால் கரையில் ஒதுங்கின. கரைவந்த மரம் முதலிய வற்றைக்கொண்டு ஒரு குடிலமைத்துக் கிடைத்ததை வைத்துக்கொண்டு நாங்கள் உயிர் பிழைத்துவந்தோம்.

'ஒரு நாள் கடலிற் செல்லும் மரக்கலம் ஒன்று கரையில் எரிந்த வெளிச்சத்தைக்கண்டு கரையோரம் வந்தது. அதிலிருந்த ஒரு வணிகன் எனது தகப்பனான மித்திரவர்மனை அறிந்தவனாகையால் கடலில் தப்பிய எங்கள் இருவரையும் தன் மரக்கலத்தில் ஏற்றிச் சென்றான். சமுத்திரதின்னையை அவன் தன் மகளைப்போல் பாவித்து எனக்கு மணஞ்செய்து

கொடுத்தான். என் மனைவி நாங்கள் தீவிலிருந்தபோது ஒதுங்கிய சிப்பிகளிலிருந்து எடுத்த முத்துக்களை எல்லாம் சேமித்து வைத்திருந்தனள். நடுக்கடலில் மறுபடியும் காற்றினால் கப்பல் உடைந்தது. நான் கரையில் ஒதுக்கப்பட, எனது மனைவி நீரோட்டத்தில் அகப்பட்டாள். அதனால் என் மனைவி இறந்து பட்டாள் என்று நான் நினைத்தேன். பல நாள் அலைந்து திரிந்து ஓர் ஊரை அடைந்தேன். அந்த ஊரில் எல்லோரும் மிலேச்ச பாஷை பேசினர். நான் பேசியது ஒருவருக்கும் விளங்கவில்லை. கடைசியில் அங்கு ஒருவன் நம்முடைய மொழி பேசக்கூடியவன் வந்தான். அவனிடமிருந்து நான் பாண்டிய நாட்டிலிருப்பதாகவும், மதுரையம்பதிக்கு வெகு சமீபத்திலிருப்பதாகவும் அறிந்தேன். மதுரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றேன். வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினேன். அங்கே சிலர் தாங்கள் தாமரிலிப்பட்டியிலிருந்து சாருதாசனைத் தேடி வருவதாகவும், அவனைக் கண்டதுண்டோ என்றும் என்னைக் கேட்டனர். நான் எனது மாமனுடைய செல்வத்தில் வாழச் சம்மத மில்லாததால் மறுபடி அங்குச்செல்லக்கூடாதென்றெண்ணினேன். அதற்குத் தக்கவாறு என்னைத் தெரிவித்துக்கொள்ளாமல் சாருதாசனைக் கண்டதாகவும் அவன் ஏறின கப்பல் உடைந்துவிட்டதால் வேறொரு கப்பலில் ஏறிப் பிறிதொரு தேசம் போய்விட்டதாகவும் கூறி ஏமாற்றிவிட்டு மதுரையை அடைந்தேன். அங்கு நான் இரத்தினப் பரீக்ஷகனாக அமர்ந்தேன். எனது சாமர்த்தியம் எங்கும் பரவவே, பாண்டிய அரசன் என்னை அழைத்து அவனுடைய இரத்தினங்களை விலைமதிக்கச் சொன்னான். அவனிடத்தில் அதிக விலையுள்ள பல இரத்தினங்கள் இருந்தன. அவற்றை விலை மதித்தேன். அதன் பய

ளுக அரசன் எனக்கு ஒரு மாளிகை அளித்தான். சிறிதுநாள் சென்றதும் இரத்தினப்பரீட்சையைவிட்டு நான் பஞ்சு வியாபாரம் செய்தேன். அந்த வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கையில் ஒரு நாள் பஞ்சுக்கிடங்கில் தீப்பற்றிக்கொண்டது. அந்த நாட்டிலே தீப் பிடித்து எரிந்து ஒருவனுக்குச் சொத்துச் சேதமானுல் அந்த வீட்டுக்காரனும் நெருப்பில் விழுந்து உயிர்விட வேண்டுமாம். அவனுக உயிர் விடாவிட்டால் அருகில் இருப்பவர்கள் தீயில் தள்ளிவிடுவார்களாம். இதனைக்கேட்ட நான் எங்கே என்னைக் கொன்று விடுவார்களோ என்று பயந்து இரவே புறப்பட்டுக் காட்டுவழியாக ஓடினேன்.

'வழியில் சிலர் சந்தித்தனர். அவர்கள் தாங்கள் தாமிரிலிப்பட்டியிலிருந்து வருவதாகவும், சாருதாசன் பஞ்சு வியாபாரம் செய்வதாகவும், அவனுடைய அம்மான் கங்காதத்தன் அவனை அழைத்துவரும்படி சொன்னதாகவும் சொன்ஞர்கள். நான் தாமரிலிப்பட்டிக்குப் போகப் பயந்து சாருதாசனுடைய பஞ்சுக்கிடங்கு தீப்பற்றிக்கொண்டதால் அவனும் தீயில் இறந்துபட்டான் என்று சொன்னேன். அவர்கள் அதனை நம்பவில்லை. அவன் இறந்திருக்கமாட்டானென்று சொல்லி, அவனைத் தேடிக்கொண்டு தெற்குநோக்கி நடந்தனர். என்னை எவ்வாருயினும் கங்காதத்தன் கண்டு பிடித்துவிடுவான் என்று எண்ணி அவர்களைக் கூப்பிட்டு அவர்கள் தேடிச்செல்லும் சாருதாசன் நானே எனக் கூறினேன். அவர்கள் தாமரிலிப்பட்டிக்கு என்னை வரும்படி வேண்டிக்கொண்டு அதனை நோக்கித் திரும்பினர்கள். நானும் அவர்களோடு சென்று தாமரிலிப்பட்டி அடைந்தேன்.

'அங்கு என் மாமனேடு பலநாள் மறுபடியும் வீணே கழிக்கச் சம்மதிக்கவில்லை. தங்கம் தேடச்சென்ற ஒருவனேடு

சேர்ந்துகொண்டு கப்பலேறிச் சென்றேன். கடலில் பல துன்பங்களை அனுபவித்துக் கடைசியாக எல்லோரும் கரை சேர்ந்தோம். அங்கிருந்த மலைமேலேறி எல்லோரும் சென்றோம். மலைமேல் ஏறுவதற்கு ஆடுகளை உபயோகித்தோம். சென்று உச்சியை அடைந்ததும் அந்த ஆடுகளைக் கொன்று ஆட்டுத்தோலைப் புரட்டி ஊன் இருக்கும் பக்கத்தை வெளியே வைத்துப் போர்த்துக்கொண்டோம். அப்போது தான் பறவைகள் எங்களை மாமிசபிண்டம் என நினைத்துத் தூக்கிச் சென்று தங்கம் இருக்கும் இடத்தில் போட்டுவிடுமாம்[1]. அவ்வாறே பட்சியொன்று என்னைத் தூக்கிச்செல்லுகையில் வழியில் என்மேல் போர்த்திருந்த தோல் கிழிந்துவிட நான் கீழே விழுந்து விட்டேன். நான் விழுந்த இடம் பரத்துவாசர் ஆசிரமம்.

'பரத்துவாசர் தம் ஆசிரமத்திலிருந்து வெளிவந்து என்னை வரவேற்று உபசரித்தார். ஆயினும் எனக்கு என் தாயைப் பார்க்கவேண்டுமென்ற அவா அதிகமாக இருந்தது. அவரோடு பேசிக்கொண்டிருக்கையில் சிலபெண்கள் அவ்விடம் வந்தனர். அவர்களுள் ஒருத்தியைத் தன் மடிமீதிருத்தித் தடவிக்கொடுத்தார். அவர் சொன்னதாவது:—"இந்தப் பெண் சுப்பிரபை என்ற அரம்பைமகள் வயிற்றில் பிறந்த என்னுடைய மகள். இவளுடைய தாயான சுப்பிரபை கந்தர்வராஜனுடைய மகளாவாள். இந்திரன் என்னுடைய தவத்தையழிக்க எண்ணி அவளைவிட்டு என்னைக் கெடுக்கப்பார்த்தான். அவள் என் தவத்தில் ஈடுபட்டு எனது மனைவியாகி

---

1. இந்தச் செய்தியே பிற்காலத்தில் மேல்நாட்டார் பலரும் இந்தியாவில் தங்கம், இரத்தினம் முதலாயின எடுத்து வரும் வழியாகக் கூறிய கதைகளுக்கு ஆதாரம் போலும்.

இந்தப் பெண்ணைப் பெற்முள். இவளுக்கு வயதுவந்துவிட்ட படியால் நீ உன் மகளாகக் கொண்டு மணஞ்செய்து கொடுக்க வேண்டும். இவள் இசையில் வல்லவள்; இவளுக்கு இசை யோடு நாராயண ஸ்துதி பாடத் தெரியும். இவளோடு ஒத்து எவன் நாராயண ஸ்துதி பாடுவானே அவனே இவளுக்குக் கணவனுவான்" என்முர்.

'நான் காந்தர்வதத்தையையும் அழைத்துக்கொண்டு பரத்துவாசரிடம் விடைபெற்றுச் சம்பாநகரம் நோக்கிப்புறப் பட்டேன். சிறிது தூரஞ் சென்றதும் களைப்பாக இருந்த தால் இளைப்பாறத் தங்கினேன். அயர்ந்து தூங்கிவிட்டேன். விழித்த போது தங்கப் பல்லக்கில் பலர் சூழச் சம்பாநகர் அருகில் இருக்கக் கண்டேன். இவையெல்லாம் பரத்துவா சரது அருளென்று அறிந்தேன். எனது பழைய நண்பர் பல ரும் வந்தனர். துருவன் முதலான துஷ்ட நண்பரும் என் னைக் காண அஞ்சினர். எனது பூர்வீக வீட்டை வாங்கும் படி ஏற்பாடு செய்திருந்தபடியால் அந்த வீடு நோக்கிச் சென் றேன். வீட்டில் எனது தாயாரோடு பரத்தையான கங்காதத் தையையும் கண்டபோது எனக்கு உண்டான கோபத்துக்கு அளவேயில்லை. அவளோ எனது முதல்மனைவிக்கு வேண் டிய சைத்யோபசாரம் செய்துகொண்டிருந்தாள். நான் ஊரை விட்டகன்றதையும், நான் கைப்பொருள் இழந்ததையும் அரசன் ஒற்றர் மூலமாக அறிந்து கங்காதத்தையிட மிருந்து பொருள்களைத் திரும்பக் கவர்ந்து தங்களிடம் ஒப்புவித்த தாகவும், கங்காதத்தையும் தான் செய்த தவறை எண்ணி வருந்தி அன்றுமுதல் இன்றளவும் ஒழுங்காக நடந்து வருவ தாகவும் கூறி அவளையும் மனைவியாக ஏற்று நடத்தவேண்டு மென்று என் தாய் கூறினுள். ஒருவாறு சமாதான மடைந்

தேன். அங்குச் சமுத்திரதின்னைவைக் காண நான் அதிக ஆச்சரியமடைந்தேன். அவள் கடலில் முழுகுந்தறுவாயில் அவளைத் தேடிவந்த அவளுடைய சகோதரர்கள் கண்டு அவளைக் காப்பாற்றி இங்கு அழைத்துவந்ததாகக் கேட்டேன். இவ்வாறு பலவகையாக நான் மகிழ்ச்சிகொள்ளுமளவில் அரசனும் என்னைக் காணவந்தான். அவனைத் தக்கபடி வரவேற்று உபசரித்து அனுப்பினேன். இதுவே என் வரலாறாகும். இப்பொழுது நீயும் காந்தர்வதத்தையை மணந்தாய். 'உனக்குப் பலவகையிலும் சுகமும் மகிழ்ச்சியும் உண்டாகட்டும்' என்று சாறுதாசன் தன் கதையைச் சொல்லி முடித்தான்[1].

VI. அஜிநாவதீ லாபம்

நரவாகனன் காந்தர்வதத்தையோடு சம்பாநகரத்தில் சுகமாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் வித்திஸாகர அரசனை சௌரிமுண்டனது சகோதரனை விகசிகன் என்பான் அவ்விடம் தோன்றினான். அவனை வரவேற்றுக் காந்தர்வதத்தை உபசரித்தாள். அச்செய்கை நரவாகனனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் கந்தர்வதத்தை நரவாகனனிடம் இந்த விகசிகன் பெரிய மாயவித்தைக்காரனென்றும், இவன் பூதவிரதம் செய்யப்போகிறானென்றும், அதை முடித்துவிட்டால் பகைவரால் வெல்லமுடியாதபடி அவ்வளவு

1. மானதவேகனோடு வேகவதி போரிடும்போது கீழே விழுந்த நரவாகனன் வீணாதத்தன் என்ற கந்தருவனால் காப்பாற்றப்பட்டதாகவும், சாகரதத்தனுடைய பெண்ணான காந்தர்வதத்தையை வீணையில் வென்று நரவாகனன் மணந்து கொண்டதாகவும் **கதா சரித் சாகரம்** 14-வது இலம்பகம், 106-வது தரங்கம் 1—32 சுலோகங்கள் கூறும்.

பலமுடையவனுவானென்றும், அதனைத் தடுப்பதற்கு வழி, அவன் இப்பொழுது அனுட்டித்துவரும் கௌரிவிரதத்தில் அவனை உபசரித்துக் கௌரியை வழிபட்டால் அவள் வரமொன்று கொடுப்பாள் என்றும் கூறினுள். அந்த வரத்தால் விகசிகனது கெடுதியை மாற்றுதல்கூடும் என்றும், தான் அந்தப்படிசெய்து அவனை வெல்லக்கூடியபடி அம்பிகையால் வரமடைந்திருப்பதாகவும் கூறினுள்.

ஒரு நாள் சாருதாசன் நரவாகனனை முதலைத் திருவிழா பார்க்க வரும்படி வேண்டிக்கொண்டான். நரவாகனனும் திருவிழா பார்க்கச்சென்றுன். சென்ற இடத்தில் மாதங்கி ஒருத்தியைக்கண்டு அவளது அழகில் ஈடுபட்டான். பின்னர் அவளோடு உறவாடலானுன்.

இதனை அறிந்த காந்தர்வதத்தை தனது நாயகனைக் கோபித்துக்கொண்டாள். அவள் பின்வருங் கதையையுங் கூறினுள்.

'கானனத்தீவு என்று ஒரு தீவு உண்டு. அதை ஆண்ட அரசன்பெயர் மனோஹரன். அவனது மந்திரிகள் பாகுலன், அசோகன் எனப்படுவர். இவர்கள் எல்லோரும் கந்தப்பொடியில் மிக்க விருப்பமுடையவர்களாக இருந்தனர். சுமங்களன் என்றொருவன் கந்தப்பொடியை விற்க அந்த ஊருக்கு வந்தான். அவனை அரசன் முன்பின் அறியாவிடினும் வெகுவாக நம்பினுன்.

'ஒருநாள் அரசன் ஒரு படத்தைப் பார்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அது ஒரு பெண்ணுகமாறியது. மனோகரன் அந்தப் பெண்ணைக் காதலித்தான். அவள் தான் ஒரு இயக்கியென்றும் தான் சீகுஞ்சத்தில் வசிப்பவளென்றும் கூறினுள். அங்கே மனோகரனை வரும்படியாகச் சொல்லிப்

பறந்துசென்றாள். அரசன் கடல்யாத்திரை செய்பவர்களை அழைத்துச் சீகுஞ்சம் செல்லும் வழியைக் கேட்டான். அவர்களாலே சீகுஞ்சம் இருக்குமிடத்தைத் தெரிந்து அவளைத்தேடிச் சென்று கண்டான். இயக்கர் நாட்டில் மானிடர் ஐந்துநாட்களுக்கு மேல் தங்குதல் கூடாதாகையால், சுகுமாரி மனோஹரனைத் தன்னுடைய நாட்டுக்குச் செல்லும்படியாகவும், தான் அவ்விடம் வருவதாகவும் கூறினாள். அரசன் கானனத்தீவைத் திரும்ப அடைந்தான். சுகுமாரியும் வாக்களித்தவாறே கானனத்தீவு வந்து அவனோடு சுகித்திருந்து திரும்பத் தன்னிடம் செல்வாள்.

இவ்வாறு ஓராண்டு சென்றது. ஒரு நாள் அவள் இனி ஓராண்டு வரையில் தான் குபேரனது அவையில் தங்கவேண்டிய காலமாகையால் இங்கு அந்தக்காலம் வரையில் வர இயலாதென்று அரசனிடம் கூறி விடைபெற்றுச் சென்றனள். மனோகரன் மனோவியாகூலம் அடையவே கந்தப்பொடிக்காரனை சுமங்களன் மறுபடியும் சீகுஞ்சத்துக்குப் போகலாமென்றும், தானும் வருவதாகவும் கூறினன். அரசனும் சுமங்களனும் அவ்வாறே கப்பலேறிப் பயணம் செல்லுகையில் கப்பல் உடைந்தது. அரசன் கடலைநீந்திக் கரையேறினன். அந்த நாட்டிலேயிருந்த அரசனுடைய மகளுக்குத் தகுதியான கணவன் கிடைக்காமையால் மனோகரன் தகுதியான கணவனென்று கண்ட சுமங்களன் சூழ்ச்சியாக அவனை இங்குக் கொணர்ந்ததாகக் கூறினன். மனோகரனும் அந்நாட்டு அரசனுடைய மகளான நளினிகியை மணந்தான். இவர்கள் சுகமாக வாழ்ந்துவருகையில் இயக்கியான சுகுமாரி ஒருநா ளிரவில் தோன்றி மனோகரனைத் தூக்கிச் சென்றாள். அது போல இந்த மாதங்கியும் விஞ்சையர்

மகளோ என ஐயுறுகின்றேன்' என்று காந்தர்வதத்தை கூறினாள். அன்றுமுதல் நரவாகனன் மாதங்கிவீடு செல்லாமல் நின்றுவிட்டான்.

ஒருநாள் வீணுதத்தகன் நரவாகனனிடம் வந்து தெருவில் போகின்ற கிழவி ஒருத்தி தன் மகள் அஜிநாவதியை நரவாகனனுக்கு மணந்துகொடுத்திருப்பதாகப் புலம்பித்திரிகிறாள் என்றான். இந்தச் செய்தியைக் கேட்டவுடன் காந்தர்வதத்தை அச்சமடைந்து நோய்வாய்ப்பட்டுத் துன்புற்றாள். அவள் துன்புறுவதை நரவாகனன் கவனித்துக் கொண்டிருக்கையில் அவள் உறங்கிவிட்டாள். அப்பொழுது அவ்விடம் ஒருபேய் தோன்றிற்று. அதை நரவாகனன் வெட்ட முயன்றான். ஆயினும் காந்தர்வதத்தை விழித்துக்கொள்வாளே என்று அஞ்சி அவன் வாளா இருந்தான். அந்தச் சமயத்தில் அந்தப் பேய் அவனைத் தூக்கிக்கொண்டு ஒருவரும் அறியாதபடி ஓடிற்று. நகரில் பலவித அரவங்கள் உண்டாயின. கோமுகனால் நிமித்தங்களை நன்குஅறிந்திருந்த அரசிளங் குமரன் அவற்றின் பயனை ஆராய்ந்தான். தூக்கிச் சென்ற பேய் இடுகாட்டில் விட்டது.

அங்கு முன்னர் தெருவில் கண்ட கிழவி தீ வளர்த்து மாயவேலை செய்துகொண்டிருந்தாள். அவள் ஒரு விஞ்சை மாது. தனவதி என்னும் பெயரினள். அவளுடைய மகன் சண்ட சிங்கனுக்கு அஜிநாவதி என்றொரு மகளுண்டு. அவள் நரவாகனனை முதலைத் திருவிழாவில் கண்டாள். 'கண்டது முதல் அவனை மணந்துகொள்ளவிரும்பினாள். இதனை அறிந்த அவளது பாட்டி தன் பேரத்தியின் சுகத்தைக் கருதி எவ்வாறுவது நரவாகனனைக்கொணர்ந்து அவன் விரும்பாவிடினும் அவன் விருப்பத்துக்கு மாறாக அஜிநாவதியை மணஞ் செய்

விப்பதாகத் தீர்மானித்தாள். அதனை நிறைவேற்றவே இந்தப் பேயை அனுப்பினள். நரவாகனன் பேயினல் கிழவிமுன் சுடு காட்டில் கொண்டுவரப்பட்டவுடன் அந்தக் கிழவி அஜிதா வதியை அழைத்து இருவர் கையையும் சேர்த்துக்கொண்டு ஒருவரை யொருவர் மணந்ததாகக் கூறினள். அப்பொழுது ஒரு ஆகாயரதம் வந்தது. இருவரும் அதனில் ஏறினர். உடனே சண்ட சிங்கனது ஊரை அவர்கள் அடைந்தனர். ஒரு நல்லநாளில் இருவருக்கும் மணம் நடந்தது.[1]

ஆயினும் அஜிதாவதி மகிழ்ச்சி கொள்ளவில்லை. முன் னம் விகசிகன் என்ற விஞ்சையன் இவளைத் தனக்கு மணஞ் செய்து கொடுக்கும்படி சண்டசிங்கனைக் கேட்டிருந்தான். சண்டசிங்கன் அஜிதாவதி சிறுமியாக இருக்கின்றாள் என்று சொல்லிக் காலங்கடத்தி வந்தான். ஆனல் விகசிகன் தனக்கு மணந்துகொடுத்துவிட்டதாக எங்கும் தெரிவித்திருந்தான். அஜிதாவதி நரவாகனனை மணந்தாளென்று தெரிந்தவுடனே விகசிகன் சண்டசிங்கன்மேல் வழக்குத் தொடர்ந்தான். அந்த வழக்குக்காக நரவாகனனும் அஜிதாவதியும் சப்த பருணை என்ற ஊருக்குப் போகவேண்டியதாயிற்று. வழக்கை விசாரணைபுரிய வேண்டியவனன வாயுமுக்தன் வழக்கைத் தள்ளிவிட்டான். எனினும் விகசிகன் நரவாகனனைத் துன் புறுத்துவதாகப் பயமுறுத்திச் சென்றான். ஆயினும் நரவா

1. அஜிதாவதி தனவதியின் மகளென்றும் இவள் நரவா கனனை மணப்பாளென்று தேவதைகள் தெரிவித்திருந்ததாகவும் கதாசரித் சாகரம் 14-வது இலம்பகத்தில் காணப்படும். இந்த இலம்பகத்தில் மதனமஞ்சுகை மானதவேகனல் கவரப்பட்டது முதல் வேகவதி, காந்தர்வதத்தை, அஜிதாவதி, பிரபாவதி என்ற ஐந்து பேரையும் மணந்த கதைகள் கூறப்படுகின்றன.

கனன் அஜிநாவதியை மகிழ்ச்சியுறும்படி செய்துகொண்டு வந்தான். இவ்வாறு மகிழ்ச்சியோடு இன்பம் அனுபவித்து வந்தாலும் அவனுக்குக் கட்டுப்பட்டிருப்பதில் அஜிநாவதிக்குச் சம்மதம் இல்லை. இவர்கள் ஒரு தீர்த்தயாத்திரைக்குச் செல்லுகையில் விகசிகன் அங்குத் தோன்றி நரவாகனனை வாயில் வந்தபடி திட்டிவிட்டு அஜிநாவதியைத் தூக்கிச்சென்முன். இதனைக் கண்ட சண்டசிங்கன் பெருஞ்சேனையோடு விகசிகனைத் துரத்திச் சென்முன். நரவாகனனே நடுக்காட்டில் துணையின்றி நின்முன்.

பின்னர் அவன் வெகுதொலைவு நடந்து வழி தெரியாது திகைத்துக் களைத்துப் போனுன். அப்பொழுது இடைப் பையன் ஒருவனுடைய மாடோட்டுங் குரலொன்று கேட்டது. அந்தக் குரல் வழியே சென்று அவனைக் கண்டு அவன் வார்த்த கஞ்சியை உண்டு இரவைக் கழித்தான். மறுநாள் அந்த இடைப் பையன் அடுத்த ஊருக்குச் செல்லும் வழியைக் காட்டினுன்.

நரவாகனன் இடைப்பையன் காட்டிய வழியே சென்று அந்த ஊரை அடைந்ததும், இவனைக் கண்ட முதல்மனிதன், 'இங்குத் தன் தமையனைத் தேடித்திரியும் இளம் பிரபுவின் தமையன் இதோ வந்தார்' என்று கூவினுன். பின்னர்த் தன்னைத் தேடிவந்தவன் கோமுகனென்று அறிந்து அவனைக் கண்டு தழுவி மகிழ்ச்சி கொண்டான்.

கௌசாம்பியை நரவாகனன் விட்ட பிறகு நடந்த வரலாற்றை கோமுகன் ஆதியோடந்தமாகக் கூறினுன். உதையணன் துக்கத்திலாழ்ந்ததும், ஒருநாள் வேகவதியும் அமிர்தகதியும் தோன்றினதும், வேகவதி உயிர்வாழ மறுத்ததும், பின்னர் அமிர்தகதியால் உயிர்தாங்கி நிற்பதும், நரவாகனன்

உயிரோடு சம்பா நகரில் வாழ்வதாக அமிர்தகதி யோக வுணர்ச்சியால் கூறினதும், அதன்மேல் உதையணன் சிறிது ஆறுதலடைந்திருப்பதும் பிறவும் கூறினுன். உதையணன் ஒரு பெரிய வணிகச்சாத்தைத் தன்னேடு கூட்டி யனுப்பி நரவாகனனை அழைத்து வரச்சொன்னதும், அவர்களை வழி யில் காட்டு ஜனங்கள் வழி மறித்ததும், தான் கெட்டு ஓடி னதும், புளிந்தர்களை அரசனுடைய காவலர் வென்றுவிட்ட தாகக் கேள்விப்பட்டதும், தனது குதிரை வெறித்து ஓடிக் கீழே விழுந்து இறந்ததும், பின்னர் இந்த ஊரை அடைந்த தும் மற்றும் கூறினுன். இவர்கள் அங்கேயே ஒரு மாத காலந் தங்கி இளைப்பாறினுர்கள். பின்னர், கோமுகன் காசிக்குச் சென்ருல் தங்கள் நாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளலாமென்று கூறினுன். அவ்வாறே காசிநோக்கி இருவரும் புறப்பட்டனர்.

VII. பிரியதர்சனு லாபம்

கோமுகன் வழிப்பாதைத் துன்பம் நீங்கப் பலகதைகளைச் சொல்லியும் விளையாட்டைச் செய்தும் வந்தான். இவர்கள் காசியை நெருங்கினுர்கள். திருடருக்கு அஞ்சி நரவாகனன் அணிந்திருந்த ஆடையாபரணங்களைக் களைந்து கொடுக்கும்படி கோமுகன் வேண்டிக்கொண்டான். நரவாக னனை அங்கிருந்த சத்திரத்தில் தங்கியிருக்கும்படியாயும் தான் பட்டணம் போய் வருவதாயும் கூறிக் கோமுகன் சென்ருன்.

அந்தச் சத்திரத்தில் ஒரு சந்நியாசியும் ஒரு பிரமசாரி யும் வந்தனர். முதல்வன் பாஷண்டி. பின்னவன் திருடன். இவர்கள் விதி பெரிதா மதி பெரிதா என்று வாக்குவாதஞ் செய்துகொண்டிருந்தனர். வாக்குவாதத்தின் நடுவில் திரு

டன் நரவாகனனைச் சுட்டிக்காட்டி இவனுடைய அங்க அடையாளங்கள் இவனொரு சக்கரவர்த்தியாக இருக்க வேண்டுமென்று காட்டுகிறது; இருந்தாலும் இவன் போக்கிரியாக ஆடையின்றிக் கந்தையோடு காணப்படுகிறான் என்றான். இதனாலே விதி பெரிது என்பது விளங்கவில்லையா என்று கள்வன் சொன்னான். அதனையும் நரவாகனன் கேட்டுக் கொண்டு வாளா இருந்தான்.

பட்டணத்திற்குள் சென்ற கோமுகன் அந்தப் பட்டணத்து அரசனுடைய அரண்மனை வாசலுக்குச் சென்று காத்திருந்தான். அரண்மனையிலிருந்து ஒரு பெரியமனிதன் வந்தான். கோமுகன் அவனிடம் சென்று தான் அவந்தியிலிருந்து கல்வியின் பொருட்டுத் தன் தமயனோடு இந்தப் பட்டணத்திற்கு வந்திருப்பதாகக் கூறினான். அந்தப் பெரிய மனிதன் தனக்குப் புனர்வசு என்று பேரென்றும் தான் ஒரு பெரிய வியாபாரி என்றும், தனது வீட்டில் கோமுகனும் அவனது தமையனும் தங்கியிருக்கலா மென்றும் முகமன் கூறி, அவனைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான். கோமுகன் அந்த வீட்டில் தங்கினபோது எதிரில் பெரிய ஆரவாரம் கேட்டது. இவன் அங்குச் சென்று ஆரவாரத்திற்குக் காரணத்தை விசாரிக்கையில் அங்குச் சூதாடுவது வழக்கமென்றும், அதற்குரிய பணயமெல்லாம் புனர்வசு கொடுப்பதென்றும், வெல்லும்போது கனத்த ஆரவாரமும் தோற்கும்போது மிகுந்த துக்கக் கொண்டாட்டமும் சூதாடுமிடத்தைச் சூழ்ந்திருப்போரால் செய்யப்படுகிறதென்றும் அறிந்தான். இவனும் நரவாகனனுடைய நகைகளை ஈடாக வைத்து ஒரு ஆட்டம் ஆடினான். அதனில் இலட்சம்வராகன் கெலித்தான். இதனை அறிந்த புனர்வசு கோமுகனை

அதிகமாக உபசரித்து உண்ணச்செய்தான். உண்டபின் இருவருஞ் சென்று நாவாகனனை அழைத்து வந்தனர்.

நரவாகனன் புனர்வசுவின் செலவில் வசிக்க இஷ்டப் படவில்லை. அதனை அறிந்த கோமுகன் தங்களுக்கென பரி சாரகர்களையும் விடுதியையும் திட்டஞ் செய்துகொடுக்கும்படி புனர்வசுவை வேண்டிக்கொண்டான். அவனும் இருவரைத் தெரிந்து வேலையில் அமர்த்தினுன். வந்த இருவரும் நர வாகனனைக் கண்டதும் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்ட னர். அன்று சமையல் நடந்தது. அதனையுண்ட நரவாக னன் அவர்களது சமையலை மெச்சினுன். அவர்களை அழைத் துத் தலைக்குப் பதினுயிரம் பொன் பரிசளிக்கும்படி கோமுக னுக்குக் கட்டளையிட்டான். ஆயினும் சமையற்காரருள் மூத்தவன் தன்னுடைய எஜமானனிடம் இச்சமயம் பண மின்மையால், சன்மானம் பெறுவது தகுதியல்ல வென்ருன். இளையவனே எஜமானன் சக்கரவர்த்தியல்லவோ வென்று கூறிச் சன்மானத்தைப் பெற்றுக்கொண்டான். இவைகளைக் கேட்ட கோமுகன் விஷயத்தை விளக்கமாகச் சொல்லும்படி அவர்களைக் கேட்டபோது, அவர்கள் தாங்கள் காசிராஜனுன பிரமதத்தனது சமையற்காரனது புதல்வர்களென்றும் நந் தோப நந்தரென்று பேரென்றும், தாங்கள் மக்களது அங்க அடையாளங்களைக் கண்டு பின்வருங் காரியங்களைச் சொல் லக் கூடியவர்கள் என்றும், நரவாகனனைக் கண்டதும் அவன் வித்தியாதரச் சக்கரவர்த்தியாதற்குரிய அடையாளங்கள் அவனது உடலில் காணப்பட்டமையாற்ருன் தாங்கள் தெண்டனிட்டு வணங்கிய தென்றும் கூறினுர்கள்.

அரசகுமாரர்கள் காசியில் சுகமாகக் காலங்கழித்துக் கொண்டுவருகையில் ஒருநாள் தெருவில் ரிஷிதத்தை என்ற

சமணி (சமணப் பெண் துறவி) சென்றனள். அவள் அரச னிடம் மிக்க நட்புடையவள். புனர்வசு தனது விருந்தின ருக்கு அவளை அறிமுகஞ்செய்துவிக்க முயன்றான். அவள் இடங்கொடுக்கவில்லை. இதனைக்கண்ட கோமுகன் அவளைப் பின்தொடர்ந்து ஜைனப் பள்ளிக்குச் சென்றான். அவன் எல்லாத் துறைகளினும் கைதேர்ந்தவனுகையால் அங்கு ஜின தேவன்மேல் மிக உருக்கமாக ஒரு பாட்டுப் பாடினான். அந் தப் பாட்டில் கட்டுண்ட சீடகோடிகள் புதியவர் பொருட்டு இசைப்பாட்டுக்கோஷ்டி நடத்தவேண்டு மென்றனர். அதன் பொருட்டு நகரிலே இசையில் வல்லவர்களான கங்கரக்ஷித னும் பிரியதர்சனையும் வரவழைக்கப்பட்டனர். பிரியதர்சனை யைக் கண்டதும் ஒரு இளமானைக் கண்டதுபோல நரவாக னன் வணங்கினான். அதனால் அவையோர் சிறிது வருத்த மடைந்தனராயினும் நரவாகனதத்தன் செய்த வீணகானத் தினால் சபையோர் மெய்மறந்தனர். பிரியதர்சனை நரவாகன னிடம் யாழ் பயிலவேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள். இந்தப் பிரியதரிசனை வணிகர் தலைவனுகையால் நரவாகன னிடம் யாழ் பயில்வதனால் மிகுந்தலாபம் உண்டென்று கோமுகன் எண்ணினான். அதனை நரவாகனனும் ஒத்துக் கொண்டு அவனுக்கு யாழ்பயிற்றுவிப்பதாக ஒப்புக்கொண் டான்.

கோமுகன் அடிக்கடி வெளியிற் சென்றுவந்தான். நர வாகனன் அவனை எங்கு செல்லுகிறாயென்று கேட்ட போது கௌசாம்பியைச்சார்ந்த தண்டத்தலைவனான அரிசி கனது பணியாளன் ஒருவன் தெருவில் காணபட்டானென் றும் அவனைத் தேடித்திரிவதாகவும் சொன்னான். உண்மை யில் அவன் அவ்வாறு செய்யவில்லை. அவன் ரிஷிதத்தை

யைக் காதலித்தான். அதற்காகச் சைனத்துறவிகளுக்கும் சைனப்பள்ளிக்கும் பெருந்தொகை செலவிட்டான். இத ஞலே சைனத்தலைவியாக இருக்கும் ரிஷிதத்தைக்கும் கோமு கனுக்கும் அதிக நட்பு உண்டாயிற்று. அவள் தான் இராசக் கிருகத்திலிருந்த மகாதின்னனுடைய மகளென்றும், கோமு கன் தனது அத்தை மகள் என்றும், தன்னை அவனுக்கு மணந்துகொடுப்பதாகப் பெரியோர் நிச்சயம் செய்திருந்தனர் என்றும், கோமுகன் காட்டில் செல்லும்போது புளிந்தகரால் கொலையுண்டனனென்றும் சொல்லி வருத்தப்பட்டாள். கோமுகன் அப்பொழுதும் தன்னை இன்னுனென்று காட்டிக் கொள்ளாமல் பார்ப்பனச் சிறுவனுகவே நடித்துவந்தான். இவள் எவ்வாறு சைனத்துறவியாயினள் என்று கேட்ட போது தான் சிறுமியாயிருக்கும்போது தனக்கு விடாத வெப்புநோய் கண்டது என்றும், அந்த நோயைத்தீர்க்க ஒரு வராலும் ஆகாமற்போகவே அதனைச் சருததரை என்ற சைனத்துறவி நீக்கினுள் என்றும், அன்றுமுதல் அவளோடு வாழ்ந்துவந்ததால் சைனமார்க்கத்தைச்சேர்ந்துதவக்கோலம் கொண்டதாகவுஞ் சொன்னுள். நாளுக்குநாள் இவர்களுள் அன்பு முற்றவே கோமுகனும் தன்னை இன்னுனென்று கூறி ஞன். ரிஷிதத்தையும் தனது துவராடையைக் களைந்து மணப்பெண்ணுகி கோமுகனை மணந்துகொண்டாள்.

இவ்வாறு இவர்கள் வாழ்ந்துவருங் காலத்தில் நரவா கனன் பிரியதர்சனை பெண்ணென்றும் அவளை மணந்து கொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கோமுகனை வற் புறுத்தினுன். கோமுகனே ஊரார் பிரியதரிசனையை ஆணெ ன்று நினைத்திருக்கின்றனர் என்றும் ஊருக்குக் கட்டுப்பட வேண்டுமென்றும் பலவிதத்திலும் எடுத்துக் கூறினுன்.

மேலும், முன்னொரு காலத்தில் சத்தியகஞ்சிகன் என்று ஒரு பார்ப்பனன் இருந்தானென்றும், அவன் கங்கையிலே கல்லொன்று மிதந்து அக்கரை செல்லக் கண்டான் என்றும், அந்தச் செய்தியைத் தன் மாணவர்களுக்குச் சொல்ல அவர்கள் ஊரில் அதனைப் பரப்பினர் என்றும் அவன் கூறினான். ஆனால் அதனை ஊரார் நம்பவில்லை. அந்தச் செய்தி அரசன் காதுக்கு எட்டியபோது அவன் சத்திய கஞ்சிகனை வரவழைத்துக் கேட்டான். அவன் தான் ஒன்றும் அறியாதவன் என்று கூறிவிட்டான். ஆகையால் ஊரில் நம்பும்படியான செய்தியைக் கூறவேண்டுமென்றும், இல்லாவிட்டால் ஊரார் நம்பமாட்டார்கள் என்றும் எவ்வளவு எடுத்துக் கூறியும் நரவாகனன் கேட்கவில்லை. தன்னுடைய எஜமானனைத் திருப்தி செய்விக்கக் கோமுகன் பிரியதரிசனையை விருந்துக் கழைத்தான். இருவரும் விருந்துண்டு சுகமாகக் காலங் கழித்தனர். அந்தச் செய்தி ஊரில் பரவவே பலர் பலமாதிரி பேச ஆரம்பித்தனர்.

மறுநாள் காசியரசனான பிரமதத்தன் நரவாகனனை அழைப்பதாக ஆள் வந்தான். நரவாகனன் ராஜசபைக்குப் போனபோது பிரியதரிசனையின் தகப்பனான காசியன் மறு பிறப்புப் பிறந்துவந்திருப்பதாகவும் அவன் தன்னுடைய நற்கருமத்தால் புண்ணியலோகத்தை அடைந்தாலும் தன்னுடைய மனைவி செய்த அடாச்செய்கையால் தான் இப்பொழுது மறுசென்மம் எடுத்திருப்பதாகவும் கூறினான். தன்னுடைய மனைவி செய்த அடாத செய்கை தனக்குப் பிறந்த பெண்ணை ஆண்பிள்ளை என்று ஊராரை ஏமாற்றி ஆண்பிள்ளையாகவே வளர்த்ததுதானென்றும் பிரியதரிசனை பெண்தானென்றும் அவையில் சொன்னான். ஊரார் எல்லோ

ரும் மகிழ்ச்சி அடைந்தனர். இவ்வாறு கூறியவன் ஒரு குறளன். ஒருவன் தெருவில் இந்தக் குறளனைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தான். அவன் இனி அந்தக் குறளனைத் தன்னால் கட்டிச்சுமக்கமுடியாதென்றும் அவனைக் கழுத்தை முறித்துக் கொன்றுவிடப் போவதாகவும் கூறினான். அந்தக் குறளன் தன்னை அவ்வாறு செய்யவேண்டாம் என்றும், யாருக்காவது அடிமையாக விற்றுவிடும்படியாகவும் அவனை வேண்டிக்கொண்டான். இதனைக்கேட்ட கோமுகன் இது தான் நல்ல தருணமென்று அந்தக் குறளனை வாங்கினான். தனது மனைவியால் பிரியதரிசனையின் பூர்வோத்தரம் தெரிந்தவனாதலால் அந்தக் குறளனுக்குப் போதனைசெய்து காலியனை நடிக்கச்செய்து காரியத்தைச் சாதித்தான். பின் நரவாகனன் பிரியதரிசனையை மணந்துகொண்டு சுகமாக வாழ்ந்தான்.

VIII. பாகீரதியசோ லாபம்

காசியரசன் பிரமதத்தனது பெண்ணான பாகீரதியசஸ்[1] என்பாள் ஒருநாள் பல அந்தணருக்குத் தானம் வழங்குவதாயும் அவற்றுள் சில நரவாகனனுக்கும் அனுப்பப்பட்டதாயும் தாதி ஒருத்தி பல சன்மானங்களைக் கொணர்ந்தாள். பின்னொரு நாள் பிரிய தரிசனையைப் பாகீரதி கூப்பிடுவதாகத் தாதியொருத்தி வந்தாள். அரண்மனைக்குச் சென்றபோது பாகீரதி பிரியதரிசனையை நரவாகனனைக்குறித்து பல கேள்விகள் கேட்டாள். பின்னர் அவளுக்குச் சன்மானங்களைச் செய்தாள். பின்னுமொருநாள் அவள் செடிகட்குத் திருமணம் செய்யப்போவதாகவும் அதற்குப் பிரியதரிசனையை அழைக்

1. சிராவஸ்தி அரசனான பிரசேனஜித்தின் மகள் பாகீரதி யசஸ் என்று கூறும் கதாசரித் சாகரம். (தரங்கம் 106, சுலோ 33-49.)

கத் தானே வருவதாகவும் சொல்லியனுப்பினாள். அன்று வந்தபோது நரவாகனனது கட்டழகைப் பாகீரதி கண்டாள். பின்னர் அவனை மணந்துகொண்டு சுகமாகக் காலங்கழித்து வந்தாள்$.

அவன் பாகீரதியசஸோடு வாழ்ந்து வந்தானாயினும் அவனுக்கு மற்றைய மனைவியரையும் கோமுகனையும் விட்டுப் பிரிந்திருந்த துன்பம் அதிகமாக இருந்தது. அதனால் அவன் அதிகமாக உறங்குவதுகூடக் கிடையாது. இப்படி விழித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் நள்ளிரவில் ஒரு பெண்ணுடைய அழுகை யொலி இவனுடைய காதில் விழுந்தது. பிறகு கூர்ந்து கேட்குமளவில் அது தனது மனைவியான மதனமஞ்சுகை படுந் துன்பங்களைக் கூறிப் பிரலாபிப்பதாகத் தோன்றிற்று. வெளியில் வந்து குரலோசை உண்டாகும் வழியே சென்று பார்த்தான். அது ஒரு பெண்ணென்று தெரிந்தது. அவள் நரவாகனனிடம் வந்து தான் பிங்கள காந்தாரன் என்ற கந்தர்வனுடைய மகளென்றும், தன்னுடைய பெயர் பிரபாவதியென்றும், தான் வேகவதியைக் காணச் சென்றபொழுது மதனமஞ்சுகையைக் கண்டதாகவும் கூறினாள். மதனமஞ்சுகை துக்கக் கடலில் ஆழ்ந்திருப்பதாகக் கூறினதோடு தான் எவ்விதத்திலாயினும் நரவாகனன் இருக்குமிடத்தைக் கண்டு அவனுடன் மதனமஞ்சுகையின் நிலைமையைக்கூறிப் பின்னர் அவனுடைய நிலைமையைத் தெரிந்து வந்து மதனமஞ்சுகைக்குச் சொல்லுவதாக வாக்களித்து வந்திருப்பதாகவும் கூறினாள்.

$. இதுவரையில் சுலோகமஞ்சரியிலுள்ளபடி கூறப்பட்டது; இதற்குமேல் கதாசரித் சாகரத்தில் கண்டபடி ஒருவாறு செம்மை செய்து எழுதப்படுகிறது.

நரவாகனன் மதனமஞ்சுகையைக் காண்பதற்காக எங்கு வேண்டுமானாலும் அவளைப் பின்தொடர்ந்து வருவதாகக் கூறினன். அவள் நரவாகனனை அழைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் செல்லுகையில் இருவரும் வழியிற்கண்ட அக்கினியை வலஞ்செய்து சென்றனர். பிரபாவதி நரவாகன னுடைய அழகில் ஈடுபட்டதாகவும், அதனாலே அவனை மணந்துகொண்டு வாழ இச்சைப்பட்டாலும் மதனமஞ்சுகை யின் மனம் புண்படுமேயென்று அஞ்சவதாகவும், ஆயினும் அவனை விட்டுவிட மனமின்மையால் இப்பொழுது அக்கினி சாட்சியாக மணந்துகொண்டால் பின்னொருக்கால் மனைவி யாக வாழ்வது எளிதாதல் கூடுமென்று எண்ணி இவ்வாறு செய்ததாகவும் கூறினாள். இவ்வாறாகப் பிரபாவதி மகிழ்ச்சி யோடு உரையாடிக்கொண்டே மதனமஞ்சுகையை மானத வேகன் சிறைவைத்திருக்கும் விஞ்சையர் ஊரான ஆஷாட புரம் சென்று மதனமஞ்சுகையிடம் நரவாகனனைச் சேர்த் தாள். வித்தியாதரருலகிலே மானிடர் தங்குதல் தகாத செய்கையாகையால், பிரபாவதி தன்னுருவை நரவாகனனுக் குக் கொடுத்தாள். நரவாகனன் பிரபாவதியாக மதனமஞ்சு கையோடு வாழ்ந்துவந்தான். பிரபாவதி அளகைவேந்தனது அவைக்குச் செல்லவேண்டிய காலம் வந்தபோது பிரபாவதி தன் சுயஉருவில் சென்றுவிட்டாள். நரவாகனன் பிரபாவதி யுருவைவிட்டுத் தன்னுடைய இயற்கையுருவில் தோன்றினன். அவனைக் கண்டவுடனே விஞ்சையர் திடுக்கிட்டு ஆச்சரிய மடைந்தனர். இதனைக் கேட்ட மானசவேகன் நரவாகன னோடு சண்டையிட்டுக்கொல்ல நினைத்தான். ஆனால் மானத வேகனுடைய தாய் அவனை அவ்வாறு செய்யவேண்டா மென்றும் வாயுபதனென்ற வித்தியாதர நீதிபதியிடம் முறை

யிட்டுக்கொள்ளும்படியும் அவனுக்குப்புத்திகூறினாள். அதற்கு இணங்கி மானதவேகன் நரவாகனனைக்குறித்து வித்தியாதர நீதிபதியிடம் முறையிட்டுக்கொண்டான். அவன் நரவாகனன் பக்கமாகத் தீர்ப்புக் கூறவே, அதனை மானதவேகன் ஏற்றுக் கொள்ளாமல் நியாயத்தீர்ப்புச் சொன்ன வாயுபதனோடு போர்புரியத் தொடங்கினான். நரவாகனன் பாடும் மிக்க துன்பத்துக்கு இடமாயிருந்தது. அந்த வேளையில் பிரபாவதி தன்னுடைய மாயத்தால் பரமேசுரனே அவ்விடம் தோன்றுவதாகக்காட்டினாள். அவரைக் கண்டதும் போரை நிறுத்தி அவரவர் தம்மில்லம் சேர்ந்தனர். ஆயினும் மானதவேகன் மதனமஞ்சுகையைச் சிறையினின்றும் விடவில்லை. இந்தச் சமயத்தில் பிரபாவதி நரவாகனனை அழைத்துக்கொண்டு ருசியமுக பர்வதம் சென்றனள். ருசியமுக மலை சித்தர்கள் வாழுமிடம். அவர்கள் இருக்குமிடத்தில் கந்தர்வர்கள் செல்லுவதில்லை. அவர்களுடைய தொந்தரையும் அங்கு இல்லை. அதனாலே நரவாகனனும் பிரபாவதியும் அந்த மலையிலே சுகமாகக் காலங்கழித்து வந்தனர்.

இவ்வாறாக இவர்கள் ருசியமுக மலையிலே வாழ்ந்து வரும்போது தனவதி அஜிநாவதியை அழைத்துக்கொண்டு அவ்விடம் வந்துசேர்ந்தாள். அவள் நரவாகனன் அந்த மலையில் இருப்பது அழகல்லவென்றும், வித்தியாதரச் சக்கரவர்த்தியாக வரப்போகும் ஒருவன் இவ்வாறு காலங் கழித்தல் அடாது என்றும், தான் தன்னுடைய மகனை சண்டசிங்கனையும் தன்னோடு வரக்கூடிய வித்தியாதரர்களையும் அழைத்துக்கொண்டு கௌசாம்பி வருவதாகவும் சொன்னதோடு அவனையும் கௌசாம்பிக்குத் திரும்பும்படி வேண்டிக்கொண்டாள். அவளுடைய வேண்டுகோளுக் கிணங்கி

நரவாகனன் கௌசாம்பிக்குப் பிரபாவதியுடனும், அஜினு வதியுடனும் வந்து சேர்ந்தான். இவன் வரவைக் கண்ட நகர மாந்தரும் உதயணனும் வாசவதத்தை முதலான அரசியரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். இவற்றை யெல்லாம் அறிந்த மற்றைய விஞ்சை மாதராகிய மனைவியரும் அவர்களுடைய பரிவாரங்களோடு கௌசாம்பி வந்து நரவாகனனோடு வாழலாயினர்.

IX. பல மணங்கள்[1]

ஒரு நாள் தபந்தகன் நரவாகனனிடம் வந்து அழகிய மாதொருத்தி ஆகாயத்தினின்றும் இறங்கி இளங்காவிலே அசோக மரத்தினடியில் இருக்கின்றாளென்று கூறினான். நரவாகனன் எழுந்து சென்று அந்த மாதரசியைக் கண்டான். அவள் நரவாகனனைக் கண்டதும் எழுந்து வணங்கி நின்று தன் பெயர் இரத்தினப்பிரபை யென்றும் தான் காஞ்சன சிருங்கத்தை யாளும் ஹேமப்பிரபன் என்ற விஞ்சையர்க் கிறைவனது மகளென்றும் கூறினாள். நரவாகனனை மணந்து கொண்டு வாழ்வாளென்று கணிகள் முன்னமே கூறினரென் றும், அங்ஙனமே நரவாகனனை மணந்துகொள்ளுதற் பொருட்டு அவள் வந்திருப்பதாகவும் கூறினாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவளது தகப்பனும் சகோதரனும் அங்குவந்து இரத்தினப்பிரபையை மணந்துகொள்ளவேண்டு மென்று அவனைக் கேட்டுக்கொண்டனர். அவனும் சம் மதிக்கவே, அவனை அழைத்துக்கொண்டு காஞ்சனசிருங்கம் சென்று திருமண முடித்தனர். சிறிதுநாள் கழித்ததும் கௌசாம்பியிற் கொண்டுவந்து அவர்களை விட்டனர்.

1. கதாசரித் சாகரம் இந்த மணவினைகள் முதலில் நடந்த தாகக் கூறும.

சில நாள் கழித்து நரவாகனனும் கோமுகனும் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றனர். காட்டிலே நரவாகனன் ஒரு முனிவருடைய மனைவியைக் கண்டான். அவளோடு அவன் உரையாடிக் கொண்டிருக்கையில், கர்ப்பூர சம்பவம் என்றொரு நாடிருப்பதாகவும், அதனை கர்ப்பூரகன் எனப் பெயரிய அரசன் ஆளுவதாகவும், அவனுக்குக் கர்ப்பூரிகை என்றொரு பெண்ணிருப்பதாகவும், அவள் நரவாகனனைக் காணில் அவனை மணந்து கொள்வது உறுதியென்றும் அவள் கூறினள். அதனைக்கேட்ட நரவாகனன் அவளைப் பார்க்கவேண்டுமென்று கோமுகனோடு அங்கிருந்தபடியே அந்நாட்டுக்குச் செல்லலானான். காடு மலை வனாந்தரங்களைக் கடந்து இருவரும் கடற்கரையோரமாக வந்தனர். அந்த ஊரில் மனிதர்களை காணப்படவில்லை. மக்கள் விலங்குகளெல்லாம் மரத்தாலானவையாக இருந்தன. இவர்களுக்குத் தலைவனாக இருந்தவன் இராச்சியதரன் என்பவன். இவன் ஒரு தச்சன், காஞ்சிபுரத்தினன். இவனும் இவனது சகோதரனான பிராணதரனும் சேர்ந்து அன்னவூர்தி ஒன்று இயற்றி அதனைக்கொண்டு அரண்மனையிலுள்ள செல்வங்களையும் அணிகளையும் கொள்ளைகொண்டனர். இதனைக்கண்ட அரசன் சகோதரர்கள் இருவரையும் ஊரைவிட்டு விரட்டிவிட்டான். இராச்சியதரன் இந்த ஊருக்குவந்து மரத்தினால் மக்கள் விலங்கு முதலாயின செய்து காலந்தள்ளிவருவதாகக் கூறினன். நரவாகனனுக்கும் கர்ப்பூரசம்பவநாடு செல்லக்கூடியதாகப் பொறியொன்று செய்துதந்தான். அதனில் இருவரும் ஏறிக்கொண்டு கர்ப்பூர சம்பவநாடு சென்றனர். அந்த நாட்டிலே சென்றதும் கர்ப்பூரிகை ஆண்பிள்ளைகளைக் காண்பதில்லையென்று அறிந்தான். அவள் முற்பிறப்பை

யறிவாளென்றும், அதனால் தனதுகணவன் தன்னைப் பழம் பிறப்பில் துன்புறுத்தியதுகாரணமாகத் தான் இப்பொழுது அவனை வெறுக்கிறாளென்றும் கேட்டான். உடனே நரவாகனனும் தான் பழம்பிறப்பை உணர்ந்தவனென்றும் அதனாலே தனது மனைவிக்கு முற்பிறப்பிலிழைத்த தீங்கை நீக்க வந்திருப்பதாகவும் கூறினான். இதனை உண்மையென்று கர்ப்பூரிகை நம்பினாள். பின்னர் அவளை மணந்துகொண்டு அவளோடு புறப்பட்டுக் கௌசாம்பியை அடைந்தான்.

பின்னொருநாள் காட்டில் வேட்டையாடுகையில் அங்கு ஒரு கோயிலைக் கண்டான். அங்கே செல்லுகையில் இளமாதொருத்தி வாசிக்கும் வீணையினொலி கேட்டது. அந்தமாதை யாரென்று வினவியபோது அவள் வித்தியாதர அரசைத் துறந்து துறவியாக வாழும் அலங்காரசீலனது மகளென்றும் தன்னுடையபெயர் அலங்காரவதி என்றும் தான் நரவாகனனை மணந்துகொள்வதற்காகவே அங்கு வந்ததாகவும் கூறினாள். அவளுடைய தாயான காஞ்சானப்பிரபை அவனை அழைத்துக்கொண்டு தனது நகரான சுந்தரபுரஞ்சென்று அலங்காரவதியை மணந்துகொடுத்தாள். அங்கு சிலநாள் தங்கிய பின்னர் இருவரும் கௌசாம்பிநகரம் அடைந்தனர்.

மற்றொரு நாள் சில விஞ்சைமாதர் ஆகாயத்திலிருந்து இறங்கினர். அவர்களிலொருத்தி ஸ்படிகயசஸ் எனப் பெயரிய விஞ்சையர்க் கிறைவனது மகள். அவளது பெயர் சக்தியசஸ் அவள் நரவாகனனை மணந்துகொள்ள வந்திருப்பதாகக்கூறி அவனது அனுமதி பெற்று அவனை மணந்து கொண்டாள்.

பின்னர் ஒருநாள் வைசாகி யென்ற ஊரிலுள்ள ருசிர தேவன் என்பவன் தன்னிடமுள்ள ஒரு யானையினது கதி

யையும் இரு குதிரைகளினுடைய ஓட்டத்தையும் பார்த்து ஆராய்ந்து எதுவேகமாகச் செல்லக்கூடியதென்று சொல்லும் படி கேட்டுக்கொண்டான். அதற்கு இணங்கி நரவாகனன் வைசாகிநகரஞ் சென்றான். அங்கு சென்ற காரியம் முடிந்த வுடன் அவனது தங்கையான ஐயேந்திர சேனையை மணந்து கொண்டு கௌசாம்பி நகரடைந்தான்.

இவன் இவ்வாறாகக் காலங்கழிக்கையில் லலிதலோசனை என்ற விஞ்சைமாது இவனுடைய அழகையும் சாமர்த்தியத் தையும் கேட்டாள். ஒருநாளிரவில் வந்து இவனை மயக்கித் தூக்கிக்கொண்டு மலய மலை சென்று அவனோடு சுகித்திருந் தாள். சில நாள் சென்றதும் அவள் காணப்படவில்லை. அவ ளைத் தேடித்திரிந்து பின்பு கண்டான். அவன் கௌசாம் பிக்குத் திரும்ப விரும்பி அவளையும் அழைத்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தான். பின்னர் ஆத்மானிகை[1] என்ற விஞ்சை மாதை மணந்துகொண்டான்.

X. நரவாகனனது வரம்.

கௌசாம்பி நகரிலே நரவாகனன் சுகமாகக் காலங் கழித்துவருகையில் ஒரு நாள் அவைக்களத்தில் இருக்கும் போது மிக்க காந்தியையுடைய ஒருவன் நரவாகனனைக் காணவந்தான். அவனை யாரென்று உதயணன் வினவிய போது அவன் தான் வித்தியாதர அரசனான வைரப்பிரபன் என்று கூறினான். அவன் அங்கு வந்த காரணத்தை உதயணனும் நரவாகனனும் கேட்டனர். அவன் தான் இமய மலைச் சாரலிலுள்ள வச்சிரகூடம் என்ற பகுதியை அரசாளும் வித்தியாதா அரசனென்றும், இனி விஞ்சைய ருலகுக்கே சக்கிரவர்த்தியாக வரப்போகின்ற உதயணன் மக

1. ஆத்மானிகை கதை கிடைக்கவில்லை.

ஞன நரவாகனனைக் காணவந்ததாகவும் கூறினான். வைரப் பிரபனைப் பார்த்து மானிடர் விஞ்சையராவது இயலாத காரிய மல்லவோ என்று கூறினர். அவ்வாறு ஆதல் சிவபெருமா னது அருளால் இயல்பென்றும் அவ்வாறு மானிடஅரசனு யிருந்த சூரியப்பிரபன் ஒருகாலத்தில் வித்தியாதரச் சக்கர வர்த்தியானான் என்றும் கூறினான். அவ்வாறு ஆதற்குச் சிவ பெருமானைக் குறித்துத் தவமியற்றி வரம்பெறுதலே அதற் குரிய வழி என்றும் கூறினான். அதனைக் கேட்டபிறகு நரவாகனன் சிவபெருமானிடமிருந்து விஞ்சை மந்திரங்களைப் பெறுதற்குரிய வழியைத் தேடலாயினான்.

நரவாகனதத்தன் இவ்வாறு யோசித்துக்கொண்டிருக் கும்போது தனவதி தான் நரவாகனனிடம் ருசியமுக மலை யிலே சொல்லிவந்ததுபோல் தன்னுடைய மகனான சண்ட சிங்கனையும் அமிர்தகதி முதலாயினாரையும் அழைத்துக் கொண்டு கௌசாம்பி வந்து சேர்ந்தாள். அதே சமயத்தில் பிரபாவதியின் தகப்பனான பிங்கள காந்தாரன் என்னும் கந் தர்வ ராஜன் அவனது சேனைகளை அழைத்துக்கொண்டு கௌசாம்பியைச் சேர்ந்தான். இவர்கள் எல்லோரையும் நர வாகனனும் உதயணனும் வரவேற்று உபசரித்து அவரவர்க ளுக்குத் தகுதியான இருக்கையில் அமரச்செய்தனர்.

விஞ்சையர் அரசனான பிங்கள காந்தரன் நரவாகன னைப் பார்த்து 'அரசே! சிவபெருமான் தங்களை எங்கட்கெல் லாம் சக்கரவர்த்தியாக நியமித்திருப்பதாகத் தெரிவித்தார். அந்தக் கட்டளையைத் தலைமேற்கொண்டே நாங்க ளெல்லோ ரும் இங்கு கூடியிருக்கின்றோம். இதோ அக்கமாலையும் மான்றோலும் பூண்டு துர்க்கா பரமேசுரியைப்போல் உட் கார்ந்திருக்கின்ற உமது மாமியாராகிய தனவதி இராணி

உம்மைக் காப்பாற்ற முன்வந்திருக்கின்றாள். அவளோ விஞ்சைமந்திரங்களை நன்கு கற்றவள், வித்தியதரராலே பூஜிக்கப்படுபவள். அவளுடைய அருள் இருப்பதாலே நீர் வெற்றி பெறுவது திண்ணம். ஆயினும் மற்றொரு செய்தியையும் கேட்பீராக ; விஞ்சையருலகு இரண்டு பிரிவினையுடையது' ஒன்று கைலேயங்கிரிக்கு வடபாலிலும் மற்றொன்று தென்பாலினு முள்ளது இதோ உட்கார்ந்திருக்கும் அமிர்தகதி கைலையங்கிரியிலே சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவ மியற்றி வடபாலிலுள்ள நாட்டுக்கு அரசனாக வரம் பெற்றான். ஆனால் எங் கருணையங்கடலாகிய எம்பெருமான் அமிகதியை நோக்கி அவனது விருப்பம் வரப்போகும் வித்தியாதரச் சக்கரவர்த்தியான நரவாகனனால் ஈடேறுமெனவ வரமளித்துள்ளார். அந்த வடபாலிலுள்ள விஞ்சையருலகுக்கு மந்தர தேவன் என்பவன் அரசனாக இருக்கின்றான். அவனை வெல்வது பிறருக்கு அரிதாயினும் நீர் விஞ்சை மந்திரங்களைக் கைவரப் பெற்றபின் உமக்கு அது எளிதாகும். ஆனால் தென்றிசை யுலகை ஆள்பவன் கௌரிமுண்டன் என்னும் வித்தியாதரன். இவன் மிகக் கொடியவன். இவனை வெல்வதோ எளிதன்று. மேலும் இவனோடு உமது பகைவனான மானதவேகனும் சேர்ந்திருக்கின்றான். இவர்கள் இருவரையும் வெல்லக் கூடியதான மந்திரங்களையும் வல்லமையையும் பெற்ற பின்னரே அவர்களை வெல்லுதல் எளிதாகும்' என்றான்.

'அப்பா ! இவ்வரசன் சொல்லுவது எல்லாம் உண்மை. சித்தர் வாழுமிடம் சென்று எல்லாப் பெருமைகளையும் அளிக்கவல்ல சிவபெருமானை வழிபட்டு நன்மைகளைப் பெறுவாயாக. இவ்விடம் வந்திருக்கின்ற வித்தியாதாரும் கந்தரு

வரும் உன்னைக் காப்பாற்றுவார்' என்று தனவதி கூறினாள். அங்கே வந்திருந்த சித்திராங்கதன் என்ற கந்தருவன் 'நாங்கள் அவ்வாறே காப்பாற்றுவோம்' என்று சொல்லி, 'நான் அதற்கறிகுறியாக முன்செல்வேன்' என்று புறப்பட்டுச் சென்றான்.

நரவாகனனும் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும் தனது பெற்றோரை வழிபட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு நல்ல வேளையிலே சித்தர்மலைக்குப் புறப்பட்டான். தனது நண்பனை அமிதகதி கொடுத்த விமானத்திலிலேறி கந்தர்வ அரசர்களும் வித்தியாதரத் தலைவர்களும் புடைசூழ, தனவதி தொடர்ந்துவர அவன் சித்தர் வாழும் மலைக்குச் சென்றான். அவ்விடத்தில் சித்தர்கள் நரவாகனனைத் தரையிற் கிடக்கச் செய்தும், கனியுணவு கொடுத்தும், காலையிலெழுந்து நாட்கடன்களைச் செய்யச்செய்தும் சிவபெருமானைக் குறித்து வரங்கிடக்கப் பழக்கினர். இதற்குள் கந்தர்வ அரசர்களும் வித்தியாதரத்தலைவர்களும் நான்கு பக்கங்களிலும் நரவாகனனைச் சூழ்ந்து அவனுக்கு யாதொரு விதமான தீங்கும் வாராதபடி காவல்புரிந்துவந்தனர். சிலநாள் செல்லவே ஆகாயத்தில் பேரரவமொன்று கேட்டது. அதனையும் பொருட்படுத்தாது நரவாகனன் சிவபெருமானிடத்திலே சிந்தையைச் செலுத்தியவண்ணமாக இருந்தனன். கந்தர்வர் வித்தியாதரர் எல்லோரும் நரவாகனனுக்கு என்ன கேடு உண்டாகுமோ என்று கவலைப்பட்டுக்கிடந்தனர். மறுநாட்காலையில் ஆகாயத்திலே பெரியதொரு ஆரவாரமும் பெரிய ஒளிப்படலமும் தோன்றின. தனவதி தனது சக்தியால் வித்தியதர அரசனை கௌரிமுண்டன் தனது படையோடும் மனதவேகனோடும் நரவாகனனுக்கு இடையூறு இழைக்கத்தோன்றி

யிருக்கின்றனனென்று அறிந்தாள். உடனே கௌரிமுண்டனும் அவனது படையும் ஆகாயத்திலே தோன்றின. கௌரிமுண்டன் விஞ்சையரைப் பார்த்து, 'நீங்கள் ஒரு நரனுக்கு உதவிபுரிதல் அடாது, உதவிபுரியும் உங்களையும் ஆகாயத்திற் செல்லாதபடி செய்கிறேன்' என்று கர்ச்சித்து ஆரவாரித்தான். நரவாகனனைக் காத்துநின்ற சித்திராங்கதன் முதலாயினார் கௌரிமுண்டனோடு போரிடலாயினர். கௌரிமுண்டனும் எதிர்த்துப் போரிட்டான். ஆனால் சித்திராங்கதன் முதலாயினாருடைய படைகள் கௌரிமுண்டனது படையைச் சின்னபின்னமாக்கின. இதனைக் கண்ட கௌரிமுண்டன் தேவியைத் தியானித்து அவளுடைய திருவருளால் பகைவரை மயங்கச்செய்தான். அவர்கள் மயங்கிக் கிடக்கும்பொழுது நரவாகனன்மேற் பாய்ந்து மற்போரிட்டான். நரவாகனனே மற்போரில் மிக்க வல்லவனானதால் கௌரிமுண்டனைப் புரட்டிப் புரட்டி யடித்தான். அதனைப் பொறாத கௌரிமுண்டன் மறுபடியும் அம்பிகையை வேண்டி நின்று அவளது அருளாலே நரவாகனனைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்திற் பாய்ந்தான். அதனைக் கண்ட தனவதி தனது வன்மையாலே நரவாகனனைக் கொல்லவிடாது கீழே விட்டுவிடும்படி கௌரிமுண்டனைச் செய்தாள். அவன் அக்கினி மலையில் நரவாகனனை எறிந்தான்.

மானதவேகனே கோமுகன் முதலிய நரவாகனனுடைய அமைச்சர்களைப் பிடித்துச்சென்று கண்டவாறு ஆகாயத்திலெறிந்தான். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த தனவதி தனது விச்சை வலியால் அவர்களைப் பலவிடங்களிலும் இருக்கச் செய்து அவர்களிடம் நரவாகனன் பின்னொருகால்

அவர்களை அழைத்துக்கொள்வானென்று தெரிவிக்கச் செய்தாள். கட்டுண்டு கிடந்த சித்திராங்கதன் முதலிய விஞ்சையரும் தந்தம் ஊர்களுக்குச் சென்றனர். தனவதியோ அஜிஞவதியையும் நரவாகனனது மற்றைய மனைவியரையும் அழைத்துக்கொண்டு தனது இருப்பிடம் சென்று காப்பாற்றி வந்தாள். கௌரிமுண்டனும் மானதவேகனும் தமது பகைவரை வென்றுவிட்டதாக எண்ணி இறுமாந்திருந்தனர்.

அக்கினி மலையில் விழுந்த நரவாகனனை அமிர்தப்பிரபன் என்ற வித்தியாதரன் தாங்கிச் சென்று மந்தாகினிக் கரையில் விட்டு, தான் சிவபெருமானால் அவனைக் காப்பாற்றும்படி அனுப்பப்பட்டதாகக் கூறினான். அவன் பின்னும் எதிரிலிருப்பது கைலையங்கிரி என்றும், சிவபெருமானை வழிபடும்படியாகவும் கூறிச் சென்றான். நரவாகனன் கைலாய மலையை அடைந்து வழியிலிருந்த விநாயகக் கடவுளை வணங்கி அவரால் இடையூறுகள் நீங்கப்பெற்று உள்ளே சென்றான். காவற்கடவுளான நந்தியெம்பெருமானைக் கண்டு வணங்கி நின்றான். வேத்திரப்படையோன் நரவாகனனைப் பார்த்து, 'உனக்கு உண்டாகிய துன்பங்களெல்லாம் நீங்கின நீ வேண்டுவனவெல்லாம் பெறுவாய். நீ இங்கிருந்து மிகுந்துள்ள வினைத்துன்பங்களைக் களைந்து தூயவனாகுக, அப்பொழுதுதான் சிவபெருமானது அருள் உண்டாகும்' என்று கூறினார். அவ்வாறே அவன் உடலையொடுக்கிக் காற்றையுண்டு எம்பெருமானையும் பெருமாட்டியையும் ஒன்றுபட்ட நிலையில் நினைந்து வழிபட்டு வந்தான்.

சிவபெருமானும் இவனது தவத்துக்குத் திருவுளமிரங்கி ரிஷபாரூடராய் உமாதேவியாரோடு தோன்றி நரவாகனனைப் பார்த்து, 'உனது தவத்துக்கு மகிழ்ந்தோம்

இனி நீ வித்தியாதரச் சக்கரவர்த்தியாவதிற் றடையில்லை. விஞ்சைகளெல்லாம் உன் ஏவல்வழி நிற்கும். உனது பகை வர் உன்முன் நின்று எதிர்த்து வெற்றி பெறமாட்டார்கள். அவர்களது வித்தைகளும் உன்முன் பயன்படா. உனக் கும் பிரமனால் கட்டப்பட்ட தாமரைவட்டத் தேரொன்று அளிக்கின்றோம்' என்று கூறி விமானத்தையும் அளித்தார். நரவாகனன் சிவபெருமானது அருளைப் பெற்று அவரை வலம்வந்து தாமரைவட்டத் தேரிலேறி தனது நண்பனான அமிதகதி[1] இருக்கும் வக்கிரபுரம் சென்றான். வித்தியா மாதர் பணிந்து வழிகாட்டிக்கொண்டு இவனுக்குமுன் சென் றனர். சித்தர்கள் இவனைக்கண்டு வாழ்த்தொலி எடுத்தனர்.

XI. மஹாபிஷேகம்

இவன் வரவைக்கண்ட அமிதகதி விமானமேறி எதிர் கொண்டழைத்து நல்வரவேற்று உபசரித்தான். பின்னர் தனது மகளான சுலோசனையையும் அமிதகதி நரவாகன னுக்கு மணந்து கொடுத்தான்.

மறுநாட் காலையில் நரவாகனன் வக்கிரபுரத்திலேயுள்ள நாளோலக்க மண்டபத்திலே கொலு வீற்றிருக்கும்போது ஆகாயத்திலிருந்து ஒரு சோதிபுருஷன் இறங்கிவந்தான். அவன் நரவாகனனிடம் வந்து தன்னுடைய பெயர் பௌர ருசி தேவனென்றும் தான் வித்தியாதரச் சக்கரவர்த்தியி னுடைய அரண்மனைக்காரன் என்றும் கூறி வணங்கி நின் றான். நரவாகனன் அமிதகதியை நோக்க, அமிர்தகதி அஃ துண்மையே யென்று கூறியவளவில் நரவாகனன் பௌரருசி தேவனை அந்த வேலையிலே அமர்த்திக்கொண்டான்.

---

1. இவனை சுலோக சங்கிரகம் அமிதகதி என்று கூற கதாசரித் சாகரம் அமிர்தகதி என்று கூறும்.

தனவதி தனது ஞானதிருட்டியினாலே நரவாகனனது வெற்றியை அறிந்துகொண்டு நரவாகனனது மனைவியரான வேகவதி முதலாயினாரோடும் தன்னுடைய மகன் சண்டசிங்கன், பிங்கல காந்தார அரசன், வாயுபதன், சித்திராங்கதன் முதலாயினாரோடும் வக்கிரபுரத்துக்கு வந்தாள். சக்கரவர்த்தியை வித்தியாதர அரசர் பலரும் வணங்கி நின்றனர். நரவாகனன் அவர்களை வரவேற்று அவரவர்களுக்குத் தகுதியான இருக்கையளித்து உபசரித்தான். ஆனால் தனவதி வணங்குமுன் அவளை நரவாகனன் தண்டனிட்டு நின்றனன். அதனால் மிக்க மகிழ்ச்சியடைந்த தனவதி தனது மருமகனை பலபட வாழ்த்தினாள்.

தனவதியை நோக்கி நரவாகனன் தனது மனைவிமார் வந்தபோது தன்னுடைய அமைச்சர்களையுங் காண விரும்புவதாகக் கூறவே, கோமுகன் முதலாய அமைச்சர் பலரும் தமது உடலோடு நரவாகனன்முன் கொண்டுவரப்பட்டனர். அவர்களைக்கண்ட சக்கரவர்த்தி மகிழ்ச்சி கொண்டு அவர்களோடு அளவளாவினான். பின்னர் அவரவர்கள் திரும்ப இவ்விடம் வந்தவரையில் நடந்த செய்திகளைச் சொல்லும்படி கேட்டான். கோமுகன் தான் ஆகாயத்திலிருந்து எறியப்பட்டபோது அவனை ஒரு தேவமாது தாங்கிச்சென்று ஒரு மலையில் விட்டதாகவும், அங்கு தான் தனது அரசனையிழந்த பின் உயிர்வாழ மனமில்லாமல் ஒரு பாறையிலிருந்து கீழே விழ முயன்றபோது ஒருமுனிவர் வந்து தன்னைப் பிடித்துக் கொண்டு உயிரை விடவேண்டாமென்றும், பின்னர்த் தன் அரசனைக் காணும் பாக்கியம் கிடைக்குமென்றும் சொன்னதாகவும், அதன்மேல் அவருடைய ஆச்ரமத்தில் தவஞ் செய்துகொண்டிருக்க ஒரு அரமகளால் இப்பொழுது நர

வாகனன்முன் கொண்டுவரப்பட்டதாகவும் கூறினன். மாரு பூதி தான் மானதவேகனுல் எறியப்பட்டுக் கீழேவிழுகையில் ஒரு தேவமாது தாங்கிச்சென்று ஒருகாட்டில் விட அங்கே உயிர்விட எத்தனிக்கையில் ஒருமுனிவர் தோன்றி தன்னை அழைத்துச்சென்று காப்பாற்றியதாகக் கூறினன். அவர் தன்னுடைய கதையைக்கேட்டு நரவாகனனுடைய செய்தியைத் தெரிந்துசொல்வதாகச் சொல்லி பக்கத்திலிருந்த ஆற்றில் நீராடவந்த அரமகளிரில் ஒருத்தியின் துகில்களைக் கவர்ந்துவரச் செய்தார். ஆடையையிழந்த அரமங்கை தனது உடையை முனிவரிடம் வந்து வேண்டியபோது அவளால் நரவாகனன் விரைவில் வித்தியாதரச் சக்கரவர்த்தியாகவரப் போகும் செய்தி தெரிந்துகொண்டதாகக் கூறினன். அம்மாது ஒரு நரனைக்கண்டு உரையாடிய குற்றத்தால் அந்த முனிவரது மனைவியாகி ஒருபிள்ளையைப் பெற்ருள். அந்தப் பிள்ளையை விட்டுவிட்டு அவள் ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது மறுபடி தன்னைக் காணவிரும்பினுல் அந்தப் பிள்ளையை அறுத்து அரிசியோடு சேர்த்துச் சமைத்து உண்ணும்படி கூறிச்சென்ருள். அந்த முனிவர் அவ்வாறே அந்தப் பச்சிளங் குழவியைச் சமைத்து உண்ணும்போது அவர் தன்னையும் உண்ணச்சொன்னதாகவும், தான் அருவெறுப்புக்கொண்டு சும்மா இருக்கையில் அவர் அதனை உண்டவுடன் ஆகாயத்திற் பறந்து செல்லக்கண்டதாகவும், அதன்மேல் தான் இரண்டு பருக்கைகளை யெடுத்து உண்டு உமிழ்ந்த இடமெலாம் பொன்னுக இருக்கக்கண்டதாகவுங் கூறினன். பின்னர் அது கொண்டு ஏராளமாகச் செலவு செய்துகொண்டு ஒரு வேசிவீட்டிலிருக்கும்போது அவள் தந்திரமாகத் தனக்கு வயிற்றுப்போக்குக்கு மருந்து கொடுக்க, தான்

வாயிலெடுத்தபோது அந்த இரண்டு பருக்கைகளும் விழுந்து விட்டன. அது முதல் அவன் தங்கமாகத் துப்பும் பெருமையை யிழந்துநிற்கையில் அருகிலிருந்த காளிகோயிலிற் சென்று மூன்று நாள் பட்டினிகிடந்தபோது இங்கு வந்ததாகவும் கூறினன்.

அரிசிகன் தான் விழும்போது உஞ்சையில் விடப்பட்டதாகவும் அங்கு சுடுகாட்டிற்சென்று தீ மூட்டி எரியில் விழுந்து உயிர்விட எத்தனிக்கையில் ஈமத்தெய்வம் தோன்றி நரவாகனனை விரைவில் அடையக்கூடுமாகையால் உயிர் வாழுமாறு கூற, அவ்வாறே அன்று முதல் தவமியற்ற, இன்று அங்கு இருப்பதாகவும் கூறினன். மற்றையோரும் தந்தங் கதைகளைக் கூறிமுடிந்தவுடன் அமிதகதி இவர்களுக்கெல்லாம் தனவதியைக்கொண்டு வித்தியாதரப்பதவி கிடைக்கச் செய்யும்படி நரவாகனனுக்கு யுக்தி சொன்னன். அவ்வாறே நரவாகனன் தனவதியைக் கேட்டுக்கொள்ள அவள் அமைச்சரெல்லோரையும் வித்தியாதரப்பதவியை அடையும்படி செய்தாள்.

பின்னர் தனவதி நரவாகனனை அவனுடைய பகைவர்களை வெல்லும்படி யோசனை சொன்னள். அதன்படியே நரவாகனன் விஞ்சையர் சேனையோடு நல்லநாளிலே புறப்பட்டுக் கௌரிமுண்டனது நகரான கோவிந்தகூடத்தை நோக்கிச் சென்றான். போகும்போது வழியிலுள்ள மாதங்கபுரத்தில் தனது மனைவியரை விட்டுவிட்டுக் கோவிந்தகூடம் அடைந்தான். அவ்விடத்தில் கௌரிமுண்டனும் மானதவேகனும் நரவாகனனை எதிர்த்தனர். நரவாகனன் இருவரையும் கொன்று வெற்றிபெற்றான்.. அதனைக்கண்டு மகிழ்ச்சி யடைந்த தனவதி கௌரிமுண்டனது தங்கையான இஹாத்மிகையை

மணந்துகொள்ளும்படி வேண்டினாள். அவ்வாறே அவன் மணந்து அற்றை நாளை மகிழ்ச்சியாகத் தள்ளினான்.

மறுநாள் வேகவதியையும் பிரபாவதியையும் கூப்பிட்டு மதனமஞ்சுகையை வரவழைக்கும்படி செய்து அவளைத் தேற்றி மகிழும்படி செய்தான். பின்னர் பிரபாவதியை யனுப்பி பாகீரதியசஸை அழைத்து வரச்செய்து அவளை யும் விஞ்சைமாதாகச் செய்தான்.

ஒருநாள் நரவாகனன் அத்தாணி மண்டபத்திலிருக்கும்போது ஒற்றர் இருவர் வந்து வடபாரிச வேந்தனான மந்தரதேவன் கௌரிமுண்டன் இறந்துபட்டமையையும் நரவாகனன் வித்தியாதரச் சக்கரவர்த்தியாயினமையும் கேட்டு நரவாகனனைக் கொல்லக் கருதியிருப்பதாகக் கூறினர். அவையிலுள்ளோர் உடனே போரிடத் தீர்மானித்தனர்.

மற்றைநாள் நரவாகனன் வடதிசை நோக்கிப் புறப்பட்டான். அவனோடு மற்றைய கந்தர்வ அரசர்களும் வித்தியாதரத் தலைவர்களும் புறப்பட்டு இமயமலை நோக்கிச்சென்று ஒரு பெரிய தடாகத்தை அடைந்தனர். தனவதி நரவாகனனை நோக்கி அவன் வித்தியாதரச் சக்கரவர்த்தி யாவதற்கு முன் ஏழு அணிகளைப் பெறவேண்டுமென்றும் அவற்றுள் இந்த ஏரியில் மூழ்குவது ஒன்றென்றும் கூறினாள். அதன்படியே நரவாகனன் தன்னுடைய மனைவியரோடு அந்த ஏரி நீரில் மூழ்கி எழுந்தான். மறுநாள் புறப்பட்டுத் தன் நண்பனான வாயுபதனுடைய பட்டணம் சேர்ந்தான். அவனுடைய வேண்டுகோளின்படியே அந்த ஊரில் ஒருநாள் தங்கினான். வாயுபதனுடைய தங்கையான வாயுவேக யசஸைக் கண்ட நரவாகனன் அவள்மேல் காதல் கொண்டான். ஆனால் அவள் மறைந்துவிட்டாள். மறு நாள் அந்த

ஊரைவிட்டுப் புறப்பட்டு முன்னேறிச் சென்றாலும் நரவாகனன் வாயுவேகயசஸின் நினைவாகவே இருந்தான். இதனை யறிந்த கோமுகன் வாயுபதனைக்காண, அவன் தனது தங்கையை மணந்துகொள்ளும்படி நரவாகனனுக்குச் சொல்லும்படி கேட்டுக்கொண்டான். மணவினையும் நடந்தது. வாயுவேகயசஸ் தானாக விருப்பத்துடன் அவனை மணந்துகொள்ளவில்லை. அவளும் அவளது தோழிகளான காளகூட அரசன் மகள் காளிகையும், வித்தியுத் புஞ்சாவின் மகள் வித்தியுத் புஞ்சையும் மந்தர வரசனுடைய மகள் மதங்கினியும் மகாதமிஷ்டிரனது மகளான பதுமப் பிரபையும் முன்னொருகால் நரவாகனனைக் கண்டபோது இந்த ஐவருமேசேர்ந்து அவனை மணப்பதாகத் தீர்மானித்திருந்தனர். அதற்கு மாறாகத் தான்மாத்திரம் மணந்துகொண்டு வாழ அவள் சம்மதப்படவில்லை. இந்தச் செய்தியை அறிந்த அந்த நால்வரும் எரிபுக ஆயத்தஞ்செய்தனர். நரவாகனன் அவர்களை அவ்வாறு செய்யாமற்றடுத்து அவர்களையும் மணந்துகொண்டான். அந்த நான்கு பெண்களின் பெற்றோரும் மகிழ்ச்சியடைந்து நரவாகனனைச் சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்டனர். அவர்களுள் ஒருவனான மந்தரன் தனது மருமகனைப் பார்த்து மந்தரதேவனை வெல்வதற்கு முன்னர் மிகுதியுள்ள ஆறுமணிகளையும்பெறல்வேண்டுமென்றும் அவற்றுள் ஒன்றான சந்தனமரம் அந்த நாட்டிலிருக்கின்றதென்றும் அதற்குச் செல்லும் வழியையும் கூறினான். நரவாகனன் அதனைக் கைக்கொள்ள நினைந்து அன்று விரதமிருந்து இரவிற் சென்று சந்தனவிருட்சத்தை யடைந்து வழிபட்டான். அது மகிழ்வுற்று 'அரசே! நீ என்னைக் கவர்ந்துவிட்டாய்; மற்றவைகளையும் பெறும்பொருட்டு

கோவிந்தகூட மலைக்குச் செல்வாயாக. அங்கிருந்து பிறவற்றையும் அடைவாய். என்னை நினைக்கும்போது நான் வந்து உனக்கு வேண்டியதைச் செய்வேன்' என்றது. நரவாகனன் அதனுடைய அருளைப் பெற்று ஆகாயமார்க்கமாகப் பறந்து வந்து தனது பாசறையை அடைந்தான்.

மறுநாள் கோவிந்தகூட மலைக்குச் சென்றான். அங்கு அமிர்தப்பிரபன் தோன்றி தெற்கேயுள்ள மலயமலையில் வாழும் வாமதேவ முனிவர் ஏதோ சொல்லவேண்டி விரைவில் நரவாகனனை வரும்படி அழைப்பதாகக் கூறினான். உடனே இருவரும் மலயமலை நோக்கிப் பறந்துசென்று வாமதேவ முனிவரைக் கண்டு வணங்கி நின்றனர். வயது முதிர்ந்து தொண்டுகிழமாயிருந்த அந்த வாமதேவ முனிவர் நரவாகனனைப் பார்த்து, 'அப்பா, மந்தர தேவனை வெல்ல வேண்டியதற்காகச் சில மணிகள் இங்கே காணப்படும் முழையுள் இருக்கின்றன. அவற்றை உனக்குக் காட்டும்படி சிவ பெருமானுடைய கட்டளை' என்று கூறிக் குகையைக் காட்டினார். நரவாகனன் மனத்திடத்தோடு உள் நுழைந்து பல துன்பங்களைக் கடந்து செல்லும்போது ஒரு பெரிய யானையைக் கண்டான். அதன் மத்தகத்தில் பாய்ந்தேறி தனது கையால் ஒரு குத்துக் குத்தி அதனைக்கொன்றான். உடனே 'நன்று செய்தாய். முன் செல்வாயாக' என்று ஆகாயவாணி எழுந்தது. பின்னும் உள்ளே செல்லும்போது வாளொன்று பெரும்பாம்புபோலத் தென்பட்டது. அதனைத் தந்திரமாகக் கைக்கொள்ளவே, மறுபடியும் ஆகாயவாணி 'வாண்மணியைப் பெற்றாய்; மற்றவைகளையும் பெறுவாயாக' என்று கூறிற்று. பின்னுஞ் சென்று மதிமணி மனைமணி மந்திரமணிகளைப் பெற்றுத் திரும்பிவந்து முனிவரை வணங்கிநின்றான். வாமதேவ முனிவர் நரவாகனனை அழைத்து இனி மந்தரதேவனை வெல்வது எளிது என்று

கூறி ஆசீர்வதித்து அனுப்பினர். நரவாகனனும் அமிர்தப் பிரபனும் ஆகாயமார்க்கமாகப் பறந்து கோவிந்தகூடமலையை அடைந்தனர். இவர்களைக் கண்ட தனவ்தி முதலாயினர் மிக்க மகிழ்ச்சி கொண்டாடினர். மறுநாள் நரவாகனன் தனது சேனையோடு புறப்பட்டுச்சென்று மானதவாவியைக் கடந்தபின் கண்டசைலம் என்ற அரமகளிர்காவைத் தாண்டி கைலைமலையி னடிவாரத்தில் மந்தாகினிக் கரையில் தங்கினான். அப்பொழுது புத்திவன்மையுடைய மந்தர அரசன் முன்வந்து 'அரசே! கைலைமலையை ஒருவன் கடந்தால் அவன் துன்புறுவான். அதற்கு வடபாற் செல்ல திரிசீர்ஷம் என்ற முழைவழியாகச் செல்லவேண்டும். அந்தப் புழைவழியைத் தேவமாயன் என்ற தானவன் காத்து நிற்கின்றான். அவனை வெல்லவேண்டியது அவசியம் என்று கூறினான். அதனைக் கேட்டவுடன் தேவமாயனிடம் ஒரு ஒற்றனை அனுப்பி அவனைப் பணியும்படி சக்கரவர்த்தி கேட்டான். அவன் மறுத்துவிடவே நரவாகனன் மறுநாள் அவனிடம் போருக்குச் சென்றான். தேவமாயனும் தன்னுடைய தோழர்களான வஜ்ஜிரமுஷ்டி, மகாபாஹு, தீக்ஷண தம்ஷ்டிரன் முதலானவர்களைச் சேர்த்துக்கொண்டு நரவாகனனோடு போர்புரியத் தொடங்கினான். இருசேனையும் கைகலக்கவே நரவாகனன் தன்னுடைய விச்சை வலியால் தேவமாயனைக் கட்டிவரச் செய்தான். தேவமாயன் கூனுமற்போகவே அவனுடைய சேனை நானுபக்கங்களிலும் சிதறிச் சென்றன. தேவமாயன் நரவாகனன்முன்னர் கட்டுண்டு வந்தபோது அவனைக் கட்டவிழ்த்துவிடச் சொல்லி அவனுக்கு உபசார வார்த்தைகள் சொன்னான். ஆயினும் தேவமாயன் தான் தோற்றுவிட்டதாக ஒப்புக்கொண்டான்.

மறுநாட் காலையில் கொலுவுக்கு தேவமாயன் வந்த போது, அவனிடம் நரவாகனன் தான் திரிசீரிஷ பிலத்தி

லிறங்கி அப்புறம் செல்லவேண்டு மென்று கூறியபோது தேவமாயன் அந்தக் குகையின் வரலாற்றைக் கூறினான். 'முன்னொருக்கால் ரிஷபகன் என்பவன் மிக்க தவமியற்றி வித்தியாதரச் சக்கரவர்த்தி பதவியைப் பெற்றான். அப்பொழுது அவன் கயிலைமலையி லேறி அப்புறம் செல்ல நினைந்து மலையின் மேல் ஏறுகையில் சிவபெருமானது கோபத்தினால் தனது விச்சைவலியை யிழந்தான். பின்னும் தவஞ் செய்து அவரது அருளைப்பெற்று கைலைமலையைக் கடந்து செல்லும் விதத்தைக் கேட்டபோது, அவர் இந்தச் சுருங்கையை உண்டாக்கி அதற்குரிய காவலாக இந்தப் புறத்தில் அஷ்டதிக் கஜங்களையும் திட்டி விடங்களையும் குய்யர்களையும் நிறுத்தி அந்தப் புறத்தில் காளராத்திரி என்ற சண்டிகையை நியமித்து வித்தியாதரச் சக்கரவர்த்தியும் அவரது பரிவாரங்கள் மட்டுமே செல்லலா மென்று கட்டளையிட்டிருக்கின்றார். அந்த மகாமாயனுடைய வழித்தோன்றல் நான். பிறந்த போது ஆகாயவாணி என்னை ஒருவன் வெல்லுவான் என்றும் அவனே எனக்குத் தலைவனும் வித்தியாதரச் சக்கரவர்த்தியுமாவான் என்றும் சொல்லிற்றும். அவ்வாறே நீர் என்னை வென்றதால் எனக்கு அரசனானீர். நீர் இந்தத் திரிசீரிஷ பிலத்தின் வழியே உமது பரிவாரத்தோடு செல்லலாம்' என்றான். நரவாகனன் மறுநாள் அந்தச் சுருங்கையைக் கடப்பதாகத் தீர்மானித்துப் பிலத்துவாரத்தின் வாயிலை யடைந்து தங்கினான்.

மறுநாள் எழுந்திருந்து அங்கு உறையும் தெய்வங்களை வழிபட்டுப் பிலத்தினுள்ளே நுழைந்தான். மதிமணியால் இருளை யோட்டியும், திட்டிவிடத்தைச் சந்தன விருட்சத்தால் நீக்கியும், அஷ்டதிக் கஜங்களை கஜமணியால் விரட்டியும், குய்யர்களை வாளா லோட்டியும் மற்றை மணிகளால் பிறவற்றை விரட்டியும் சுருங்கையைத் தன்னுடைய பரிவாரங்

களோடு கடந்து வடப்புரத்தை யடைந்தான். அந்திக்காலமும் வந்தது. உடன்வந்த தேவமாயனும் தனவதியும் சண்டிகை யான காளராத்திரியை வணங்கவேண்டு மென்றும் வணங் காமற் போனால் அவள் சினந்து தீங்கிழைப்பாளென்றும் கூறினர்.

இருளும் ஏறவே காளராத்திரியின் கோபத்தால் பரி வாரங்கள் மயங்கி விழுந்தன. நரவாகனன் மாத்திரம் தனி மையாக நின்றான். அவன் சண்டிகையைத் துதித்தான். அவள் அருளாமையைக் கண்டு உடைவாளை யுருவித் தன் னுடைய தலையையே வெட்டிப் பலியிடக் கையில் வாளை யெடுத்தான். அதற்கு இரங்கிச் சண்டிகையும் அருள் பாலித் தாள்.

மறுநாள் காலையில் அவன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சண்டிகையை வழிபட்டவுடன் தன் சேனையோடு புறப்பட்டான். வழியில் தூமசிகையைச் சந்தித்து அவனைத் தோற்கடித்தான். அவன் பணிந்துவரவே சக்கரவர்த்தி அவனுக்கு அவனுடையநாட்டையும் பதவியையும் கொடுத்து அன்று அங்கு தங்கினான். மறுநாள் மந்தரதேவனே போருக் குப் புறப்பட்டு வருவதை யறிந்து இவனும் ஆயத்தமானான். இருசேனைகளும் கைகலந்து பெரும்போர் விளைத்தன. காஞ் சன தமிஷ்டிரன் என்பவன் சண்டசிங்கனைத் தனது கதை யால் அடிக்கவே, சண்டசிங்கன் கீழே விழுவதைக் கண்ட அவ்னுடைய தாயான தனவதி தன்னுடைய விச்சைவலி யால் சேனைகளைக் கட்டிப்போட்டுவிட்டாள். தனியாக நின்ற மந்தரதேவனும் நரவாகனனும் ஒருவருக் கொருவர் கை கலக்க நேரிட்டபோது சக்கரவர்த்தி வாண்மணியைக் கையிற் பிடிப்பதை மந்தரதேவன் கண்டான். அவன் உடனே உன் மத்தயானையுரு வெடுத்தான். அதனைக் கண்ட நரவாகனன் சிங்கவுருவெடுத்துப் பொருதான். இதுவும் பயன்படாதது

கண்ட மந்தரதேவன் தன்னுருவிற் றோன்றி வாளேந்தி வந்தான். நரவாகனனும வாளைக் கையேந்தி அவனோடு பொருது வாளைத் தட்டிவிட்டு அவனைக் கையிற் பிடித்துக் குப்புறத்தள்ளி முதுகிலேறினான். அவனைக் கொல்ல நரவாகனன் கையில் வாளை யெடுத்தபோது மந்தரதேவனுடைய தங்கையான மந்தராதேவி அங்கு வந்து 'அரசே! உம்மை நான் கண்டபோதே மணந்துகொள்ள எண்ணினேன். ஆகவே என்னுடன் பிறந்தானும் உமது மைத்துனனுமாகிய மந்தரதேவனைக்கொல்லுதல் அடாது என்றுகூறினாள். அதனைக் கேட்டவுடன் நரவாகனன் மந்தரதேவனை விடுவித்ததாகக் கூறினான். மந்தரதேவன் சக்கரவர்த்தியை நோக்கி 'நான் நேரில் வெல்ல இயலாமற்போய் ஒரு பெண் பிள்ளையால் உயிர்தப்புவது பிழையாகும். நீர் சக்கரவர்த்தியாகப் போவது நான் அறிந்த விஷயம். ஆதலால் இனி இங்கிருப்பதில் பயனில்லை. நான் என் பிதா இருக்கும் வனஞ் சென்று துறவு பூண்பேன்' என்று சொல்லித் தவ வனஞ் சார்ந்தான். அவனுடைய சகாக்கள் எல்லோரும் நரவாகனனுக்குக் கீழ்ப்படிந்தனர். அவன் மந்தரதேவனுடைய பட்டணஞ் சேர்ந்து அரசாட்சியைக் கைக்கொண்டு அதனை அமிதகதிக்கு ஈந்து தான் வித்தியாதரச் சக்கரவர்த்தியானான்.

அங்கு சில நாள் தங்கி எல்லா விதமான போக போக்கியங்களையும் அனுபவித்து விட்டுப் பின்னும் வடக்கே செல்ல நினைந்தான். நாரதர் அவ்விடம் வந்து அது இயலாத காரியமென்றும், விருப்பத்தை அடக்கவேண்டுமென்றும் கூறினார். அதன்படியே நடக்க நினைந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டான். வரும் வழியில் தவவனம் சார்ந்து அங்கு தலைமை வகிக்கும் அகம்பண மகரிஷியைக் கண்டு வணங்கினான். அவர் அவனை வரவேற்று ஆசிகூறி விருந்தளித்தார். அப்பொழுது மந்தரதேவனும் மந்தராதேவியோடு அங்கு வந்

தான். அவனைக் கண்டதும் நரவாகனன் அவனைத் தழுவிக் கொண்டான். அகம்பண மகரிஷி மந்தராதேவியைச் சுட்டி, 'இவள் என்னுடைய மகள். இவளை மனைவியாக ஏற்றுக் கொள்வாயாக' என்று கூறினர். மந்தராதேவி தனது தோழிமார் கனகாவதி, காலவதி, சுருதை, ஆமிரப்பிரபை என நால்வர் உளரென்றும் அவர்களையும் மணந்து கொள்ளவேண்டுமென்றும், கேட்டுக்கொண்டாள். அவ்வாறே அந்த ஐவரையும் ஆச்ரமத்திலேயே மணந்து கொண்டான். அங்கே தங்கி முனிவர் பலரையும் நாள்தோறும் மும்முறை வலம் வந்து வணங்கிக்கொண்டிருந்தான். ஒரு நாள், அகம்பண மகரிஷி நரவாகனனை யழைத்து ரிஷபமலை சென்று வித்தியாதரச் சக்கரவர்த்தியாக மகாபிஷேகம் செய்துகொள்ளும்படி பணித்தருளினர். தேவமாயனும் முன்னிருந்த சக்கரவர்த்திகளான ரிஷபகன் முதலாயினரும் அவ்வாறே செய்தனர் என்றும் அங்கு மகாபிஷேகம் செய்து கொள்வதே முறையென்றும் கூறினன். இந்தச் சமயத்தில் அரிசிகன் மந்தரமலையில் அபிஷேகம் செய்து கொள்ளலாமென்று கூறவே, 'அரசே நந்திப்பொருப்பிலேயே மகாபிஷேகம் செய்து கொள்வாயாக; உனக்கு எல்லா நன்மையுமுண்டாகும்' என்றொரு வானிழல் எழுந்தது. நரவாகனனும் அவ்வாறே செய்வதாக ஒத்துக்கொண்டு அகம்பண மகரிஷியிடத்திலும் மற்றைய முனிவரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு ரிஷபமலை நோக்கிப் புறப்பட்டான். திரிசீரிஷ முழையின் வடபுற வாயிலை யடைந்து காளராத்திரியை வணங்கிப் புழையில் நுழைந்து தென்புற வாயில் வழியே வெளிவந்து தேவமாயனது வேண்டுகோட்கு இணங்கி அவனது மாளிகையிற் றங்கி விருந்துண்டான். தான் கைலையங்கிரியி னடியிலிருப்பதாலே சிவபெருமானைத் தரிசித்துச் செல்வது முறைமை யென்றெண்ணி, பரிசனர்களைக் கீழே நிறுத்தி

கைலையங்கிரி சென்று நந்தியம் பெருமானை வணங்கினுன். அவர் உள்ளேவிட உமாதேவியோடு வீற்றிருக்கும் பிறை சூடியைக் கண்ணுரக் கண்டு மும்முறை வலம்வந்து வணங்கி நின்றுன். கருணையங் கடலாகிய எம்பெருமான் அருளோடு நோக்கி, 'நாம் உனது செயலுக்கு மிக மகிழ்ச்சி கொண்டோம். நீ நந்திமலை சென்று மகாபிஷேகம் செய்துகொண்டு நன்கு வாழ்வாயாக' எனக் கட்டளையிட்டருளினர். அந்தக் கட்டளையைச் சிரமேற்றுங்கி தேவமாயனது அரண்மனையை அடைந்து மிக்க குதூகலங் கொண்டிருந்தான். அவனது அளவிலா மகிழ்ச்சியைக் கண்ட மதனமஞ்சுகை பின்னுமொரு ஐவர் மனைவியர் கிடைத்தனரோ என்று பரிகசித்தாள். நரவாகனன் தான் சிவபெருமானைத் தரிசித்ததையும் அவர் அருளியதையும் வியந்து கூறினன். மறுநாள் அங்கிருந்து புறபட்டு நந்திவரையை அடைந்தான். கந்தர்வரும் வித்தியாதரரும் பலப்பல கையுறைகளை ஏந்திக்கொண்டு வந்தனர். மகாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம நடைபெற்றன. தேவியர் பலருள்ளும் நரவகானனேடு சிங்காதனத்தில் ஒருசேர வீற்றிருக்கும் பெருமை எந்தத் தேவிக்கு உரியது என்று வித்தியாதரர் வினவியபோது நரவாகனன் மதனமஞ்சுகையைச் சுட்டிக்காட்டினன். வித்தியாதரரெல்லாம் சற்று ஆலோசித்தனர். அவள் இரதிதேவியின் அவதாரமென்றும், அவளது தவத்துக்கு இரங்கிச் சிவபெருமான் முன்னரே இந்தப் பதவியை யருளியிருக்கின்றுரென்றும் வானிழல் உண்டாயிற்று. அதனைக் கேட்ட வித்தியாதர ரனைவரும் மிக்க மகிழ்ச்சிகொண்டு மதனமஞ்சுகையையும் அலங்கரிக்கச் செய்து சித்தர்களைக் கொண்டு நன்னீராட்டி, சக்கரவர்த்தி வாழ்கவென வாழ்த்தொலி எடுத்தனர். இவ்வாருக நெடுநாளக நரவாகனன் கொண்ட விருப்பம் நிறைவேறியது.

அக்காலத்திலே. தனது தந்தையைக் காணவேண்டு மென்ற அவா நரவாகனனுக்கு மிகுந்தது. கோமுகனை ஆலோசித்துக்கொண்டு வாயுபதனை அழைத்து, அவனைக் கௌசாம்பி சென்று தன்பெற்றோரையும் அம்மானை கோபாலகனையும் யூகிமுதலாய நல்லமைச்சர் பலரையும் அழைத்துவரும்படி கட்டளையிட்டான். தன் மகன் வித்தியாதரச் சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பட்டானென்று உதயணன் கேட்டவுடனே உடலம் பூரித்தான். வாசவதத்தை முதலாய தாயர் பெருமிதமெய்தினர். அவர்கள் எல்லோரையும் வாயுபதன் ஆகாயமார்க்கமாக அழைத்துச் சென்றான். தன் தந்தையைக் கண்டதும் நரவாகனன் தன் பரிவாரங்களோடு சென்று எதிர்கொண்டழைக்க, உதயணன் தன் மகனைக் கட்டித்தழுவிக்கொண்டான். வாசவதத்தை தன் மகனை வாரியெடுத்து மார்போடணைத்துத் தழுவி, பெற்றகாலத்தினும் அதிகமாக மகிழ்ச்சிகொண்டாள். யூகி முதலிய அமைச்சர் பலரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். பின்னர் அவரவர்களுக் குரிய இருக்கைகளிலிருக்கச் செய்து நரவாகனன் தனது சிங்காதனத்தில் அமர்ந்தான். அந்தக் காட்சியைக் கண்டதும் உதயணனும் இராணிமாரும் தங்கள் பிறப்பு பாழாகாது பெருமையுற்ற தென்று பெருமித மெய்தினர். வாசவதத்தை தனது மருமகண்மாரது குலகோத்திரங்களை விசாரித்து மகிழ்ச்சியுற்றாள். பின்னர் பெரியவிருந்தொன்று நடைபெற்றது. இவ்வாறாகப் பலநாள் கழிந்தன. உதயணன் கௌசாம்பிக்குத் திரும்பிச் செல்லவேண்டு மென்று குறிப்பிக்கவே, நரவாகனன் தேவமாயனை யழைத்துத் தன்பெற்றோர் வத்தவ நாட்டிற்குச் செல்ல விரும்புவதால் அவரவர்களுக்கு ஏற்ற ஆடையணிகளும் ஆயிரம் பாரம் தங்கமும் ஆயிரம் வித்தியாதர வேலையாட்கள் மூலமாக அனுப்பிவைக்கும்படி உத்திரவிட்டான்.

தேவமாயன் தானே அவற்றை எடுத்துக் கொண்டுபோய் சேர்ப்பிப்பதாகவும் உதயணன் முதலானவர்களை அழைத்துக் கொண்டுபோய் கௌசாம்பியில் ஒப்புவித்துவிட்டு வருவதாகவும் விண்ணப்பித்துக்கொண்டான். நரவாகனன் அதற்குச் சம்மதிக்கவே தேவமாயன் வத்தவனை அவனுடைய பரிசனர்களோடு அழைத்துச்சென்று அவனுடைய நாட்டில் விட்டுவந்தான்.

இவ்வாறாக நரவாகனன் தனது மனைவியரான 1. மதனமஞ்சுகை, 2. வேகவதி, 3. காந்தர்வதத்தை, 4. அஜினாவதி, 5. பிரியதர்சனை, 6. பாகீரதியசஸ், 7. பிரபாவதி, 8. இரத்தினப்பிரபை, 9. கர்ப்பூரிகை, 10. அலங்காரவதி, 11. சக்தியசஸ், 12. ஜயேந்திர சேனை, 13. லலிதலோசனை, 14. ஆத்மானிகை, 15. சுலோசனை, 16. இகாத்மிகை, 17. வாயுவேகயசஸ், 18. காளிகை, 19. வித்தியுத்புஞ்சை, 20. மதங்கினி. 21. பதுமப்பிரபை, 22. மந்தராதேவி, 23. கனகாவதி. 24. காலவதி, 25. சுருதை, 26. ஆமிரப்பிரபை என்ற இருபத்தாறு மனைவியரோடும் சுகமாகக் காலங் கழித்துவந்தான். ஒருநாள் இவனது அவையிலே காசியப முனிவர் தோன்றி நரவாகனன் நீதியையுடையவனென்றும் நீதியோடு அரசு புரிந்தால் வெகுநாள் வாழலாமென்றும், அவ்வாறில்லாமல் ஓரஞ்சொல்லி அநேக சக்கரவர்த்திகள் தமது பதவிகளை இழந்துவிட்டனரென்றும், அவ்வாறாகாமல் நரவாகனன் நீதியோடு அரசாள வேண்டுமென்றும் கூறி ஆசீர்வாதஞ் செய்தார். அவ்வாறே நடப்பதாகக் கூறி நரவாகனனும் வித்தியாதரச் சக்கரவர்த்தியாக வெகுநாள் அரசாண்டு கொண்டிருந்தான்.

உதயண சரிதம்

முன்னுரை

குணாட்டியர் இயற்றிய பெருங்கதையின் வழிநூலாக வந்த பிரகத் கதாமஞ்சரி, கதா சரித் சாகரம் என்ற நூல்கள் சிவபெருமானது அருளைப் பெற்று உதயணன் கதை சொல்லப்படுவதாகக் கூறும். புத்தமதச் சார்பாகவும் உதயணன் கதை கூறப்படுகிறது. புத்தர்களுக்கு முக்கிய ஆகமமாக இருப்பது விநய பிடகம், சுத்தபிடகம், அபிதம்ம பிடகம் என்ற பகுதியினையுடைய திரிபிடகமாகும். இவற்றுள் சுத்த பிடகம் தீக நிகாயம், மஜ்ஜிம்ம நிகாயம், சம்யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம், குட்டக நிகாயம் என்ற ஐந்து பகுப்பினை யுடையது. இவற்றுள் குட்டக நிகாயம் ஐந்தைந்தான மூன்று பகுப்பாகப் பிரிக்கப்படும். அவற்றுள் ஒன்று தம்ம பதம் என்பது. இது புத்தரது 423 உபதேச மொழிகளை யுடையது. இந்த உபதேசமொழிகள் பல சுலோக ரூபமாக அமைந்துள்ளன. அவற்றுள்ளே பெரியாரைப் பேணல் என்ற 21—23 இலக்கமுடைய உபதேச மொழிகளுக்கு எடுத்துக்காட்டாக உதயணன் கதை கூறப்படுகிறது.

பெரியோரைப் பேணல் என்ற இந்த உபதேச மொழிகள் 'கௌசாம்பிக் கருகிலுள்ள கோஷித மடத்தில் புத்தபகவான் தங்கியிருந்தபோது கூறியதாகும்; அவையாவன:—

(21) பெரியோரைப் பேணல் இறவாமைக்கு வழியாகும்; பேணாமை இகொட்டுக்கு வழி; பேணுவோர் ஒருபொழுதும் இறவார்; வழிபாடாற்றாதவரோ உயிருடனிருந்தும் இறந்தவராவார்.

(22) இதனை நன்கறிந்த அறிவாளிகள் பெரியோர் வழிபாட்டில் மகிழ்ச்சி கொள்கின்றனர்.

(23) கடவுள் சிந்தனையில் ஈடுபட்டவர்கள் இதனை உறுதியாகக்கொண்டு முயன்று நிர்வாணமடைகின்றனர்.

இந்த உபதேச மொழிகளுக்கு எடுத்துக்காட்டாகவே உதயணன் கதை கூறப்பட்டுள்ளது. இந்தக் கதைக்கும் பெருங்கதையிற் காணப்படும் உதயண சரிதத்திற்கும் வேறுபாடு அதிகம். இந்தக் கதை கீழே தரப்படுகிறது.

உதயணனது பிறப்பும் இளமையும்

முன்னொரு காலத்திலே அளகப்பன்[1] என்று ஓர் அரசனும் வேததீபகன் என்று ஓர் அரசனும் சேர்ந்தாற்போலிருக்கும் நாடுகளில் அரசாண்டுவந்தனர். அவர்கள் இளமையிலிருந்தே தோழமை பூண்டவர்கள். ஒரு குருவினிடத்திலேயே வித்தைகற்றவர்கள். இவர்கள் வெகுநாள் அரசாண்டபின் இந்தப் பூவுலகில் மக்கள் பிறப்பதையும் இறப்பதையும் பிறிதொன்றும் நிலையாமையையும் கண்டனர். 'ஒருவன் உயிர் துறக்கும்போது ஒன்றையும் கூடக் கொண்டுபோக இயலாது; தன் உடல் உள்பட எல்லாவற்றையும் இந்த உலகிலேயே விட்டுச் செல்லவேண்டும்' என்பதை அவர்கள் நிச்சயமாகக் கண்டபின் இந்த உலகினின்றும் நீங்குவதாகத் தீர்மானித்தனர்.

அதன்படியே தங்களுடைய நாடுகளைப் பெண்டு பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு, துறவுபூண்டு காட்டிற்குச் சென்றனர். அங்கும் இருவரும் சேர்ந்துவாழ்ந்தால் 'துறவு ஏற்படாதென்று நிச்சயித்துச் சற்றுத் தூரத்திலுள்ள இரண்டு

1. அலகா என்ற பாலிமொழி குபேரனது பட்டணம் என்று பொருள்படும். அதுவே தமிழில் அளகை, அளகாபுரி என வழங்கும்.

மலைகளில் இருவரும் வசிப்பதாகத் தீர்மானித்தனர். அவ ரவர் உயிரோடு இருப்பதைக் குறிக்க ஒவ்வொரு உவாதோ றும் தீமூட்டி வெளிச்சம் காட்டுவதென நிச்சயித்துப் பிரிந் தனர். சிறிது நாளில் வேததீபகர் இறந்தார். அவர் முன்னு ளிற் செய்த புண்ணியத்தினாலே தேவர்களுக்கு இறைவனாகப் பிறந்து சகல பாக்கியங்களையும் அனுபவித்து வந்தார். ஒரு நாள் இவர் தனது நண்பனை அளகப்பரைக் காணத் தன்னு டைய தேவஉடலை நீத்து யாத்திரிகவேடங்கொண்டு வந்தார். அவர் அளகப்பரைக்கண்டு வந்தனைபுரிந்து நின்றார்.

அள:— நீர் எங்கிருந்து வருகிறீர்?

தேவ:—பெரியோரே, நான்ஒரு யாத்திரிகன், வெகு தொலைவிலிருந்து வருகிறேன். ஐயரே! நீர்மாத்திரம் தனிமை யில் இங்கு வசிக்கின்றீரே; உமக்கு உற்ற துணை ஒருவரு மில்லையா?

அள:—எனக்கு ஒரே ஒரு நண்பன் உண்டு.

தேவ:—அவர் எங்குளார்?

அள:—அவர் அதோ தோன்றும் மலையில் இருக்கின் றார். ஆயினும் அவர் உவாநாளில் தீமூட்டாமையால் இறந்து பட்டிருக்கவேண்டும்.

தேவ:—அப்படியா?

அள.—ஆம்.

தேவ:—அவரே நான்.

அள:—அவ்வாறானால் நீர் எங்குப் பிறந்திருக்கின்றீர்?

தேவ:—நான் மிக்க வல்லமையுடைய தேவர்கள் தலை வனாகப் பிறந்திருக்கின்றேன். தங்களைக் காணும்பொருட்டு வந்தேன். இங்கு தாங்கள் சுகமாக வாழ்கின்றீர்களா? அன்றித் துன்பமேதேனும் உண்டோ?

அள:—நான் யானைகளால் துன்புறுகிறேன்.

தேவ:—எவ்வாறு?

அள:—நான் பெருக்கிச் சுத்தம் செய்துவைக்கும் இடமெல்லாம் யானைகள் இலத்திகளையிட்டு அசுத்தமாக்குகின்றன. அதனால் உண்டாகும் நாற்றம் பொறுக்கமுடியவில்லை.

தேவ:—அப்படியா! அவற்றை விரட்டிவிடத் தங்களுக்கு மனமுண்டோ?

அள:—ஆம்; சகோதரரே.

தேவ:—அவ்வாறாயின் அதற்கு ஒரு உபாயம் செய்கிறேன்.

இவ்வாறு கூறி வேததீபகனாகிய தேவர் அவருக்கு யாழொன்று கொடுத்தார். அதனில் மூன்று தந்திகள் இருந்தன. மூன்று தந்திகளுக்கும் மூன்று மந்திரம் கற்றுக்கொடுத்தார். முதல் தந்திக்கு உரித்தாகிய மந்திரத்தை உச்சரித்துத் தந்தியைத் தெறித்தால் யானைகள் திரும்பிப் பார்க்காமல் ஓடும். இரண்டாவது தந்திக்கு உரிய மந்திரத்தைக் கூறி இரண்டாவது தந்தியைத் தெறித்தால் யானைகள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடும். மூன்றாவது மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு அதற்கு உரிய தந்தியைத் தெறித்தால் யானைகளின் அரசு வந்து கழுத்தில் ஏற்றிக்கொண்டுசெல்லும். இந்த யாழை வைத்துக்கொண்டு சுகமாக வாழும்படி சொல்லிவிட்டுத் தேவர் சென்றார். அதுமுதல் அளகப்பரை யானைகள் தொந்தரவு செய்வதேயில்லை.

இவ்வாறு இவர் தொந்தரையின்றி வாழ்கின்ற காலத்திலே கோசாம்பியில் பரந்தபன் என்று ஓரரசன் அரசாண்டுகொண்டிருந்தான். ஒருநாள் மாலைப்பொழுதில் அவன் தன் பட்டமகிஷியோடு உய்யான வனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அந்தக் காலத்திலே பட்டமகிஷி கருவுற்றிருந்தாள். தன் கணவன் கையிலிருந்த கணையாழியை மெல்லக் கழற்றித் தன் கையில் போட்டுக்கொண்டு அருகிலிருந்த தன்

கணவனுடைய சிவப்புப் போர்வையைப் போர்த்துக்கொண்டாள். அந்தச் சமயத்திலே அவ்விடத்தில் மேலே பறந்து சென்ற பெரும்பறவை யொன்று இவள் ஒரு மாங்கிசத் துண்டென்று நினைத்துக் கீழ்நோக்கி இறங்கி வந்தது. அரசன் அதனைக் கண்டவுடன் அரண்மனைக்குள் ஓடிவிட்டான்; இராணிக்கு எழ இயலாமையினாலே பறவை பறந்துவந்தவுடன் ஓட முடியவில்லை. அது அவளைக் கௌவிச்சென்றது. ஆயினும் அவள் கெட்டிக்காரியாகையால் அப்பறவை தூக்கிச் செல்லும்போது கூச்சற் போட்டால் தன்னைத் திடீரெனக் கீழேபோட்டுவிடும் என்று எண்ணிக் கூச்சலிடாமல் இருந்தாள். அந்தப்பறவை ஐந்து யானைப்பலம் உடையதாகவிருக்குமாம். அதனால் தான் தூக்கிச்செல்லும் மாங்கிசபிண்டத்தைத் தான் விரும்பிய இடத்திற்கு மிக்க சுலபமாகக் கொண்டு செல்லுமாம்.

இமயமலைச்சாரலிலே ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதன் கிளைகளிலே உட்கார்ந்து இந்தப்பறவை இரையை உண்பது வழக்கம். அந்த வழக்கப்படியே பறவையானது இராணியைத் தூக்கிச் சென்று இருகவரான ஒரு கிளையில் இறக்கிற்று. மரத்தின் கீழேயிருந்து மேலே ஏறும் வழியைப் பார்த்து ஒருவருமில்லை யென்று தெரிந்தபிறகே பறவைகள் உண்பது வழக்கம். அந்த வழக்கப்படியே இந்தப் பறவையும் பார்த்தது. இராக்கினி இதுதான் நல்ல தருணமென்றெண்ணி இரண்டு கைகளையும் விரித்துத் தட்டிச் சத்தமிட்டாள். பறவை பயந்து ஓடிவிட்டது.

இருட்ட ஆரம்பித்தவுடனே இராணிக்குப் பிரசவ வேதனை உண்டாயிற்று. அந்தவேளையில் உலக முழுவதும் இருள் மூடிக்கொண்டு காற்றும் மழையும் அடித்தது. பாவம்!! இவளுக்கு ஆறுதல் செல்லுவார் அங்கு ஒருவரும் இல்லை. இரவு ஏற வேற மழையும் நின்றது. வானமும் வெளுத்தது;

விடியற்காலையில், சூரியன் உதிக்கும் சமயத்தில் அவளுக்கு மகன் பிறந்தான். அவன் காற்று (உதா) அடித்தபோதும் மலையிலும் அருணோதயத்திலும் பிறந்ததால் அவனுக்கு உதயணன் என்று பேரிட்டாள்.

இந்த ஆலமரத்துக்கு அருகிலேதான் அளகப்பர் தவப் பள்ளி இருந்தது. மழைக்காலத்தில் அவர் காட்டினுள் சென்று காய்கனி முதலியன சேகரிப்பதில்லை. அப்பொழுது இந்த ஆலமரத்தடிக்கு வந்து முதல்நாளிரவில் பறவைகள் தின்று கழித்த எலும்புகளைப் பொறுக்கிக்கொண்டுபோய் இடித்துக் கஷாயம்போட்டுக் குடிப்பது வழக்கம். அந்த வழக்கப்படியே, அளகப்பமுனிவர் ஆலமரத்தடிக்கு எலும்பு பொறுக்க வந்தார். அங்கே குழந்தையின் அழுகையொலி கேட்டது. அவர் அணுகிப் பார்த்தார்; இராணியைக் கண்டார்.

முனி:—நீ யார்?

இரா:—நான் ஒரு பெண்பிள்ளை.

முனி:—நீ இவ்விடம் எப்படி வந்தாய்?

இரா:—என்னை ஒரு பெரும் பறவை தூக்கிவந்தது.

முனி:—கீழே இறங்கிவா.

இரா:—பெரியோரே! சாதி மாறுபாட்டால் நான் கீழே வர இயலாது.

முனி:—நீ என்ன ஜாதி ?

இரா:—நான் க்ஷத்திரிய ஜாதி.

முனி:—நானும் க்ஷத்திரியன்தான்.

இரா:—அவ்வாருனல் க்ஷத்திரிய தருமத்தைக் கூறு வீராக.

முனி:—கேள்! இதுதான் க்ஷத்திரிய தருமம.

[அவர் க்ஷத்திரியதருமம் இதுவெனக் கூறினர்.]

இரா:—இனி, மரத்தின் மேலேறி இந்தக் குழந்தையைக் கீழே கொண்டுபோம். நான் பின்னே வருகின்றேன். என்னைத் தீண்டாதீர்.

முனிவர் மெல்ல மரத்தின் மேலேறிக் குழந்தையைக் கீழே கொணர்ந்தார். பின்னே இராணியும் இறங்கிக் கீழே வந்தாள். இவர்கள் இருவரையும் முனிவர் தன்ஆச்சிரமத்திற்கு அழைத்துச்சென்று காப்பாற்றி வந்தார். அவளும் கற்புநிலை வழுவாது காலந்தள்ளி வந்தாள். இவ்வாறு சிறிது நாள் செல்லவே, இராணி யோஜித்தாள். 'நமக்கோ இந்த இடத்திலிருந்து வெளியிற்செல்ல வழிதெரியாது; இவரோ துறவி; "சன்னியாசிப் பயணம் திண்ணையைவிட்டு இறங்கினலாச்சு" என்றபடி இவர் எங்கேயாவது சென்றுவிட்டால் நானும் குழந்தையும் பட்டினிகிடந்து உயிர் விடவேண்டும். ஆதலினாலே அவரை எவ்வாறாவது மயக்கி அவரது விரதத்தைக் கலைத்து விடவேண்டும்' என்று யோசனை பண்ணிக்கொண்டு அவள் தனது துணிகளை நழுவவிட்டு அவருக்கு ஆசையை யுண்டாக்கினாள். அவரது விரதத்துக்குக் கேடு உண்டாகும்படி செய்தாள். அவரும் மயக்கமடைந்து அவளைக் காதலித்தார். அது முதல் இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்துவந்தார்கள்.

உதயணன் அரசுரிமை எய்துதல்

ஒருநாள் அந்த முனிவர் நட்சத்திர சமாகமங்களைக் கவனித்து, 'பெண்ணே! கோசாம்பி அரசனான பரந்தபன் இறந்துபட்டான்' என்றார். 'பெரியோய்! ஏன் இவ்வாறு கூறுகிறீர்? அவர் உமக்கு என்ன தீங்கு செய்தார்' என்றாள் இராணி. 'எனக்கு அவர்மேல் விரோதம் ஒன்றுமில்லை, அம்மா! அவருடைய பிறந்த நட்சத்திரத்தைக் கவனித்தேன், அதுகொண்டு இதனைக் கூறினேன்' என்றார். இதனைக் கேட்டவுடனே இராணி வாய்விட்டு அலறினாள். அவள்

அழக்காரணமென்ன என்று முனிவர் கேட்டபோது அந்தப் பரந்தபன் தன் கணவனென்று அவள் கூறினாள். இந்த உலகத்திற் பிறந்தவர்களெல்லாம் இறப்பது இயற்கையென்றும் அதற்காக அவள் வருந்த வேண்டாமென்றும் முனிவர் அவளைத் தேற்றினர். அவள் தான் அதற்காக வருந்தவில்லையென்றும் தன்னுடைய பிள்ளைக்கு இராஜ்யம் கிடைக்காமல் மற்ற நாட்டு மக்களைப்போல நின்று தவிக்கவேண்டி வருமே என்றும் கவலைப்படுவதாகக் கூறினாள். அவ்வாறாயின் தான் அந்த இராச்சியத்தை அவனுக்கு வாங்கித்தருவதாக முனிவர் கூறினர்.

பின்னர் உதயணனை அழைத்து அவனுக்குத் தன்னுடைய யாழையும் அதற்குரிய மந்திர வித்தைகளையும் கற்றுக் கொடுத்தார். அந்தக் காலத்திலே யானைகள் கூட்டம் கூட்டமாக ஆலமரத்தடிக்கு வந்துகொண்டிருந்தன. ஒருநாள் அம் முனிவர் உதயணனை அழைத்து யானைகள் வருமுன் அந்த ஆலமரத் தடிக்குப்போய் அதனில் ஏறிக்கொண்டு யாழில் முதல் நரம்பைத் தெறித்து அதற்குரிய மந்திரத்தைக் கூறும்படி கூறினர். உதயணனும் அவ்வாறே ஆலமரத்தடிக்குச் சென்று மரத்திலிருந்துகொண்டு வீணையை மீட்டி மநதிரத்தைச்சொன்னான். யானைகளெல்லாம் வெருண்டோடிவிட்டன. அதனை வந்து முனிவரிடம் சொன்னான். இரண்டாம்நாள் முனிவர் இரண்டாவது தந்தியைத் தட்டி அதற்குரிய மந்திரத்தை உச்சரிக்கச் சொன்னர். யானைகளெல்லாம் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடின. அதனையும் வந்து சிறுவன் சொன்னான்.

பின்னர் முனிவர் இராணியைப்பார்த்து 'அம்மா! இனி உன் பிள்ளைக்குச் சொல்லவேண்டியதைச் சொல்; அவன் இங்கிருந்து புறப்பட்டுச் சென்று மன்னவனாவான்' என்றார். இராணி உதயணனைப் பார்த்து 'நீ கோசாம்பி சென்று

ஜனங்களைப் பார்த்து "நான் பரந்தபனுடைய மகன். என்னை ஒரு பெரும்பறவை தூக்கிச் சென்றது" என்று சொல். அதனை அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் அங்குள்ள சேனைத்தலைவர் முதலியோருடைய பெயர்களைச் சொல். அவற்றையும் கேட்டு அவர்கள் உன்னை அரசனாக ஒப்புக் கொள்ளாவிட்டால் இந்த மோதிரத்தையும் செவ்வாடையையும் காட்டு. அப்பொழுது அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று சொல்லி அவற்றையும் கொடுத்தனுப்பினாள்.

உதயணன் முனிவரைப் பார்த்துத் தான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அவர் உதயணனுக்கு யானையரசன் பணிவதற்குரிய மந்திரத்தைக்கூறி, 'இந்த மந்திரத்தையுச்சரித்து நீ யாழ் நரம்பைத் தெறிப்பாயானால் அரசயானை வரும்; அதன்மேல் ஏறிச்சென்று உன் அரசாட்சியை அடைவாயாக' என்று கூறி ஆசீர்வதித்தனுப்பினார். அவ்வாறே உதயணன் அரசயானையின்மேல் ஏறிக்கொண்டு 'நான் கோசாம்பி அரசன் பரந்தபன் மகன்; எனக்கு என்னுடைய இராச்சியம் கிடைக்கும்படி செய்' என்று யானையின் காதில் ஓதினான்.

அந்த யானை உடனே எல்லா யானைகளையும் வந்து கூடும்படி செய்து அவற்றுள் கிழமானவற்றையும் சிறு கன்றுகளையும் விலக்கிவிட்டு, பெரிய யானைப்படை யொன்றைக் கூட்டிக் கொண்டு கோசாம்பிநோக்கிச் சென்றது.

இவர்கள் தங்கிய முதல் ஊரில் உதயணன் தான் கோசாம்பி அரசனென்றும் தன்னோடு வருபவர்கள் எல்லோரும் வரலாமென்றும் கூறினான். பலபேர் புறப்பட்டனர். இப்படியாகப் பெரும்படை சேர்த்துக்கொண்டு உதயணன் கோசாம்பி சென்றடைந்தான் அவ்வூரை முற்றுகையிட்டுத் தன்னுடன் போருக்குவரும்படி உள்ளிருந்தவர்களை அழைத்தான். அங்கிருந்த ஜனங்கள் கோட்டைவாயிலை அடைத்

துக்கொண்டு தாங்கள் இவனோடு போர்புரியவும் ஆயத்தமாக இல்லை யென்றும் அரசனாக ஏற்கவும் முடியாதென்றும் கூறினார்கள். தங்களுடைய இராணியை ஒரு பெரும் பறவை தூக்கிச் சென்றதென்றும் அந்தக் காலத்திலே இராணி கருவுற்றிருந்தா ளென்றும் அவளுடைய செய்தி தெரியும் வரையில் தாங்கள் ஒன்றும் செய்யமுடியா தென்றும் ஜனங்கள் கூறினர். உதயணன் உடனே தன்னிடமிருந்த சிவப்புக் கம்பளத்தையும் முத்திரை மோதிரத்தையும் காட்டினான். ஜனங்கள் அவற்றைப் பார்த்தபின் இவன் பரந்தபனுடைய மகனென்றறிந்து இவனை அரசனாக ஏற்றுக் கொண்டனர். உதயணன் அரசுரிமையைப் பூண்டு அரசாட்சி செய்து வந்தான்.

அவன் மனைவியரை மணந்துகொள்ளுதல்

உதயணன் தன்நாட்டைப் பெற்று அரசனாக ஆளுகையில் கோஷகன் என்றொரு மந்திரி இருந்தான். இவன் முற்பிறப்பில் அஜித நாட்டில் பிறந்து கொதூகலகன் என்ற பேரோடு வாழ்கின்ற காலத்திலே அந்த நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. இவனும் இவனுடைய மனைவியும் அந்த நாட்டை விட்டு வேற்று நாடுசென்று பிழைக்கலாமென் றெண்ணி, தங்களுடைய ஒரே பிள்ளையைத் தூக்கிக்கொண்டு சென்றனர். குதூகலகன் பிள்ளையைத் தூக்கிச் செல்வது துன்பமாக இருந்ததால் வழியில் பிள்ளையைப் போட்டுவிட்டான். இதனைக் கண்ட இவனது மனைவி அழுது பிள்ளையைப்பெற்று வழிநடந்தாள். இந்தக் குற்றத்திற்காக இவன் மறுபிறப்பில் கோசாம்பியிலுள்ள ஒரு தாசிவயிற்றில் பிறந்தான். 'தேவடியாள் வீட்டிலே ஆண்பிள்ளை பிறந்ததுபோல' என்ற பழமொழிக்கு இணங்க அந்தத் தாசி பிறந்த பிள்ளையை முறத்தில் வைத்துக் குப்பையில் எறிந்துவிடச் செய்தாள்.

அன்று உதயணனுடைய பொக்கிஷமந்திரி அரண்மனையிலிருந்து திரும்பிவருகையில் அரண்மனைச் சோதிடரைக் கண்டான். அவரைக் கண்டு அன்று உண்டான நட்சத்திரங்களின் சேர்க்கையால் உண்டாகும் பயன் என்னவென்று கேட்டான். சோதிடன் நட்சத்திரசமாகமத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, இன்றுகாலையில் இந்தக் கோசாம்பிநகரில் ஒரு பிள்ளைபிறந்திருக்கிறதென்றும், அது வரப்போகும் பொக்கிஷமந்திரியாகுமென்றும் கூறினான். இதனைக் கேட்ட பொக்கிஷமந்திரி பொறாமைகொண்டு ஏவலாளர்களை விட்டு அன்று பிறந்த பிள்ளையைக் கண்டுபிடித்துக் கொண்டுவரும்படி செய்தான். காவற்காரர் சென்று தேடிக் கோஷகனைக் கொணர்ந்தனர். அவனைப் பொக்கிஷமந்திரி ஏழு தடவை கொல்ல முயன்றும் அவன் இறக்காமல் பலவிதமாகக் காப்பாற்றப்பட்டு இந்தப் பொக்கிஷ மந்திரிக்குப் பின் பொக்கிஷமந்திரி யானான்.

இவன் பொக்கிஷமந்திரியாக வாழ்ந்துவருகையில் பத்தாவதி என்ற ஊரில் ஒரு பொக்கிஷமந்திரி இருந்தான். அவனும்கோஷகனும் நண்பர். பத்தாவதியில் கொள்ளைநோய் உண்டானபோது அந்த அரசிறையமைச்சன் கோஷகனிடம் செல்லலாமென்று எண்ணித் தன் பெண்பிள்ளையோடு வந்தான். கௌசாம்பி வந்ததும் அவன் இரண்டொரு நாள் இளைப்பாறியபின் கோஷகனைக் காணலாமென்று எண்ணியிருந்தான். வந்த இரண்டு நாளைக்குள் தன்னுடைய பெண்ணை. விட்டுவிட்டு இறந்துவிட்டான். அவனுடைய மனைவியும் இறந்துவிட்டாள். அதனைக் கேட்ட கோஷகன் அந்தப் பெண்ணைத் தன்பெண்போலப் பாவித்து வளர்த்து வந்தான். அந்தப் பெண்ணுக்குச் சாமாவதி யென்று பெயர். அவள் பருவமடைந்தபோது அவளுக்குக் கோஷகன் ஐந்நூறு தாதியரை நியமித்திருந்தான்.

கௌசாம்பியில் விழாவொன்று நடந்தது. அந்த விழாக் காண சாமாவதியும் தன்தோழிகளோடு சென்றிருந்தாள். அவளைக்கண்ட உதயணன் அவளுடைய அழகில் ஈடுபட்டு அவளைத்தனக்குத் தரும்படி கோஷகனைக் கேட்டான். அரசர் குடித்தனத்திலிருக்கிற பெண்களை மணந்தபோது துன்புறுத்துகின்றனராம்; ஆனதாலே தன் பெண்ணை அரசனுக்கு மணஞ்செய்விக்க இயலாதென்று கோஷகன் சொல்லியனுப்பினான். இந்தச் செய்தியைக் கேட்ட அரசன் அமைச்சனது சொத்தைப் பறிமுதல்செய்து அவனுடைய வீட்டையும் பூட்டிவிட்டான். வீட்டுக்குத் திரும்பிவந்த சாமாவதி நடந்த வரலாற்றை யறிந்து தன் தகப்பனைச் சினந்துகொண்டு அன்னவாறு அரசனுக்குச் சொல்லியனுப்புவது தகுதியல்ல வென்று கூறினாள். அரசன் சாமாவதியை அவளது ஐந்நூறு தாதியரோடு அழைத்துக்கொள்வதாக இருந்தால் அரசனுக்கு மணஞ்செய்விக்க இடையூறு ஒன்றும் இல்லையென்று சொல்லியனுப்பும்படி கோஷகனை வேண்டிக்கொண்டாள். கோஷகன் அவ்வாறே உதயணனுக்குச்சொல்லிவிட, உதயணன் அதற்குச் சம்மதித்து, சாமாவதியை மணந்து தன் பட்டமகிஷியாக்கிச் சகலசிறப்புஞ் செய்து போற்றி வந்தான்.

உதயணன் பின் சண்ட பஜ்ஜோதனனுடைய மகளான வாசுலதத்தை என்பவளை மணந்துகொண்டான். ஒருநாள் சண்ட பஜ்ஜோதனன் உய்யான வனத்திலிருந்து திரும்பி வரும்போது தன்னுடைய பரிசனங்களைப் பார்த்துத் தன்னைவிட செல்வத்தில் மிகுந்தோர் உண்டோ என்று வினவினான். அவனைவிடக் கோசாம்பி அரசனான உதயணன் செல்வம் முதலாயவற்றில் மிகுந்தவன் என்று உடன்கூட்டத்தார் கூறினர். அதனைப் பொறாத பிரச்சோதனன் உதயணனைச் சிறைபிடிக்கவேண்டுமென்று கூறவே, அது இயலாத

காரியமென்று கூறினர். ஆனால் அவன் யானை வேட்டையில் கெட்டிக்காரனென்றும் யானைகளை வணக்குகின்ற மந்திரங்களை அறிவானென்றும் கேட்டவுடன் இயந்திர யானை ஒன்று செய்து அதுகொண்டு அவனைப் பிடிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த யானை கோசாம்பிக்கு அருகிலே திரிவதைக் கண்ட வில்லிகள் உதயணனிடம் சென்று பெரிய யானை யொன்று திரிவதாகச் சொல்ல, அவன் அந்த யானையைப்பிடிக்க வேடர்பின்னே சென்றான். எதிரிகள் இயந்திர யானையைச் செலுத்திச் சென்று உதயணனை உடன் கூட்டத்தினின்றும் பிரித்துச் சிறைப்படுத்திப் பிரச்சோதனன்முன் கொண்டுபோய் விட்டனர். இதனை அறிந்த உதயணனது சேனை உச்சயினியை முற்றுகையிட்டது.

அவன் உதயணனைச் சிறையில் வைத்துவிட்டு மகிழ்ச்சி கொண்டாடிக்கொண்டிருந்தான். அப்படிச் சிறையிடப்பட்ட மூன்றாம் நாள் உதயணன் தன்காவற்காரரைப் பார்த்து அரசன் என்ன செய்கின்றானென்று கேட்டான். அவர்கள் தங்கள் காவலன் மகிழ்ச்சி மேலிட்டுக் காலந்தள்ளுவதாகச் சொல்ல, உதயணன் காவலரைப் பார்த்து, 'உங்களுடைய அரசன் பேடியா? எதிரியான அரசனைக் காவலிட்டுத் தூங்குவானா? ஒன்று அவனை விட்டுவிடவேண்டும் அல்லது கொல்லுதல்வேண்டும்' என்றுகூறினான். காவற்காரர் இந்தச் செய்தியைப் பிரச்சோதனனுக்கு அறிவிக்கவே, அவன் கோபங்கொண்டு உதயணனிடம் வந்து இவ்வாறு அவன் கூறியது உண்மையா வென்று வினவினான். உதயணன் அஃது உண்மையென்று சொல்லவே, அவனுக்குத் தெரிந்த யானைகளை வணக்குகின்ற மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தால் விட்டுவிடுவதாகப் பிரச்சோதனன் கூறினான். பிரச்சோதனன் உதயணனை வணங்கி நின்று கேட்டால் அந்த மந்திரத்தைச் சொல்லமுடியுமேயன்றி வணங்காத

வருக்குச் சொல்ல இயலாதென்று உதயணன் கூறினன். ஆனால் தன்னை வணங்கும் எவருக்கும் இந்த மந்திரத்தை உபதேசிப்பதாக உதயணன் ஒப்புக்கொண்டான்.

பிரச்சோதனன் தன்னுடைய மகள் இந்த மந்திரத்தைக் கற்றுக்கொண்டால் தான் அவளிடமிருந்து பிறகு அதனைக் கற்றுக் கொள்ளலாம் என்றெண்ணி ஒருபாயம் செய்தான். தன் மகள் வாசுலதத்தையைக் கூப்பிட்டு மந்திரந்தெரிந்த குஷ்டரோகி ஒருவன் வந்திருக்கின்றனென்றும், அவனுக்கு யானையை வணக்கும் மந்திரம் தெரியும் என்றும், அதனைத் திரைமறைவில் உட்கார்ந்து அவனிடமிருந்து கற்றுக்கொண்டு தனக்குச் சொல்லும்படியும் சொன்னன். உதயணனிடம் கூனியொருத்தி தன்னிடம் இருப்பதாயும் அவளுக்கு அந்த மந்திரத்தைக் கற்றுக் கொடுக்கும்படியாயும் சொன்னன். அவ்வாறே ஒருவரையொருவர் பார்க்காமல் திரைமறைவிலிருந்துகொண்டு மந்திரம் உபதேசிக்கையில், ஒருநாள் வாசுலதத்தைத்தை மந்திரத்தை வாயினல் சொல்ல முடியவில்லை. உதயணனுக்குக் கோபம் பிறந்து, 'கூனி முண்டையே உன் வாயில் நுழையவில்லையா'? என்று வைதான். அதனைப் பொருத வாசுலதத்தை, 'குஷ்டரோகக் கசமே! யாரையடா சொன்னய்' என்றாள். உதயணன் திரையை நீக்கிப் பார்த்து அவளை, 'நீ யார்' என்றான்.

வாசு:—நான் அரசனுடைய மகளான வாசுலதத்தை.

உத:—உனது பிதா என்னிடம் சொன்னபோது நீ ஒரு கூனி என்றாரே ?

வாசு:—உன்னைக் குறித்துச் சொல்லும்போது நீ குஷ்டரோகி என்றார்.

உத:—ஒரு வேளை நாமிருவரும் ஒருவரை யொருவர் கண்டு காதலிப்போமென்று அரசன் கருதினன்போலும்.

அவ்வாறே ஆருக' என்று சொல்லி, அன்று முதல் இருவரும் மந்திரங்கள் பயிலாமல் மகிழ்ச்சியோடு காலந்தள்ளிவந்தனர். அரசன் தன்மகளைப் பாடம் நடந்து வருகிறதா என்று கேட்டபோது எல்லாம் சரிவர நடப்பதாகவே கூறிவந்தாள்.

இவ்வாறு சிலநாள் செல்லவே, உதயணன் வாசுலதத்தையைப் பார்த்து அவளுக்குத் தன் பெற்றோர் உடன்பிறந்தோர் செய்வதைக் காட்டிலும் கணவன் அதிகம் செய்யக் கூடுமென்றும், ஆதலினால் தன்னைச் சிறையினின்றும் மீட்டு விட்டால் அவளுக்கு ஐந்நூறு தாதியரை நியமிப்பதுடன் அவளை முதலிராணியாகச் செய்வதாகவும் கூறினான். அவள் தான் சொல்லுகிறபடி தன்கணவன் நடப்பதால் அவ்வாறு செய்வதாக ஒப்புக்கொண்டாள்.

ஒரு நாள் வாசுலதத்தை அரசனிடம் சென்று வணங்கிவிட்டு ஒதுங்கி நின்றாள். அரசன் தன்மகளுக்கு வேண்டியதென்னவென்று கேட்டபோது, வாசுலதத்தை தான் மந்திரசித்தி பெறுவதற்குச் சில மூலிகைகள் வேண்டியிருக்கின்றனவென்றும் அவை இரவில் குறித்த காலங்களில் எடுக்க வேண்டியிருக்கிறதென்றும் கூறித் தானும் உதயணனும் நினைத்தபோது அரண்மனையை விட்டு வெளியிற் செல்ல உத்தரவு வேண்டுமென்றும் கேட்டாள். அரசன் அவ்வாறே உத்திரவு கொடுத்ததோடு ஒரு தனி வாயிலும் விட்டான். ஒருநாள் பிரச்சோதனன் உய்யான வனம் சென்றிருந்தான். இதுதான் தக்க சமயம் என்று கண்ட உதயணன் பல சாக்குகளில் வெள்ளி தங்க நாணயங்களை நிறைத்துக்கொண்டான். பிரச்சோதனன் முற்பிறப்பில் ஒரு புத்தருக்குப் பிச்சை கொண்டுபோய்க் கொடுத்த புண்ணியத்தின் பயனாகப் பெற்ற ஐம்பது காதம் செல்லக்கூடிய பத்தாவதி என்ற ஒரு யானையின்மேல் வாசுலதத்தையை ஏறச்செய்து தானும் ஏறிக்கொண்டு கௌசாம்பி நோக்கி நடந்தான். இந்தச் செய்

தியைக் காவலாளிகள் அரசனிடம் சொன்னார்கள். பிரச்சோதனன் உடனே ஒரு சேனையை அனுப்பி அவர்களைப் பிடித்துவரும்படி கட்டளையிட்டான். அந்தச் சேனையைக் கண்டவுடன் உதயணன் தன்னிடமிருந்த தங்க நாணய மூட்டையை அவிழ்த்துக் கொட்டினான். அந்தப் பொன்னை வந்த சேனை பொறுக்கிக்கொண்டு நின்றுவிட்டது. பின்னும் சில சேனை தொடர்ந்து வருவதைக்கண்ட உதயணன் வெள்ளி மூட்டையை உதறினான். வெள்ளியின் மேலிருந்த ஆசையால் சேனைகள் அதனைப் பொறுக்குவதற்குள்ளாக உதயணன் உசேனிக்கு வெளிப்புறத்திலிருந்த தனது படையை அடைந்தான். தன்னுடைய சேனையோடுகோசாம்பி சென்று வாசுலதத்தையை மணந்து தலைமையிராணியாக்கினான்.

பின்னும் உதயணன் மாகண்டியாள் என்றொரு பார்ப்பனக்கன்னியை மணந்தான். குருநாட்டிலே மாகண்டியான் என்றொரு பார்ப்பனன் இருந்தான். அவனுக்கு மிக்க அழகு வாய்ந்த பெண்ணொன்று இருந்தது. அதற்கும் மாகண்டியாள் என்று பேரிட்டான். அந்தப் பெண்ணைப் பலர் வந்து கேட்டும் அவர்கள் எல்லோரும் தகுதியில்லாதவர்கள் என்று பார்ப்பனன் தள்ளிவிட்டான். ஒரு நாள் ததாகதரான புத்தர் ஓரிடத்திலிருக்கக் கண்டான். அவருடைய வடிவழகைக் கண்டு அவரே தனது மகளுக்கேற்ற மணவாளன் என அவன் நிச்சயித்தான். அவரை அங்கேயே இருக்கும்படியும் தனது பெண்ணை மணந்துகொள்ளும்படியும் வேண்டிக்கொண்டு வீடு திரும்பினான். அதன்பின் வீட்டுக்குச்சென்று தன்னுடைய மனைவியை யழைத்துப் பெண்ணை அலங்கரிக்கச் சொன்னான். ஊரார் இந்தச் செய்தியைக்கேட்டு அதிசயம் அடைந்து அங்குகூடினர். ததாகதரோ இருந்தஇடத்திலிருக்காமல் அந்த இடத்தில் தன்னுடையஅடிச்சுவட்டைப் பதித்

துவிட்டு வேறிடம் சென்றனர். பின் பார்ப்பனன் தன் மனைவியோடு பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து தான்கண்ட துறவியைத் தேடினன். அவரைக் காணாது திகைக்கையில் அவருடைய அடிச்சுவட்டைக் கண்டான். சாஸ்திரங்களில் பண்டிதையாகிய அவனுடைய மனைவி இந்த அடிச்சுவட்டையுடையவர் பாசங்கடந்த பரமசாது என்றும், பேராசையுடையவனது அடிச்சுவடு அகலமாகவும், போக்கிரியின் அடிச்சுவடு நிலத்தில் அழுந்தியும், காமாதுரனது சுவடு தெரியாமலும், பாசங்கடந்தவனது சுவடு தெளிவாகவும் இருக்குமென்றுங்கூறினள். அந்தச்சமயத்திலே புத்தரும் அவ்விடம் தோன்றினர். பார்ப்பனன் அவரைக்கண்டு தன்னுடைய பெண்ணை மணந்துகொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அவர் பார்ப்பனனுக்கும் அவனுடைய மனைவிக்கும் நல்லறம் உணர்த்தியதோடு இந்த உடல் பொல்லாப் புன்குரம்பை யென்றும் மலமூத்திரங்கள் நிறைந்ததொரு கூடு என்றும் கூறினர். புத்தரது அறவுரையைக் கேட்ட பார்ப்பனனும் அவனது மனைவியும் தம் மகளை பார்ப்பனனது இளவலிடம் ஒப்புவித்துவிட்டுத் துறவுபூண்டு அருகாஞர்கள்.

மாகண்டியாள் என்ற பெண்ணோ தன்னை மல மூத்திரம் நிறைந்ததொருகூடு என்று சொன்னதற்காகத் ததாகதர்மேல் வன்மங்கொண்டு அவரைத் துன்புறுத்துவதாகத் தீர்மானித்தனள். இவளுடைய சிற்றப்பன் இவளுடைய அழகைக் கண்டு இவள் அரசருக்கே உரியவளென்று தீர்மானித்து, அவளை அலங்கரித்து அரசனை உதயணனிடம் கொண்டு சென்று அவனை மணந்துகொள்ள வேண்டினன். அவளது அழகில் ஈடுபட்ட உதயணன் அவளை மணந்து கொண்டு இராணியாக்கினன்.

இவ்வாறுக உதயணன் தனது மூன்று பட்டமகிஷிக ளோடும் வாழ்ந்து வருகையில் சாமாவதி தனது தோழிகள் மூலமாகப் புத்தரது அறவுரையைக் கேட்டு அவரது அரு ளைப் பெற்றுள். இதனை அறிந்த மாகண்டியாள் புத்தரிடத் துள்ள தனது வன்மத்தைத் தீர்த்துக்கொள்ள இதுதான் சமயமென்று நினைத்தாள். அந்தக் காலத்தில் அரசன் தனதுகாலத்தை வாரம் ஒரு இராணியிடம் கழித்து வந் தான். மாகண்டியாள் அரண்மனையிலிருக்கும்போது அவள் சாமாவதிமேல் இல்லாதபல பொய்க்கோள்களைச் சொன்ன தோடு அவள் துறவிகளுக்குப் பல பண்டங்களையும் அழித் துவிடுவதாக உரையேற்றியிருந்தாள். ஆனுல் உதயணன் அவற்றை வெகுவாக நம்பவில்லை. மாகண்டியாள் ஒரு நல்ல பாம்பைப் பிடித்துக்கொண்டுவரச்செய்து அதனுடைய நச் சுப் பற்களை நீக்கிவிட்டு உதயணனுடைய யாழின் துளைக்குள் செலுத்திப் பூங்கொத்துகளை வைத்து மூடிவைத்திருந்தாள். சாமாவதியின் அரண்மனைக்குச் செல்லுங்காலம் வந்தவுடன் மாகண்டியாள் தான் ஒரு கெட்ட கனவு கண்டதாகவும் அவளுடைய அரண்மனைக்குப் போகவேண்டாமென்றும் உதயணனைத் தடுத்தாள். அந்தச் சொல்லைக் கேளாமல் சாமாவதியினுடைய அந்தப்புரத்துக்கு உதயணன் புறப் படவே மாகண்டியாளும் தானும் உடன் வருவதாகச் சொல்லிக் கூடவே புறப்பட்டுச்சென்றுள். யாழும் உடன் போயிற்று. அங்கு உதயணன் துயிலுகையில் ஒரு வரும் அறியாதபடி யாழிலிருந்த அப்பூங்கொத்தை மாகண் டியாள் நீக்கினுள். நாகம் இரண்டு மூன்றுநாளாக ஆகார மின்றி இருந்ததால் புஸ் என்று கிளம்பிப் படமெடுத்து ஆடி உதயணனுடைய படுக்கையருகிற் சென்று தங்கிற்று. மாகண் டியாள் தன்னுடைய சக்களத்தியான சாமாவதி அரசனைக் கொல்ல ஏற்பாடுசெய்துவிட்டதாகக் கூக்குரலிட்டாள்.

அரசனும் ஆய்ந்தோய்ந்து பாராமல் சாமாவதியின்மேல் வெறுப்புற்று அவளையும் அவளது அடிச்சிகளையும் வரிசையாகநிறுத்தித் தனதுவில்லை வளைத்துக்கூர்த்த அம்பொன்றை விட்டான். சாமாவதி பெரியோரைப் பேணித் ததாகதரை வணங்கிவந்ததாலும் அவள் குற்றமற்றவளானதாலும் விட்ட அம்பு அவள்மேற் படாமல் திரும்பி வந்து உதயணனுடைய மார்பில் தைத்தது. இதனைக் கண்ட உதயணன் சாமாவதி நிரபராதி யென்றெண்ணி அவள் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். அவள் தன்னால் ஆகக்கூடிய தொன்றுமில்லை யென்றுகூறிப் புத்தரையும் சங்கத்தையும் தருமத்தையும் கேட்கும்படி சொன்னாள். அன்று முதல் அவன் புத்த பகவானுடைய சீடரான ஆனந்தரிடம் அறவுரை கேட்டுவந்தான்.

தன் எண்ணம் பலிக்காமற் போனதைக் கண்ட மாகண்டியாள் தனது சிற்றப்பனுக்குச் சொல்லியனுப்பி அவனை வரவழைத்துச் சாமாவதி யந்தப்புரத்துக்குச் சென்று அவளுடைய துணிகளையும் உடுப்பையும் எண்ணெயில் நனைத்துத் தீவைத்து எரித்துவிடும்படி சொன்னாள். அந்தப்படியே அவன் துணிகளை எண்ணெயில் நனைத்துத் தூண்களிலும் மற்ற இடங்களிலும் சுற்றிக் கொண்டிருக்கும்போது சாமாவதியின் சேடிகள் இப்படிச் செய்வதற்குக் காரண மென்னவென்று விசாரித்தனர். அந்தப் பார்ப்பனன் தூண்கள் பழுதாக விருப்பதால் அவற்றைப் பலப்படுத்த வேலை செய்யப்படுகின்றதாகச் சொல்லி அவர்களை அங்கு வராமற் செய்து தாளிட்டு நெருப்புவைத்தான். அந்தப்புரம் நெருப்புப்பற்றி எரிவதைக் கண்ட சாமாவதி இவை கடவுளுடைய செயலென்று கூறிக்கடவுளை த்தியானிக்கும்படி தாதியருக்குக் கூறினாள். இவ்வாறு சாமாவதியும் அவளது உடன்கூட்டமும் ஒருங்கே அழிந்துபோனதைக்கேட்ட உதயணன் அதிக

வருத்தப்பட்டு இவ்வாறு அவர்களைத் தீயிலிட்டது மாகண்டியாள் என்று அவளுடைய வாய்ப்பிறப்பாலே அறிந்தான். உதயணன் அதற்காக மகிழ்வதாகப் பாசாங்குசெய்து மாகண்டியாளை மெச்சுவதாகக் கூறி அவளுடைய உறவினர்களை வரவழைத்து அவர்கள் எல்லோரையும் ஒரு பெருங்குழிவெட்டி அதனிற்றள்ளி மேலே செத்தையைப் போட்டுக் கொளுத்திக் கொன்றான். பெரிய சட்டியில் எண்ணெயை யூற்றி வைத்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி அதனில் மாகண்டியாளுடைய சதையை அறுத்துப்போட்டு வறுத்து அவளைத் தின்னும்படி செய்து சித்திரவதை செய்தான். இவ்வாறாக இருவரும் இறந்தபின் வாசுலதத்தையோடு சுகமாக வாழ்ந்து வந்தான். பின்னர் புத்தரது அறவுரை கேட்டு அருகனானன்.

The B. N. Press, Educational Printers, Madras.

6/9

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

* துரைத்தனத்தார் அங்கீகரித்தவை.

	ரூ.	அ.	பை.
* சோழ மண்டல சதகம்	0	10	0
ஐந்திணை எழுபது	0	4	0
திணைமொழி ஐம்பது	0	4	0
* புறத்திரட்டு முதற்பாகம்	0	6	0
திருவாரூர்ப் பன்மணிமாலை	0	2	0
தசகாரியம்	0	12	0
அன்பர் போற்றிக் கலிவெண்பா	0	3	0
பஞ்சாக்கர மாலை உரையுடன்	0	4	0
மயிலை யமக அந்தாதி	0	4	0
குறுந்தொகை மூலம்	1	0	0
திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்	0	4	0
பிரசாத அகவல் உரையுடன்	0	2	0
குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் 4 பிரதி	1	0	0
பிராசாதத் திரட்டு (Reprint)	0	8	0

வசன நூல்கள்

* பழந் தமிழ்ப் பெருமக்கள் வரலாறு	0	8	0
* சைவ சிகாமணிகள் இருவர்	1	0	0
* தமிழ் நாட்டுத் தக்கோர்	0	2	6
கமலை ஞானப்பிரகாசர்	0	4	0
பெரிபுளூஸ் (யவனர் யாத்திரை)	0	10	0
மார்க்கோபோலோ யாத்திரை	0	8	0

சதாசிவன் பிரதர்ஸ், மயிலாப்பூர், சென்னை.

88